# உதியனின் காயத்ரி

—— புனை S. [illegible]

76

17-6-95

புதுவை

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

அவளால். பாதங்கள் ஜில்லிட்டிருந்தன உஷ்ணம் ஏறிக் கொண்டிருந்த மண்டையின் பளு, தாங்க வலுவிழந்த வரம்புக்குக் கனத்து வருவதாகவே அவளுக்குப் பட்டது. நிமிஷத்துக்கு நிமிஷம், வினாடிக்கு வினாடி, கணத்துக்குக் கணம் அவள் தன்னைத்தானே குனிந்து பார்த்துக் கொண்டாள். அவ்வாறு பார்த்துக் கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஆசையின் நெஞ்சு மகிழ்வின் கண்ணீராகக் கரைந்து மேனியில் வழிந்தது. அந்த உணர்வில், நன்னம்பிக்கையின் துடிப்பைக் கண்டாள் அவள்; அவளால் காது பொருத்திக் கேட்கவும் முடிந்தது. புயல், தென்றல் அவதாரம் எடுக்க எந்நேரமாகும்?

சுயப் பிரக்ஞையை தூண்டில் போட்டு இழுத்தது பெண் மனம். இமை நுனிகளில் சந்திப்பு உண்டாகி, உண்டாக்கிக் கலந்தது. இருட் குகையில் இதுவரை அகப்பட்டுத் திணறிக் கொண்டிருந்ததாக உள்ளொலி பேசியது. பாழ்வெளியின் வெறுமை அவளைப் பற்றியது. தீப்பற்றியது நினைவில். நெஞ்சை வசமாக்குபவளாக நாலா பக்கமும் விழிகளைச் சுழல விட்டாள் அகிலாண்டம். ஊராளும் மாதாவும் உளமாளும் பிதாவும் தனிப்பட்ட போக்கில்-தனித்தன்மை பூண்ட பாவனையில்-அருள் நெறிமுறைகளை முத்திரையாக ஏந்தித் திகழ்ந்த தனிமைப் பண்புடன் கூடிய மகிமையில் திகழ்ந்தன. ஒன்றிய உள்ளத்தோடு, ஒரு முறைக்கு இரு முறையாகப் பார்த்தாள் அவள். விரிக்கப்பட்டிருந்த மாயத்திரை விலக்கப் பட்டதாக எண்ணமிடலானாள். 'தாயே! அம்பிகை!' என்று ஒலியலைகள் உந்திக் கமலத்தைத் தொட்டுப் புறப்பட்டன.

"அ...கி...லா!"

வார்த்தைகள் இடைவெளி கொண்டு கேட்டன.

அகிலாண்டம் திசை திரும்பினாள்.

ஸ்ரீமான் ராமலிங்கம் அடித்துப் போட்ட கோலத்தில் காட்சியளித்தார். மேல் தோல் வெடித்துச் சிதறிக் கோடுகள்

கிறுக்கியிருந்த இதழ்க் கங்கினின்றும் வார்த்தைகள் கிளம்பின. இருந்த இடத்திலிருந்து நகர்ந்து, இன்னும் நெருக்கம் அமைத்துக் குந்தினுள் அவள். மெலிந்து வெளுத்துக் கிடந்த கைகளை ஆதரவுடன் அன்பு சேர்த்துத் தடவிக் கொடுத்தாள். துளி கக்கிய சுடுநீர் மணிகளையும் நாசூக்காகத் தடவி விட்டாள். சுட்ட இடம் குறிப்புச் சொல்லியிருக்க வேண்டும். அவர் உடம்பை அப்படியும் இப்படியும் அசைத்துக் கொண்டார். ஆற்ருமையில் நெடுமூச்சு விளைந்தது. அரும்பாடு பட்டு விழிகளை அசைக்க முயன்ருர் அவர். அரைப்பார்வை நிலை தான்; அதுவும் சிறுபொழுதுதான். மூடிய நயன வட்டங்களில் கண்ணீர் வளைந்தது.

அவளுக்கு நெஞ்சு ஏறி இறங்கியது. மார்பில் படர்ந்திருந்த எலும்பு வரிசையில் ஓர் அழுத்தம் தெரிந்தது. குனிந்தவண்ணம், வலது கை நுனிவிரலை வைத்துத் தடவினுள். மின்னலுணர்வொன்று தேகமெங்கணும் ஊடுருவியது. மயிர்க் கூச்சம் கிளர்ந்தது. 'தெய்வமே' என்று மெய்மறந்த நினைவில் பேசிய அவள், அந்த அருமைப் பொருளை எடுத்துக் கண்களிடைப் பதித்தாள். கொட்டு மேளம் முழங்க, தன் கழுத்தில் மங்கள நாண் ஏறிய அந்தப் பொற்புடைத் தவநாளை அவள் எங்ஙனம் மறப்பாள்?

சுவர்க்கடிகாரம் இருமுறை ஓசை பரப்பிற்று.

அகிலாண்டம் எழுந்து, 'அவுன்ஸ் கிளாசை' எடுத்துக் கழுவினுள். மருந்துக் கலவயை அளவு பார்த்து ஊற்றி எடுத்துச் சென்று, கணவரின் உதடுகளை நீக்கி ஊற்றினுள். செம்பாதி உள்ளுக்குள் சென்றது. வழிந்ததைத் தன்னுடைய பட்டுச் சேலைத் தலைப்பால் துடைத்தாள். திருநீறு மடலினின்றும் துளி விபூதியை எடுத்து, அவர் நெற்றியில் இட்டு, மீதத்தைப் பக்தி கனிந்த பக்குவத்தோடு தன் நெற்றியில் பூசிக் கொண்டாள். அச்சம் கடந்த ஆறுதல் பூத்தது.

அவள் கைளை உதறி நெட்டி முறித்தாள். தூக்கம் நேத்திரங்களில் ஊஞ்சலாடியது. அதைக் கருதாதவள் அவள்.

அமர்ந்திருந்தவள், எழுந்து ஊஞ்சலில் அமர்ந்தாள். 'அந்த நாளிலே நானும் இவரும் இந்த ஊஞ்சலிலே நலுங்கின்போது அமர்ந்து மஞ்சள் நீராடின நிகழ்ச்சி நேற்று நடந்தது மாதிரி அல்லவா தோன்றுகிறது?' சுற்று மதிலைத் தாண்டிக்கொண்டு வந்தது தெருநாயொன்றின் அழுகைச் சத்தம். அவளது மேனி அதிர்ந்தது. அவளையும் அறியாமல், கரங்கள் தொழுதன. வாடைக் காற்று பலத்தது. ஆகவே, ஜன்னலில் நெளிந்த இளநீலத் திரையை இழுத்து மூடினுள். பிறகு, அங்குமிங்குமாக நடைபயின்ருள். கடைக்குட்டிப் பயல் ஆழ்ந்த உறக்கத்திற்குக் 'கப்பம்' செலுத்தியவண்ணம் இருந்தான். கலைந்து கிடந்த போர்வையைச் சரிசெய்தாள். ஸ்டூலில் வைக்கப்பட்டிருந்த பூஞ்செடிப் பாத்திரம் அவளை இடறி விட்டது. நகக்கண் வலித்தது. குனிந்து நிமிர்ந்தாள். அந்தப் புகைப் படத்தையே ஓர் அரைக்கணம் இமைக்காமல் நோக்கினுள். 'கமலாட்சி-கார்த்திகேயன் இணை நீடு வாழ்க!' என்ற வரிகள் பளிச்சிட்டன. "ஆஹா!" என்று வாயை விட்டுச் சொல்லிக் கொண்டாள் அகிலாண்டம். தன்னுடைய பத்து நாளைய வேதனைக் குமைச்சலை நொடிப்போதில் மறந்து போனுள். தனக்கு இனி குறைவேதும் கிடையாது என்ற தைரியம் எழுந்தது. தன்னை மறந்து சிரித்தாள்!

**கோ**டம்பாக்கம் நெடுஞ்சாலை கண் விழித்தது. வைகறையின் துயில் நீக்கம், அந்தச் சாலையின் அமைதி போர்த்த பாதை நெடுகிலும் பிரதிபலித்தது.

கீழே மணிச்சத்தம் கேட்டது. அதற்கு வாய்த்த பின்னணி இசையென இராஜபாளையமும் குரல் கொடுத்தது. இரு குரல்களும் பங்களாவின் கீழ்த்தளத்தைக் கடந்து மாடிப்படி ஏறி வந்தன.

அகிலாண்டம், மாடி வராந்தாக் கைபிடிச் சுவரில் நின்றவாறு, கீழே பார்த்தாள். விளக்குகள் எரிந்தன. வேலைக்காரி சுறுசுறுப்புடன் எழுந்து, பால்பாத்திரத்தை எடுத்துக் கழுவி, தரையில் 'தொப்'பென்று கை தவறிப் போட்டு, பின்னர்

எடுத்துக் கொண்டு அவசர அவசரமாக வெளி வாசலுக்குச் சென்றதைக் கண்ணேட்ட மிட்டாள். மீண்டும் மணிச்சத்தம் தொடர்ந்தது. பால்காரன் சைக்கிளில் பறந்திருக்க வேண்டும்!

இந்த மணி நாதம், காலப்பனி மூட்டத்தில் உருத் தெரியாமல்-உருக்காட்டாமல் தோய்ந்து பதிந்து அழுந்தி விட்ட எத்தனையோ நிகழ்ச்சிகளின் கபால ஓடுகளிலே 'டும், டும்' என்று மோதி எதிரொலி கிளப்பிய விந்தையை-உண்மையை அவள் எங்ஙனம் மறக்கக் கூடும்? ஏன் மறக்க வேண்டும்?

எடுத்த எடுப்பிலேயே சுவை சொட்ட ஆரம்பமாகும் சிறு கதையையொப்ப, சிலரது விட்ட குறை-தொட்ட குறையின் பரிணமிப் பலனுக்கு ஏற்ப, அவர்களுக்கு வாழ்க்கை சுவையுடன் அமைந்து விடுகின்றது. அத்தகையதொரு புண்ணியத்துக்கு, அல்லது பாக்கியத்துக்கு இலக்குப் புள்ளியானவள் தான் அகிலாண்டம். அந்தஸ்தில் உயர்ந்தில்லாமற் போனலும், அழகில் உயர்ந்து நின்ருள் அவள். பேச்சிலும் பார்வையிலும் செய்கையிலும் நேரியமுறை இழைந்தது. உயர்நிலை ஆரம்பப்பள்ளிக் கூடத்தின் உபாத்தியாயர் அவள் தந்தை. தில்லை விளாகத்தில் வேலை. சைவமும் வைணவமும் ஒரே சந்நிதானத்தில் இணைப்புப் பெற்றுத் திகழும் பெருமையைக் கண் குளிரக் கண்டு பேறு பெறவந்த பெரியவர், தம் குறிக் கோளுக்கு வெற்றி காட்டிவிட்டு, அன்றைய இரவுப் பொழுதைக் கழிக்கும் சந்தர்ப்பத்தை அந்த ஆசிரியர் வீட்டில் அடைந்தார். சுற்றி வளைந்து ஒதுங்கிக் கிடந்த சொந்த பந்தப் பாசம் பெரியவர்களின் பேச்சில் தலைகாட்டியது. யதேச்சையாகத் தலைகாட்டிஞள் அகிலாண்டம். பாவாடையும் தாவணியுமாக ஓடி மறைந்தாள் அவள். ஆனல் அவளது கண்களில் தெரிந்த தெளிந்த பார்வையும், இதழ்களில் மடலவிழ்ந்த தூய முறுவலும் ஓடி மறைந்திடவில்லை. பெரியவர் தம் ஒரே செல்வக்குமரன் ராமலிங்கத்துக்கு அகிலாண்டத்தைப் பெண் கொள்ளப் பேச்சைத் துவக்கிஞர். 'பெரிய

லட்சாதிபதியான நீங்க எங்கே? பரம ஏழையான நான் எங்கே?" என்ற வாத்தியாரின் பேச்சை மூட்டை கட்டிவிட்டு, ஜாதக ஏட்டின் மூட்டையை அவிழ்த்தார். ஜாதகங்கள் பொருத்தம் தாங்கின. "எல்லாம் அம்மையப்பன் காட்டும் மெய்யன்புதான்; என் செல்வமகள் பூர்வஜன்மத்தில் பெரும் புண்ணியம் செய்திருக்க வேண்டும்!" என்று ஆனந்தக் கண்ணீர் மல்கினுர் அவர்.

பெரியவர் பட்டணத்துக்கு விடை பெற்றுப் போன நான்காம் நாள் வாசலில் சைக்கிள் மணிச் சத்தம் கேட்டு, ஓட்டமாக ஓடி வந்தாள் அகிலாண்டம். தந்திச் சேவகன் நின்ருன். கனவுகளை விளையாட விட்ட கயல் விழிகள் கலவரமடைந்தன; சிந்தூரம் தூவிய கன்னங்களில் கறுமையின் நிழல் படர்ந்தது. பயந்துபோனுள் பாவை. கடைசியில், தந்தியைக் கையொப்பம் செய்து வாங்கினுள்; உறை கழன்றது. வாசித்தாள். ஒரே கணத்தில் ஆனந்தச் சிரிப்பு கும்மாளமிட்டது. "என் மகன் சம்மதம். அடுத்த மாசம் ஐந்தாம் தேதி கல்யாணம். பிற நேரில்" என்றது தந்தி.

"அம்மா! அம்மா!"

அகிலாண்டம் காலத்தின் நடந்த கதையை துண்டுபட நிறுத்திவிட்டு விரைந்தாள். படுக்கையில் உட்கார்ந்து கண்களைக் கசக்கிக் கொண்டிருந்தான் குமார். "அப்பா ராத்திரி பேசினுங்களா, அம்மா?" என்று ஆதுரத்துடன் கேட்டான். அவள் மறுமொழி புகலவில்லை. 'இல்லை' என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தாள்.

பத்து நாட்களுக்கு முந்தி ராமலிங்கம் எவ்வளவு ஆரோக்கியத்துடன் உலவினுர்? முகத்தில் தெளிவும், கண்களில் களிப்பும், மேனியில் மினு மினுப்பும் கொண்டு விளங்கினுரே அவர்? மயிலாப்பூரிலே அவருக்குத் தொழில். பெரிய ஜவுளிக்கடை. 'அகிலாண்டம் ஸில்க் எம்போரியம்' என்ருல், லஸ் முனையில் வெகு பிரமாதம். கடை மூடியானதும் சாவிக்

கொத்துடன் வந்து காரை 'போர்டிகோ'வில் நிறுத்தி விட்டு, "அகிலா!" என்று குரல் கொடுத்துக்கொண்டே மாடிப்படிகளைக் கடந்தவர், இருந்திருந்தாற் போல மயக்கமடைந்து சுருண்டு விழுந்தார். எஞ்சி யிருந்த படிகளில் அவரது மேனி ரத்தத் துளிகளைப் பதித்தது. தொலைபேசி இயங்கியது; மாறு பட்ட எண்கள் மாறி மாறித் திருப்பப்பட்டன. நாடிக் குழல்கள் சோதித்தன. வகை வகையான மருந்துகளும் புதுக் கண்டுபிடிப்பில் வந்த ஊசிகளும் ஒத்துழைத்தன. மூச்சு இழை பிரிந்தது. இந்தப் பத்து நாட்களாகப் பேச்சில்லை! என்றாலும், படிப்படியாகத் தெளிவு காணப்பட்டது. அகிலாண்டத்திற்கு உயிர் வந்தது. 'விள்ளற் கறியவளின்' கழலடிகளில் தலை பதித்துக்கிடைந்தாள்.

ஒரு தவணை, ராமலிங்கம் தொழில் விஷயமாகக் கோயம் புத்தூர் ஜில்லாவுக்குப் பயணமானார். புறப்பட்டுப் போன ஆறுவது நாள், பங்களா வாசலில் தந்திச் சேவகன் மணி யடித்து நின்றான். அகிலாண்டத்திற்கு கால்கள் பூமியில் பாவவில்லை. தெய்வம் ஈந்த தெம்புடன், சேதியைப் பிரித் தாள். 'இங்கே மகனும் மாப்பிள்ளையும் சுகம். நான் நாளை இரவு புறப்பட உத்தேசம்' என்று கண்டிருந்தது.

மகனுக்கு முகம் கழுவினாள் அவள். புது வென்னீரில் ஹார்லிக்ஸ் கலந்து கோப்பையில் இட்டு நீட்டினாள். பையன் தந்தையின் கட்டிலேயே கசிந்த கண்களால்நோக்கியவண்ணம் ஹார்லிக்ஸ் கலவையைக் குடித்தான். "நான் பெரியவனானதும் ரொம்பப் புத்திசாலியாயிருப்பேன்னு அப்பா அடிக்கடி சொல்லுவாங்க. இல்லையா அம்மா?...நான் பெரியவன் ஆகிறதைப் பார்க்கு மட்டும் அப்பா நல்லபடியா இருப்பாங்க... ஏம்மா, இருப்பாங்களில்லியா?" என்றான் அவன்.

தாலியைக் கண்களில் ஒற்றிக்கொண்ட அகிலாண்டம், "நிச்சயம் நல்லபடியா இருப்பாங்கடா, கண்ணு!" என்றாள். நம்பிக்கையில் பிறக்கக்கூடிய சொற்களுக்குத்தான் எத்துணை அழுத்தம்!

குமாருக்கு ஏக மகிழ்வு. கழுத்துச்சங்கிலியை சட்டைக்கு வெளியே அழகாகப் போட்டான். அப்பாவின் படுக்கைக்குச் சென்முன். கன்னத்தைத் தடவினுன். 'அப்பா!' என்முன். ராமலிங்கம் பைய பைய விழிகளைத் திறக்க எத்தனம் செய்தார். தவமிருந்து பெற்ற குலக் கொழுந்தின் நெற்றியைத் தடவ கையை உயர்த்திஞர். அது நழுவி விழுந்தது. அவர் கண்கள் கலங்கின. குமார் தந்தையின் கண்ணீரைத் துடைத்தான். "நீங்க எதுக்கும் கவலைப்படாதிங்க அப்பா! அடுத்த மாசம் நீங்க சொன்ன மாதிரி உங்களுக்கு அறுபதுக்கு அறுபது விசேஷம் தடபுடலா நடக்கும், அப்பா!...டாக்டர் தைரியம் சொல்லியிருக்காரக்கும். ஆமா, அப்பா!... வேணும்ஞு, அம்மாவுக்கு உதவியா நம்ம அக்காவை வரவழைச்சிக்க லாமா?"-கேள்வியை பவ்யமாகக் கேட்டான் குமார்.

ராமலிங்கம் தம் மனையாட்டியை நோக்கி விரலை அசைத்தார். பிறகு, விரலசைவில் எழுதுவது போன்ற ஒரு பாவனையைக் காண்பித்தார். அவளுக்குப் புரிந்துவிட்டது. மகள் கமலாட்சி எல்லோரது நலம் கோரி எழுதியிருந்த தபாலுக்குப் பதில் அனுப்பிய விவரத்தை அவர் அறிய ஆவல் காட்டிஞர். அகிலாண்டம் நெருங்கி உட்கார்ந்தாள். "உங்களுக்கு உடம்புக்கு முடியாமல் இருக்கிறதைப்பத்தி கமலாட்சிக்கு எழுதலை. பாவம், அது பொறுக்காது. நாளைக்கு எழுதுறேன். ஒருதரம் இங்கே வந்திட்டுப் போகச் சொல்லலாம்னு இருக்கேனுங்க!" என்று தெரிவித்தாள்.

கைகளை உயர்த்தி 'சரி' சொன்ஞர் ராமலிங்கம். உதயத்தின் மலர்ச்சியில் தெறித்த கதிர்கள் அவரது முகத்தில் அணைந்தன.

உள்ளே சென்று மீண்டாள் அகிலாண்டம். மஞ்சளும் திலகமும் பூத்துணுக்கும் பொலிவூட்டின.

டாக்டர் வந்தார்!

பொங்கி வந்த இருமலை முன்றானையால் கட்டுப்படுத்திய வாறு, அகிலாண்டம் அக்கடிதத்தை மீண்டும் படித்தாள்.

“செல்வமகள் சௌபாக்கியவதி கமலாட்சிக்கு ஆசீர் வாதம்.

உன் தகப்பனார் அவர்களுக்குப் போன வாரம் தொட்டு உடம்புக்குச் சுகமில்லை. இப்போதுதான் கொஞ்சம் பேசக் கொள்ள இருக்கிறார்கள். கஞ்சிதான் ஆகாரம். சதா உன் நினைப்பாகவும் மாப்பிள்ளையின் நினைப்பாகவும் இருக்கிறார் கள். ஒருமுறை நீ குடும்பத்தோடு இங்கு வந்து செல்வதுவே உசிதம். எல்லோருக்கும் அது ஆறுதலாக இருக்கக்கூடும். நீ, குழந்தை, மாப்பிள்ளை அவர்கள் ஆகியவர்களின் க்ஷேமலாபத் துக்குப் பதில் போடவும், தம்பி குமாருக்குப் பாப்பாவின் முகம் அடிக்கடி கனவில் வருகிறதாம். உன் அப்பா விரை வாகவே நல்ல சுகம் அடைந்து விடுவார்கள். ஆண்டவன் அனுக்கிரகம் நமக்கு எப்போதும் சித்திக்கும்.

இப்படிக்கு,
உன் தாயார்,
அகிலாண்டம் அம்மாள்.”

எழுதிய கடிதத்தை கொண்டவரிடம் நீட்டினாள் அவள்.

படித்துப் பார்த்தார் ராமலிங்கம். “ஆல் ரைட்!” என்றார்.

ஸ்கூலுக்குப் போன குமாரிடம் கொடுத்து அதைத் தபாலில் சேர்க்கச் சொன்னாள் அகிலாண்டம். சலனம் மறைந்து, சாந்தி பிறந்தது.

மூடப்பட்ட கோவிலின் உள்ளே மூடப்படாமல் நிலவும் இறைமைச்சக்தியென, காலம் எனும் கனவின் நிழல் நிச் சலனமாய் நீண்டது!

* * *

“லெட்டரைப் பெட்டியிலே போட்டுப்பிட்டேன், அம்மா!”

மதிய உணவுக்கு வந்த குமார் இப்படிச் சொல்லி வாய் மூடவில்லை.

வாசலில் சைக்கிள் மணிச்சத்தம் இடித்தது.

தந்திச் சேவகன்!

இடியால் தாகுண்டவள் ஆனுள் அகிலாண்டம்.

"அத்தானுக்கு உடல்நிலை கவலைக்கிடமாயிருக்கிறது! காமலாட்சி."

'தெய்வமே! இது என்ன சோதனை?!' என்று விம்மினுள் அவள். நாடி நரம்பகள் அனைத்தும் இற்றுச் செயல்தப்பிப் போய் விட்டதென அவளுக்குத் தோன்றியது. "என்னம்மா அது?" என்று துளைத்தான் குமார். அவள் என்ன சொல்வாள், பாவம்! பதி இருக்கும் உடற்கேட்டில், இந்தத் துயர்ச் செய்தியை வெளியிடலாகாது என்பதாக முடிவு கட்டினுள். பூஜை அறைக்குச் சென்று திரும்பினுள் அவள். வழி கேட்ட விழி வெள்ளத்துக்கு வழி சொன்னுள்.

அப்போது வாசலில் காரொன்று வந்து நின்றது.

பிரக்ஞை இழந்த நிலையில் காணப்பட்டான் கார்த்திகேயன்!

"அம்மா! தெய்வம் என்னோட குங்குமத்தைப் பறிச்சுக்கிட்டு, நிரந்தரமா நரகத்திலே தள்ளிப்பிடுமா, அம்மா? என்னமோ, எனக்கு ஒரே பயமாயிருக்குதே அம்மா?... அத்தான் எனக்கு கிடைக்காமப் போனு, அப்புறம் நானும் குழந்தையும் என்னம்மா செய்வோம்!...ஐயையோ! கடவுளே...!"

எரிமலையின் வெடிப்பு வாயில் கால்பதித்து நின்முள் அகிலாண்டாம். அன்பு மகளின் அழுகை அவளுடைய பெற்ற மணி வயிற்றில் இடியாக இடித்தது. அவள்பேசிய பேச்சுக்கள் அவளது கண்களைத் தோண்டி யெடுத்தன.

"கமலாட்சி! அப்படி யெல்லாம் கெட்ட பேச்சை மனசாலெ கூட நினைக்காதே அம்மா! நம்பினவங்களைத் தெய்வம் சோதிச்சாலும், கடைசி முடிவு நமக்குச் சாதகமாவே இருக்கும் கமலாட்சி!...உன் அப்பாவுடைய மிதமிஞ்சின சீக்கைப்பத்தி உனக்குத் தெருவிச்சா, நீ புழுவாத்துடி துடிச்சுப்போவியேன்னு, இதுநாள் பரியந்தம் மறைச்சேன். கடைசீலே இன்னிக்குக் காலம்பறத் தான் கடுதாசி போட்டேன். இடிக்கு மேல் இடியாவரச் செஞ்சு இப்படி நம்மளை பகவான் சோதிக்கிறுரு! நாம அற்பங்க!...தேவியோ விளையாட்டுக்கு ஈடு கொடுத்து நிற்க நம்மாலே முடியுமா? எல்லாம் தாயோட கிருபை தான்!...நீ வாம்மா, சாப்பிட!...டாக்டர் சொன்னதை நீ கேட்கலையா? எல்லாம் சரியாகிப் போயிடும். சமயம் புரிஞ்சு மாப்பிள்ளையை நீ கொண்டாந்ததே பெரிய சமர்த்துத்தான்!...நீ வாம்மா!"

தொண்டைக் குழியில் நிரம்பி வழிந்த பாசத்தின் சுழிப்பில் தோய்ந்தெழுந்த ஆறுதல் மொழிகள் மகளுக்கு மட்டுமே கேட்கும் அளவுக்குச் சன்னமாக ஒலித்தன. புதல்வியின் கண்களைத் துடைத்தாள். இரண்டொரு நீர் மணிகள் சிதறி, பாலமுதம் உண்ட குழவியின் நெற்றி மேட்டில் விழுந்தன. அகிலாண்டம் மகளின் கரம்பற்றிக் கூப்பிட்டபோது, கமலாட்சியின் நோக்கல் தன் ஆருயிர்க் கணவரின் கட்டிலில் குறிப்பாய்ந்திருக்கக் கண்டாள். 'அம்மா இவர் ரொம்ப ரொம்பத் தங்கமானவர். இவர் கையினுலே எனக்குத் தாலிபாக்கியம் கிடைக்கிறதுக்கு நான் கொடுத்து வச்சிருக்க வேணும் அம்மா! மெய்தான் அம்மா; என்று கமலாட்சி திருமணமான புதிதில் மனம் நிறைந்து. சொன்ன நடப்புக்கள் சிலையோடின. 'ஈஸ்வரா! மாப்பிள்ளையைக் காப்பாற்று. என் ஒரே மகளின் தாலியைக் காத்துக் கொடு. அம்பிகே.! அங்க அசைவு துளியும் இன்றி, கட்டையைப்போலக் கிடந்த மாப்பிள்ளையைக் கண்ட அவளுக்கு உலகம் பாழ் வெளியாய்விட்டதைப் போன்று ஓர் எண்ணம் தோன்றியது. விஞடிக்கு விஞடி

பூஜைக்கூடமே சதமென்று தவம் கிடந்தது அவள் தாய்மனம். 'ஒரு பக்கம் என் புருஷன் சாகப் பிழைக்கக் கிடக்கிறார். குணமடைந்துவந்த நோய் திரும்பியிருச்சிதே!... இன்னொரு பக்கம் எங்க மாப்பிள்ளை உயிருக்கு மன்றாடிக் கிட்டுக் கிடக்கிறாங்க என் தாலியும் என் மகள் தாலியும் சோதனைக் கூடத்திலே ஊசலாடிக்கிட்டு இருக்கு!... இந்த வேத விதியை யார்கிட்டே போய் நான் அழு வேன்? எனையாளும் மஹேஸ்வரியே!...அம்மா அகிலாண் டேஸ்வரியே!...எங்க ரெண்டு பேர் தாலி பாக்யத்தையும் கட்டிக்காத்துத் தா அம்மா!...

ஊதுவத்தியின் சுகந்தம் புகைச்சுருள் வடிவமாக வெளியேறிக் கொண்டிருந்தது. ஊதுவர்த்திக் குழலின் பாதத்தடியில் சாம்பல் துகள்கள் பரவியிருந்தன.

அகிலாண்டாம் திரும்பினாள். கமலாட்சி கை தொழுத வண்ணம் கிடந்தாள். வாய்விட்டுச் செருமினாள். மாப் பிள்ளையைத் தூக்கி வந்து கிடத்திய நேரத்தில் கண்மலர்ந்த ராமலிங்கம், "ஐயையோ, மாப்பிள்ளை!" என்று கூச்சல் போட்டு மயக்கமுற்ற சம்பவம் அவளுள் கண்கட்டு வித்தை காட்டியதோ?

அந்தப் படத்தில் அவள் பார்வை ஒன்றியது. எம் பிராணின் தாள்களில் அடைக் கலம் புகுந்த காரணத்தால் வந்த காலன் தன் ஆருயிரை வவ்விய கோலம் இருந்தது. இனம் புரியாத-ஆனால் மகத்தான தொரு சாதம் நெஞ்சில் குடிகொண்டிருப்பதை மட்டும் அவளால் அனுமானம்செய்து கொள்ள முடிந்தது.

தூளியில் தூங்கியது குழந்தை.

குமார் தூளியின் தாம்புக் கயிற்றைப் பிடித்து ஆட்டிக் கொண்டேயிருந்தான்.

அந்திமகளின் செம்பஞ்சுக் குழம்பிட்ட பாதங்கள் லயசுத்தத்துடன், தாள அமைப்புத் தவறாத பாங்கில் மண் புழுதியில் பதிந்து நடை பயின்றன.

இரணிய வேளை.

பெற்றவளின் அன்புப்பிடி மகளது வைராக்கியத்தைத் தளர்த்தியது. வட்டிச் சோற்றில் கால்வாசி காலியானது. "நாங்க வந்த வேளை நல்லபடியா குணமாகிக் கிட்டு வந்து அப்பாவையும் மறுபடி படுக்கையிலே விழச் செஞ்சிருச்சுது!" என்று கேவினாள்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லேம்மா;...நீ கொஞ்ச நேரம் படுத்து எழுந்திரு. சவலைப் பிள்ளைக்காரி!..."

திடுதிப்பென்று, பயங்கரக் கூச்சல் கேட்டது.

அகிலாண்டமும் கமலாட்சியும் திடுக்கிட்டுத் திரும்பினார்கள்.

கார்த்திகேயன் கையையும் காலையும் உதறிக் கொண்டு கத்தினார்; கதறினார்!

தொலைபேசியும் காரும் சுறுசுறுப்புப் பெற்றன.

கமலாட்சி கண்ணோடு கண் பொருத்தவில்லை. உட்குழிந்திருந்த கண்கள் செஞ்சாந்தின் நிறம் காட்டின. அவிழ்ந்து விழுந்திருந்த கூந்தல் கற்றைகள் காற்றில் சுழிந்தன. கதம்பச்சரத்தில் மிஞ்சியிருந்தது ஒரே ஒரு கனகாம்பரம் மட்டுமே. நெற்றிப் பொட்டு பளிச்சென்றிருந்தது. அழுத குழந்தையைத் தட்டிக் கொடுத்துத் தூங்கப் பண்ணினாள். கணவரையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். மார்பகம் எம்பி எம்பித் தணிந்தது. புருஷனின் மேனிப் போர்வையைச் செம்மைச் செய்யக் குனிந்தாள். போர்வையினுள் பதுங்கிக் கிடந்த இதயத்தைத் தொட்டது அவளது தங்கத்தாலிக் குண்டு. கண்களில் வைத்துத் தொழுதாள். அவளது விழிகளிலேதானே கார்த்திகேயன் வீற்றிருந்தான்! அச்சம் தரும்படியாக, மூச்சு முட்டித் திணறும் சத்தம் கேட்டது, அவள் உடம்பு புல்லரித்தது.

ஆந்தைக் குரல் தாவி வந்தது.

கமலாட்சிக்கு மனத்தை என்னவோ செய்தது. சிறு குழந்தை போல அழுதாள். தாயைப் பரிவுடன் நோக்கினாள். அகிலாண்டாம் புகைச்சல் இருமலைக் கக்கிக் கொண்டிருந்தாள். சத்தம் வெளி வராமல், துணியைத் திணித்தாள். நேத்திரங்கள் பொங்கின.

நட்ட நடு நிசி.

"நீ தூங்கு கமலாட்சி...!"

"ஊஹூம்! நீ தூங்கு!"

"எனக்கென்ன கண்ணு! நீ சின்னஞ் சிறுசு. தூங்கம்மா சொன்னாக் கேட்டாதானே?"

"முடியாது, அம்மா!"

ஹாலில் இருந்த மேஜைகள் இரண்டிலும் மருந்துக் கோப்பைகள் தயாராக இருந்தன. மூலைக் கொன்றாகப் போடப்பட்டிருந்த இரண்டு கட்டில்களுக்கும் ஊடாக இருந்த பஞ்சு மெத்தை சோபாவில் டாக்டர் சாய்திருந்தார். எதிரே இருந்த பெஞ்சியில் நர்ஸ் குந்தியிருந்தாள்.

காலக் குழந்தை நடைவண்டி ஓட்டி விளையாடிக் கொண்டிருந்தது.

தாயும் மகளும் ஒருவருக்கொருவர் ஆதரவாக அமர்ந்து, ஒருத்தியின் முகத்தை இன்னொருத்தி பரிதாபமாகப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தார்கள்.

அப்போது, புதிய கூக்குரல் ஒன்று முழங்கியது.

"ஆண்டவனே!...என் உயிரை நீ எடுத்துக்கொள். என் மாப்பிள்ளையைக் கொண்டு சென்றுவிடாதே. அவரைக் காப்பாற்று! என் ஒரே அருமை மகளின் மாங்கல்யத்தைக் காத்துத் தா அப்பனே!"

மனம்போட்ட புடத்தினின்றும் கனன்று எழுந்த சொக்கத் தங்கச் சிதறல்களா அவ்வார்த்தைகள்...?

ஆராதனைக் கூடத்தில் மண்டியிட்டு வணங்கிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தார் ராமலிங்கம்.

ஓடினாள் அகிலாண்டம். 'அகிலா! நிஜமாகவே நான் அதிர்ஷ்டம் செஞ்சவன்தான். உன்னை மாதிரி மேனி அழகும் உள்ளத்தழகும் கொண்டவ எனக்குப் பெண்சாதியாக வாய்க்கிறதென்பது லேசுபட்ட காரியமா, என்ன? ஆயுள் முச்சூடுமே உன் பக்கத்திலேயே இருக்க வேணும்னு நினைச்சுக் கிட்டிருக்கேனாக்கும்!' என்று முதல் இரவில்மொழிந்த சொற்கள் அவளுள் பண்பாடின. ஊதுவர்த்திச் சாம்பலை மிதித்தவள், குனிந்துத் திரும்பினாள். அந்தச் சாம்பல் காட்டிய வாழ்வின் தத்துவத்தை ஜீரணிக்க முயன்றவளாக, ஓடிச் சென்று தன் கணவரைத் தூக்கி மடியில் கிடத்திக் கொண்டாள். தாலியைக் கையில் எடுத்தாள் அவள். குனிந்த வேளையில், தாலியில் தன்னையே, தன் கணவரையோ காணவில்லை. அவள்—காண முடியவில்லை அவளால்! தன் மகளையே தரிசித்தாள்! "அப்பா!...அப்பா!" என்று விம்மிப் பொருமினாள் கமலாட்சி. ராமலிங்கம் கண்ணீரைப் பெருக்கியவாறு, நகைபூத்த வதனத்தோடு காணப்பட்டார். உயிர்த் துணையின் விழிகளைத் துடைத்தார். ஊதுவர்த்தியின் உயிர்ப்புள்ள வாசனை மிதந்து வந்தது!

மறுமுறையும் கார்த்திகேயன் அச்சுறுத்தும் ஒலியைக் கூட்டினார். அகிலாண்டத்தை முந்திக்கொண்டு ஓடிப்பாய்ந்தாள் அவள் புத்திரி. அகிலாண்டம் தன் கணவரைப் படுக்கையில் கிடத்திவிட்டு விரைந்தாள்.

டாக்டர் நாடி பார்த்தார். ஊசி போட்டார். மருந்து கொடுத்தார்.

அடுத்த ஐந்தாவது நிமிஷம், மாடிப்படிகளில் யாரோ உருண்டு விழும் அரவம் கேட்டது.

''ஐயோ!...அத்தான்!''

அலறிக் கதறினள் அகிலாண்டம்.

''அப்பா!...அப்பா!''

கமலாட்சி துடித்தாள்; குமார் புரண்டான்!

அகிலாண்டம் வைத்த கண் வாங்காமல் டாக்டரின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

'ஆண்டவனே!...என் தாலியைக் காப்பாற்றித்தா!...' என்று அகிலாண்டத்தின் உள்மனம் வேண்டியது.

ரத்தத் திவலைகளுக்கு மத்தியில் கிடந்த ராமலிங்கம் கண்களை மூடி மூடித் திறந்தார். அவரது உதடுகள், ''மாப்பிள்ளே...மாப்பிள்ளே!...'' என்று முணுமுணுத்தன.

'என் புருஷன் பிழைச்சிட்டாங்க!'

அகிலாண்டம் தன் கணவரை அண்டினள்.

''ஐயோ அப்பா!...அம்மா!...என்னை ஏமாத்திட்டாங்களே என் அத்தான்!...'' என்று கூக்குரல் எழுப்பினள் கமலாட்சி.

சித்தம் பேதலித்தவளைப் போன்று விழித்தாள் அகிலாண்டம். 'நான் பாவி!...' என்று கதறிக் கதறி, தன் மார்பில் ஓங்கி ஓங்கி அடித்துக் கொண்டாள் அவள்!

ஆனல்—

நித்திய நிருத்தியக் கூத்தின் நியதிக் கோட்டுக்குள்ளே அகப்பட்டு, ஆனல் சுயநலம்-பாசம் ஆகிய தளைகட்கு அகப் படாமல், தன் போக்கில்-தன் இஷ்டத்தில்-தன் லயிப்பில் இயங்கிக் கொண்டுதான் இருந்தது அந்தப் புண்ணிய பூமி!

# வெறும் சித்திரங்கள்

சோமையாவுக்குப் பசி!

பசி வந்திடப் பத்தும் பறந்துவிடும் என்பார்கள்.

ஆனால், அவனுக்குப் பசி வந்ததென்னவோ உண்மை தான்; ஆனால் எதுவுமே பறந்து விடவில்லையே!

ஆடுகல்லில் மாவு நிரம்பி வழிந்தது.

அவன் முதுகை நிமிர்த்தி உட்கார்ந்தவாறு, நெடு மூச்சை நெட்டித் தள்ளினான். ஆற்றாமை ஆமையாக நகர்ந்தது. 'பசியினாலே வாடி வதங்கவேணும்னு தான் என் தலையிலே விதிச்சிருக்கும் போலே!'—பசிதான் கண்ணின் நீராக உருகி வழிகிறதோ?

"டே பொடியா! வேலை நடக்குதாடா?"

"ஓ, நடக்குதுங்க, அண்ணாச்சி!"

சரக்குமாஸ்டர் தோளில் கிடந்த கந்தைக் கிழிசல் நழுவு வதைக்கூட பொருட்படுத்தாமல், அருகருகாக இருந்த பித்தளை அடுக்குச் சட்டிகள் இரண்டையும் கண்களால் அளந் தார். அளந்ததும், முகத்தைச் சுளித்தார்.

“கோழி கூப்பிட நீ வந்தே! இல்லியாடா?” என்று விசாரணை செய்தார்.

“இல்லீங்க, கோழி கூப்பிடாமலே வந்தேனுங்களே!” என்றான் சோமையா, கையில் விழிபிதுங்கி வழிந்த தோசை மாவை நோட்டம் பதித்தபடி.

‘ஓ, தமாஷா பண்றீயா? பலே பாண்டியா?”

“எம் பேரு சோமையனுங்க, அண்ணாச்சி!”

‘ஹி, ஹி’ என்று அதிர்வேட்டுச் சிரிப்பை சட்டம் போட்டு அடக்கின மாதிரி அடக்கிவிட்டு, சிறுவனை ஏறிட்டு நோக்கினார். “ஏய், அழுதியாடா தம்பி?” என்று நெகிழ்ச்சி யுடன் கேட்டார்.

வெளிறிய உதடுகள் துடிக்க, அந்தத் துடிப்பால் இழை பாவிய அரைச்சிரிப்போடு, “ஊகூம், நீங்க இருக்கிறப்ப நான் எதுங்குங்க அழப்போறேன், அண்ணாச்சி?” என்றான் சோமையா.

சரக்கு மாஸ்டரின் நெஞ்சை அவன் பதில் தொட்டிருக்க வேண்டும். “தம்பி, இவ்வளவு நாழிகைக்கு நீ ரெண்டே ரெண்டு கல்லு மாவுதான் அரைச்சிருக்கிறே! இன்னும் மூணு கல் அரிசிக்கு மிச்சம் இருக்குதேப்பா?...மணி பத்து அடிச்சிச்சோ இல்லையோ, கொண்டா தோசை — வறுத்த கறி அப்படின்னு தலையைச் சுத்திக்கிட்டு வந்திடுவானுகளே வாடிக்கை ஆளுங்க!...ம்...ஜல்தியா மாவை ஆட்டி முடி! நீ சுறுசுறுப்பா இருந்தால்தான், முதலாளி கல்லாவுக்கு வந்தடியும் உன்னைப்பத்தி நான் ஷட்ராங்கா சிபாரிசு பண்ண முடியுமாக்கும்!” என்றார் கண்டிப்புக் குரலிலே.

பசியை மறந்திட்ட வைராக்கியமும் கடமை உணர்வும் துலங்க, “இதோ, ஒரு நொடியிலே அரைச்சுத் தள்ளிப் பிட்றேனுங்க, அண்ணாச்சி!” என்று சொல்லிக் கொண்டே, ‘கட கட’ வென்று ஆடுகல் குளவியைச் சுற்றத் தொடங்கி விட்டான் அவன்.

'பாவம்!'—தன்னிரக்கம் சுழிக்க அங்கிருந்து நகர்ந்த சரக்கு மாஸ்டர், என்னவோ நினைத்துக் கொண்டவர் மாதிரி முன்னே நடந்து வந்து, "ஏண்டா, காலை ஆகாரம் சாப்பிட்டாச்சுதானே?" என்று விசாரித்தார்.

"இல்லீங்க!"

"யாரும் தரலையா?"

"யாரும் தரலீங்க!"

"யார் கிட்டவும் கேட்கலையா நீ?"

"ஊகூம்!"

"கேட்கிறதுதானே, தம்பி?"

"கொடுத்தா வச்சிருக்கேனுங்க, கேட்கிறதுக்கு!"

"அட பரிதாபமே!...சரி, சரி. கையை அலம்பிட்டு வா. நான் தாரேன் பலகாரம். பசிக்குச் சாப்பிட்டால்தானே தெம்போட வேலை பார்க்க ஏலும்! பாவம்! உன்னை மாதிரி நாதியத்தவர்களுக்குத் தெய்வம்தான் துணை!" என்றார் சரக்கு மாஸ்டர்.

"நாதியத்த எனக்கு நீங்கதானுங்க அண்ணாச்சி துணை!" சிந்திச் சிதறிய கண்ணீர் முத்தங்கள் கிழிசல் சட்டைப் பையில் சரணடைந்தன. சட்டைப் பையை நடுங்கும் விரல்களால் ஒருதரம் தொட்டுத் தடவிப் பார்த்துக்கொண்டான் மாஸ்டர் சோமையா. அவனுடைய இடது கன்னத்து மச்சம் எவ்வளவு அழகாக மின்னுகிறது!...

**தோ**சைக் கல்லில் டால்டாவுக்கு மத்தியில் வெந்து கொண்டிருந்த ஸ்பெஷல் மாவுத் தோசையின் சுவையான நெடியை அனுபவிக்க சோமையாவுக்கு அதுவா நேரம்?

'அண்ணா சிற்றுண்டி நிலைய'த்தின் ஏகபோக உரிமையாளரான மூக்கையாத் தேவர் விபூதிப் பட்டைகள் புடைசூழ,

அடுப்பங்கரையை மேற்பார்வையிட வந்தபோது, ஒரு சிட்டிகைப் பொடியை உறிஞ்சினர்.

பொடியின் நெடி பொடியனைத் தும்மல் போட வைத்து விட்டது.

தேவர் திரும்பிப் பார்த்தார்.

"முதலாளி, நான் இன்னிக்குக் காலம்பற வேலைக்குச் சேர்த்த புதுப்பொடியன் இவன்தான்!" என்று கூறினர் சரக்கு மாஸ்டர்.

"ஓஹோ!" என்றபடி, கைகூப்பி வணக்கம் தெரிவித்த அந்தச் சிறுவனை ஏற இறங்கப் பார்வையிட்டார் முதலாளி. சிறுவனின் பால்வழியும் முகத்தையும் அந்த முகத்தில் அழகானதோர் ஒளிப்புள்ளியாகத் திகழ்ந்து பொலிந்த மச்சத்தையும் ஊடுருவினர். இனம் புரியாத பாசத்தின் நெகிழ்வில் கட்டுண்டவர்போல் ஒரு கணம் மெய்ம்மறந்து தவித்தார் அவர். பிறகு, சுயப்பிரக்ஞையை மீட்டுக் கொண்டு, "ஏண்டா, உனக்குச் சொந்த ஊர் எது?" என்று வினவினர் தேவர்.

"எல்லாமே எனக்குச் சொந்த ஊர்தானுங்க. ஆஞ், இப்போதைக்கு இந்த ஆவணத்தாங் கோட்டைதானுங்க எசமான் எனக்குச் சொந்த ஊர்!"

தேவரின் புருவங்கள் மேலேறின. "ஓஹோ!" என்று புன்னகை செய்தார். "ம்...உன் தாய் தகப்பன்?"

பிஞ்சு நெஞ்சு தத்தளித்திருக்க வேண்டும். "இப் போதைக்கு நீங்கதானுங்க எனக்கு அம்மையப்பன், முதலாளி" என்று விடை மொழிந்தான்.

"என்ன?" என்று அதிர்ந்தார் தேநீர்க் கடையின் சொந்தக்காரர்.

"என்னைப் பெற்ற ஆயி அப்பன் யார் என்கிற ரகசியத்தைத் தெரிஞ்சுக்கக்கூட கொடுத்து வைக்காத பாவியாகிட்ட நாதியத்த அனுதையான எனக்கு, மனசு இரங்குகிற நீங்க தானுங்களே எனக்கு ஆயியும் அப்பனும்!"

தேவரின் விழிகள் கலங்கின. 'ஐயோ பாவம்!' என்று அனுதாபப்படலானுர். "உனக்கு என்ன வேலை தெரியும்?" என்று அடுத்த கேள்வியைத் தொடுத்தார் அவர்.

"பொய், திருட்டு தவிர மற்றபடி எந்த வேலையானுலும் செஞ்சிடுவனுங்க, ஐயா!"

"பேஷ்!...சம்பளம் என்ன வேணும்?"

"அதை நீங்கதான் என்னுேட வேலையைப் பார்த்து முடிவு செஞ்சுக்கிட வெணும். முதலிலே என் பசிக்கு நிலையாக ஒரு வழியைச் செய்யுங்க. உங்களுக்குக் கோடிப் புண்ணியம் கிடைக்குமுங்க, முதலாளி!"

"ம்...வேணுங்கிறதைச் சாப்பிடு. சரக்கு மாஸ்டர் கிட்டே சொல்லிட்றேன்!"

"நல்லதுங்க. பசிக்குத் தேவைப்படுகிறதைச் சாப்பிட்றேனுங்க!"

தேவர் வாய்விட்டுச் சிரித்தார்.

கழுவி வைத்திருந்த டபரா—தம்ளர் செட்டுகளை கையில் ஏந்திக்கொண்டு உள்ளே துள்ளி ஓடினுன் பொடிப்பயல். கறிக்குருமாவுக்கு மசாலா அரைக்க வேண்டாமோ?

ஆவணத்தாங் கோட்டைச் சாலையிலே இரண்டாம் ஆட்டம் தொடங்குகிற நேரத்திலும்கூட, திருநாள் பட்ட பாடுதான்.

மேஜை துடைக்கும் கந்தலைப் பிழிந்து போட்டுவிட்டு, நெட்டி முறித்துக் கொண்டான் சோமையா. உடம்பெல்லாம் அடித்துப் போட்ட மாதிரி வலித்தது. கருக்கலி

விருந்து இந்நேரம் வரைக்கும் அவனுக்கென்று காத்திருந்த அலுவல்கள் ஒன்ரு, இரண்டா? பசி எடுத்தது. விளக்கு போட்டதும், இரண்டு பஜ்ஜியும் ஒருசாயாவும் சாப்பிட்டது. இனி, முதலாளி கல்லா கட்டிவிட்டுப் போனதற்கப்புறம் இராச் சாப்பாடு கிடைக்கும். சரக்கு மாஸ்டரோடு குந்திச் சாப்பிட்டால், மீன்குழம்போடு மீன் வருவல் துண்டும் கிடைக்கும். ஆனல், டீ மாஸ்டர் அங்கப்பன் சோறு போட்டால், மீன் மண்டையைக் கூடக் காட்டமாட்டான். சுத்த மோசம் அந்த அண்ணன்!...

சந்தடி அடங்கத் தொடங்கிற்று.

அப்போது, கடை வாசலில் யாரோ பெண்மணி ஒருத்தி தயங்கித் தயங்கி வந்து நின்ருள்.

"என்னுங்க வேணும்? உள்ளே வாங்க" என்று ஓடிவந்து கேட்டான் சோமையா.

இரட்டை நாடியான அந்தப் பெண் கன்னச்சதைகளும் கொண்டைப் பூக்களும் குலுங்க, அந்தப் பையனைக் கூர்ந்து நோக்கினுள். சோமையாவின் இடது கன்னத்திலிருந்த மச்சத்தையே வைத்த விழிவாங்காமல் பார்த்தாள். பிறகு, மெல்லிய அன்புப் புன்னகை தவழ, "நீ யாரப்பா?" என்று விசாரித்தாள்.

"நான் இந்தக் கடையிலே வேலைபார்க்கிற ஒரு எடுபிடிப் பயலுங்க. அது கிடக்கட்டும். இப்போ உங்களுக்கு என்ன வேணும், சொல்லுங்க. தோசை வறுத்த கறி இங்கே ஸ்பெஷலாக்கும். சரக்கு தீர்ந்திருந்தாலும், வேலை செய்கிற சிப்பந்திகளுக்கன்னு சுங்கடி பிடிச்சு வச்சிருக்கிறதிலே தருவேனுங்க; எங்க முதலாளிக்கு வியாபாரம் நடக்குமில்லே, அதுக்காகத்தான் இவ்வளவு தூரம் சொல்லுறேனுங்க, அம்மா!" என்ருன் சோமையா.

"அம்மா!" என்ற அந்த அழைப்பு சிறுவனின்மேனியைப் புல்லரிக்கச் செய்திருக்க வேண்டுமோ?

"அம்மா!" என்ற அந்தப் பாசச் சொல், அந்தப் பெண் மணியை மெய்சிலிர்க்கச் செய்திருக்குமோ? கண்களை லாகவ மாகத் துடைத்துக்கொண்டு, "ஏம்பபா நீ அழறே?" என்று பாசத்தோடு கேட்டாள் அவள்.

"ஒண்ணுமில்லீங்க, அம்மா. உங்களைப் பார்த்தடியும், என்னைப் பெற்ற அம்மா ஞாபகம் மூண்டிடுச்சுங்க, அம்மா" என்று தழுதழுக்கக் கூறினான் பொடியன்.

"அப்படின்னு உன் அம்மா...?" தடுமாறினாள் அவள்.

"எனக்கு அம்மாவும் இல்லே; அப்பாவும் கிடையாது. என்னைப் பெற்ற தாய் தகப்பன் யாரென்றே எனக்குத் தெரியாதுங்க, அம்மா! நான் அனாதையுங்க, அம்மா!" தேம்பினான் சோமையா.

"அட கடவுளே!" என்று உருகினாள் அந்தப் பெண். "வருத்தப்படாதே, தம்பி. திக்கற்றவங்களுக்குத் தெய்வம் துணை இருக்கும்!" என்றாள்.

சிறுவன் சோமையா விரக்தி மூளச் சிரித்துவிட்டு, "திக்கற்ற எனக்கு இப்போதைக்கு எங்க முதலாளி தானுங்க துணை இருக்காருங்க, அம்மா. சரி, சரி. உங்களுக்குப் பசிக்கும். உள்ளாற வந்து இதை உங்க சொந்தக் கடையாட்டம் நினைச்சுச் சாப்பிடுங்க அம்மா!" என்று கெஞ்சும் குரலில் சொன்னான்.

"சரி தம்பி. இதை என் சொந்தக் கடை மாதிரியே நினைச்சுக்கிறேன்," என்று சொல்லிச் சிரித்தாள் அவள், சோமையாவின் பிஞ்சுக் கரங்களைப் பற்றியபடி.

சிரிப்பின் லயத்தை இனம் கண்டுகொண்ட சிற்றுண்டி நிலையத்தின் உடைமைக்கார தேவர் கல்லாவை விட்டு எழுந்து வந்தார். "அட, சிவகாமியா!...ஒண்ணும் விசேஷம் இல்லையே?" என்று பதட்டத்தோடு கேட்டார்.

"ஒண்ணும் விசேஷம் இல்லீங்க, அத்தான். வீட்டிலே பொழுது போகல்லெ. மனசும் நிம்மதிப்படாது இருந்திச்சு.

சினிமாவாச்சும் பார்க்கலாமேன்னு கிளம்பிவந்தேன். பார்த்திட்டுத் திரும்பினப்பதான், இந்தத் தம்பியைக் கண்டேன்!"

சோமையா இப்போது ஒதுங்கி நின்ருன்.

"இந்தப் பையனே உனக்கு ஏற்கனவே தெரியுமா, சிவகாமி?"

"ஊஹூம், இப்ப தானுங்க அத்தான் பார்க்கிறேன். புத்திசத்தி உள்ள பையன், என்னைக் கண்டதும், 'உங்க கடையாட்டம் வந்து சாப்பிடுங்கம்மான்னு வருந்தி வருந்தி அழைச்சான். பாவம், இவன் அனுதையாம்!...தெய்வம் யாரையுமே சோதிக்காமல் விட்டு வைக்கிறது கிடையாது போலே!" என்ருள் சிவகாமி.

"மெய்தான், சிவகாமி. இந்தப் பையன் சோமையா ரொம்பக் கெட்டி!" என்ருர் தேவர். பிறகு, சோமையாவின் பக்கம் திரும்பி, "பையா, இவள் என் சம்சாரம்!" என்ருர்.

"அம்...ம்...மா!" என்று உணர்ச்சி வயப்பட்டுக் கூவிய சிறுவன் கையெடுத்துக் கும்பிட்டான். பிறகு எஜமானியை நோக்கி மெல்ல நகர்ந்தான். "அம்மா அம்மா!...என்னுடை அண்ணன் தம்பி அக்கா தங்கச்சி யாரையுமே ஏன் நீங்க உங்களோடே அழைச்சுக்கிட்டு வரலே?...அவங்களையெல்லாம் பார்க்கவேணும்னு ஆசையாய் இருக்குதுங்க, அம்மா!" என்று குழைந்தான் சோமையா.

மின்வெட்டும் நேரம், மின்வெட்டினுற் போன்று அதிர்ச்சி அடைந்தாள் சிவகாமி. நொடிக்குள் சமாளித்துக் கொண்டு, "காலம்பற எங்க வீட்டுக்கு வா தம்பி; எல்லாரையும் பார்க்கலாம்," என்ருள்.

'பலே!' என்று குதித்தான் சோமையா

அப்போது:

சிவகாமி மட்டுந்தாஞ விம்மினுள்?

சுவரில் காலம் ஓடிக்கொண்டிருந்தது!—விந்தைதான்!

மணி பன்னிரண்டு.

சிப்பந்திகளின் இரவு உணவு நேரம் அது.

சோமையாவுக்குப் பசிக்கத் தொடங்கியது.

விதிக்குப் பசி உண்டு. ஆனால், பசிக்கு விதி ஏது?

சிப்பந்திகளோடு குந்தினான் சோமையா. அவனுக்கு திகிரென்றது. டீ மாஸ்டர் அங்கப்பன் அண்ணா சோறு போடவேண்டும்? அடடா, கடவுளே! உத்திரத்தில் இருந்த சிறு பொட்டலம் ஒன்றை எலி தள்ளிவிடவே, அது சோமையா வின் காலடியில் விழுந்து விட்டது. அதைக் குனிந்து எடுத்து சரக்கு மாஸ்டரிடம் நீட்டினான்.

"அப்பனே சோமையா! இது எலி மருந்து பாஷாண மாக்கும்! தொட்டுப் பிடாதேடா!" என்று எச்சரித்தார் சரக்குமாஸ்டர். பழையபடி உத்திரத்தில் அதை வைத்து விட்டார்.

'ஊம்' கொட்டியபடி, சோமையா இலையில் கண் பதித் தான். மீன் குழம்புச் சோற்றைப் பிசைந்து கொண்டே சிறுவன் ஏறிட்டுப் பார்த்தான். தன் இலையைத் தவிர மற்ற எல்லோரது இலைகளிலும் செங்கண் மீன் வருவல் துண்டம் ஒவ்வொன்று காட்சியளிப்பதைக் கண்டதும், பிஞ்சு நெஞ்சு ஏக்கமடைந்து பெருமூச் செறிந்தது.

சரக்கு மாஸ்டருக்கு பாம்புக்கண். "ஏண்டா அங்கப்பா! நம்ப பயல் சோமையா மட்டும் என்னடா பாவம்செஞ்சான்? அவனுக்கு மாத்திரம் ஏண்டா கவுச்சி வைக்கலே?" என்று கடுமையான குரலில் கேட்டார்.

"நம்ம ஜமாவிலே, பெற்ற ஆயி அப்பன் யாருண்ணே தெரியாத பாவி இந்தப் பொடியன் சோமையா ஒருத்தன் தானே?...அதனாலேதானுக்கும் அவனுக்கு ஒண்டியும் மீன்

வருவல் மிஞ்சாமல் போயிடுச்சுங்க!'' என்று 'நைச்சிகம்' தொனிக்கச் சிரித்தான் டீ மாஸ்டர்.

''ஐயையோ!.........பாழும் தெய்வமே!'' என்று நெஞ்சு வெடிக்கக் கதறினுன் அந்த அனுதைப்பிள்ளை சோமையா; உருட்டிய சோற்றுக் கவளத்தை வீசி எறிந்தான் ஆத்திர மூளை. டீமாஸ்டர் அங்கப்பனை அண்டி, அவன் சட்டையை ஒரு கையால் பிடித்துக் கொண்டு, இன்னெரு கையால் தன் சட்டைப்பையிலிருந்த ஒரு பழைய அட்டைத் துண்டை எடுத்து நீட்டி, 'நான் ஒண்ணும் அப்பன் ஆயி தெரியாத அனுதை இல்லே. இந்தாப் பாருங்கய்யா, என் ஆயியையும் அப்பனையும்!'' என்ருன்

சரக்குமாஸ்டர் ஆத்திரம் அடங்கிய அமைதியோடு சோமையாவைப்பற்றி, அவன் கையிலிருந்த அந்த அட்டையை ஆவலோடு பார்த்தார். இதயம் குலுங்கியது. ''தம்பி உன்னைப் பெற்ற ஆயியையும் அப்பனையும்தான் உன்சட்டைப் பைக்குள்ளேயே வச்சிக்கிட்டு இருக்கியே? இனியும் ஏன் தம்பி நீ அழவேணும்? வா, வா. சாப்பிடலாம்!'' என்ருர்.

சோமையாவின் இலையில் இப்போது மீன் வருவல் காட்சியளித்தது!

**பா**ரதமும் பாகிஸ்தானும் சிம்லாவில் சந்திக்கவிருக்கும் விவரங்களைப் படித்தது வாஞெலி.

''அம்மா!''

''சோமையாவா?...... வந்துவிட்டாயா? வாப்பா, வா?'' என்று ஆர்வம் பொங்க, அன்பு பொங்கி வழிய அழைத்தாள் சிவகாமு. தயாராக வைத்திருந்த காப்பியை எடுத்து நீட்டிஞள்.

''இப்பதானுங்க உங்க கடையிலே காப்பி சாப்பிட்டுப் புட்டு வந்தேனுங்க!'' என்ருன் சிறுவன்.

"பரவாயில்லே, சாப்பிடப்பா!"

எஜமானரும் எஜமானியும் சொல்லும்போது, தட்ட முடியுமா?

சோமையா தவித்தான். சுற்றிச்சூழ ஆவலுடன் நோக்கினன். "நாதியத்த இந்தப் பாவியாலே உங்க வீடு தேடி வெறுங்கையோடுதான் வரமுடிஞ்சிருக்குங்க, அம்மா! ...அம்மா, என்னேட அண்ணன் தம்பிகளே—அக்கா தங்கச்சி களேக் காட்டுங்க. அவங்களேப் பார்த்திட்டுப் போகத்தான் ஓடியாந்தேன். சீக்கிரம் கூப்பிடுங்க அம்மா அவங்களே. நான் வேலேக்கு ஓடியாகணும்!" என்முன் சோமையா

"உள்ளே வாப்பா."

தாய்க்குப்பின் ஓடும் கன்ருக ஓடினன் சிறுவன்.

"எங்கே அம்மா உங்க தங்கப் பிள்ளேங்க?"

"அதோ பார்!"

கூடத்தைச் சிற்றிலும் கட்டுக் கடங்காத பாசத்தோடு நோக்கினன் பொடியன். "யாரையுமே காணலீங்களே, தாயே!" என்முன் கட்டுக்கு மீறிய ஏமாற்றத்தோடு.

"அந்தப் பெரிய நிலேக்கண்ணுடியைப் பாரப்பா, சோமையா!"

"கண்ணுடியிலே நான் மட்டும்தானுங்களே தெரிய றேன், எசமானி அம்மா?"

"நீதானப்பா எங்க செல்வம்!"

"எசமானியம்மா!" ஓலமிட்டுக் கூவினன் சோமையா.

"நாங்க அழறது போதாதா? நீயுமா அழவேணும்?" தேவர் செருமினர்.

"எஜமான்!"

“சோமையா, இனி நான் உன் எஜமான் இல்லே. நான் இனி உன் அப்பா!”

“ஆமாண்டா கண்ணே! நீ எங்க மகன்!” என்று மகிழ்ச்சிக்கண்ணீர் வடித்தாள் சிவகாமி.

சிறுவன் சோமையா மெய்ம்மறந்தான். சட்டைப்பையைத் தொட்டுப் பார்த்தான், “தெய்வமே!...நீ கல் இல்லே! ...எனக்கு அம்மாவும் அப்பாவும் கிடைச்சிட்டாங்க. நான் இனி நாதியத்த அனுதை இல்லே!...” என்று கும்மாளமிட்டுக் கூவினுன். கண்ணீர் வெள்ளம் மடை திறந்தது. மறுகணம், “அம்மா, இன்னொரு காப்பி கொடுங்க!......” என்ருன், செருமலோடு.

ஒரே துள்ளலில் ஓடிப்போய்க் காப்பி கொணர்ந்து கொடுத்தாள் சிவகாமி.

காப்பியை வாங்கிக் கொண்டான் சோமையா. அட்டை மடிப்போடு சட்டைப்பைக்குள் இருந்த சிறிய பொட்டலத்தைப் பிரித்தான். “தலைவலி மருந்துங்க, அம்மா!” என்று குரல் நடுங்கச் சொல்லிக் கொண்டே, அந்தப் பொடியை காப்பியில் தூவிக் கலக்கிவிட்டுக் குடிக்கப் போனுன் சோமையா.

மறுகணம், “ஐயையோ! எலி மருந்தாட்டம் நாறுதே?” என்று பதறியபடி, அந்தக் காப்பியைத் தட்டிவிட்டாள் சிவகாமி.

தேவர் திகைத்தார்.

“எங்களை—இப்பத்தான் நிம்மதியாகச் சிரிக்க ஆரம்பிச்சிருக்கிற எங்களை ஒரு நொடியிலே கூண்டோடு கைலாசம் அனுப்பிட இருந்தியேடா, மகனே!” என்று தரை மீனுகத் துடித்துக் கதறினுள் சிவகாமி.

“அ...ம்...மா! ராத்திரியே நான் கைலாசம் போயிருப்பேன். உங்க தங்கங்களைக் காணவேணுமிங்கிற ஆசையாலே

தான் அப்படிச் செய்யலீங்க!... என்னைப் பெற்ற ஆயியும் அப்பனும் என்னோட கன்னத்து மச்சத்தை இனம் கண்டு என்னை என்றைக்காணும் ஒரு நாள் ஏற்றுக்கிடுவாங்கன்னு தான் இதுவரை நான் தவம் இருந்தேன். ஆனாஅது பொய்யா கிடுச்சுங்க! அவங்க—அந்தப் புண்ணியவாங்க ரெண்டுபேரும் என்னை மறந்தாலும் நான் அவங்களை—அந்தப் புண்ணிய வாங்களை மறந்ததே இல்லீங்க. அவுங்க ரெண்டுபேரையும் எப்பவும் என் சட்டைப்பைக்குள்ளேயே கொலுவிருக்கச் செஞ்சிட்டேன்...கொஞ்ச முந்திவரை நான் அனாதையாகத் தான் இருந்தேன்! ஆனா, இப்போ நான் நாதியத்த அனாதை இல்லே. எனக்கும் ஒரு அம்மா—அப்பா கிடைச்சிட்டாங்க என்கிற இந்த ஒரு அளவில்லாத சந்தோசத்தோட--பெருமையோட--பெருமிதத்தோடவே நான் கண்ணை மூடிக் கிடவும் திட்டம் போட்டேன். ஆனா......?"

"ஐயையோ, சோமையா!... நீ எப்பவுமே எங்க பிள்ளை தான்!......கடவுள் மேல் ஆணை இது! எங்களை நம்பு, சோமையா! இன்னொரு உண்மையையும் நீ நம்பவேணும். இனி எங்க ரெண்டு பேர் உயிரும் உன் கையிலேதான் இருக்கு!... இது சத்தியம்!" என்று விம்மிப்புடைத்தவளாக, சோமையாவின் பாதங்களிலே சரணடைத்தாள் சிவகாமி.

"எஜமானியம்மா!" தவித்தான் சோமையா.

"நான் உன் அம்மாடா, தெய்வமே!"

"அ...ம்...மா!"

சோமையா மகிழ்ச்சிக் கண்ணீர் பெருக்கினான். சிவகாமியின் விழிகளைத் துடைத்தபடி, அவளை ஏறிட்டு நோக்கினான்-தொண்டையைக் கனைத்துக் கொண்டான். "அம்மா! என்னைப் பெற்றுப் போட்ட கடமையோடே நிம்மதிப் பட்டு என்னை அனாதரவாகவும் நாதியற்றும் தவிக்க விட்டுட்டு எங்கிட்டோ மானாபிமானம் கூட இல்லாமல்— கண்காணாமல்

மறைஞ்சிட்ட என்னோட அம்மாவையும் அப்பாவையும் நீங்க பார்த்ததே இல்லையே, அம்மா! இப்ப இதோ, பாருங்க, தாயே!" என்று விக்கலுக்கும் விம்மலுக்கும் இடையே சொன்னான். பிறகு கந்தல் சட்டைப்பையினின்றும் நைந்து கசங்கியிருந்த அட்டை ஒன்றை எடுத்து அவளிடம் ஏக்கம் சூழ்ந்திட நீட்டினான் சோமையாப்பையன். கண்ணீர்மாலை நீண்டு கொண்டிருந்தது.

'கன்னாபின்னா'வென்று கிறுக்கப்பட்டு, வெறும் கோட்டுருவச் சித்திரங்களாகத் திகழ்ந்த அந்தத் தாயும் தந்தையும் இப்போதும் சிரித்துக்கொண்டுதான் இருக்கின்றார்கள்!..

# பாப்பா

இதோ, புதுக்கோட்டை வந்துவிட்டது!

"எதையுமே மனசிலே நினைக்காமல், ரொம்பவும் ஜாக்கிரதையாய் இறங்க வேணும், கமலம். பாப்பா பத்திரம்!" என்று எச்சரிக்கை செய்து கொண்டே, பஸ்ஸிலிருந்து இறங்கினான் சண்முகம். கித்தான் பை இடது தோளுக்கு மாறியது. அவன் பார்வை படிக்கட்டில் பதிந்திருந்தது. அந்த மண் உண்டுபண்ணிய சலனத்திற்கு - நினைவுகளின் சலனத்திற்கு ஈடு கொடுப்பதில் முனைந்தது உள்ளம். "ஊம்... பார்த்து...ம் மலர் விழியை எங்கிட்டே கொடுத்திடு. எஸ்... ஆல் ரைட்!" என்றான்.

குழந்தை அவனை அடைந்தது தான் தாமதம், உடனே "ம்...மா!" பாட்டுப் பாடத் தொடங்கியது.

"அழாதேடா ராஜா! ஐயோ ஈஸ்வரா!.. அழாதேம்மா... அழப்படாதம்மா!"—தவித்தான் சண்முகம். ஏக்கமும் நடுக்கமும் முயங்கின. குழந்தையை அணைத்துக் கொண்டான். அதை அமைதிப் படுத்துவதற்குள் போதும்போது மென்று ஆகிவிட்டது. மேனியின் உள்வசமான நடுக்கம் இன்னமும் ஓயவில்லைதான். வேர்வை சட்டைக் காலரை நனைத்தது. "இந்தா கமலம், உன் மகளை வாங்கிக்க. அதுக்கு அப்பாவைப்

பிடிக்கிறதே இல்லை. அந்த மட்டுக்கும் நல்லதுதான்!'' சண்முகம் உருக்கமாகத் தெரிவித்தான். ''உஸ்...பட்டனை போட்டுக்க!''

பெற்றவளின் அழகான மூக்கைப் பிராண்டிக்கொண்டே சிரித்தாள் மலர்விழி.

கொண்டவனை ஏறிட்டுப் பார்த்தபோது, அவன் எதிர் பார்த்தபடியே, அவளது இமை விளிம்புகளிலே ஈரம் கால் பாவியிருந்தது. கணவனின் முகத்தைப் பார்த்து விட்டு, சமாளிக்க முயன்று, அரைச் சிரிப்பை வெளுப்பு மாறி வந்த உதடுகளிலே ஏந்திஞள் ஏந்திழை. இளம் வெயில் படாமல் குழந்தையை வசம் மாற்றிக் கொண்டாள் கமலம்.

அது, ஸ்ரீமந் ஆஞ்சநேயர் ஆலயம்.

கை தொழுதான் சண்முகம். ''சாமியைக் கும்பிடு,'' என்று மனம் நெகிழ்ந்து, நா தழுதழுக்கச் சொன்ஞன்.

தயங்கிஞள் கமலம். எதை நினைப்பாள்? எதை மறப்பாள்? கைத்தலம் பற்றியவனைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் மலர் விழியும் விளையாடிஞள்; விளையாட்டுக் காட்டிஞள்.

''நம்ம விதிக்கு ஆண்டவனை நொந்து என்ன செய்யறது? நம்பளை இம்மட்டுமாவது உயிரும் உடம்புமாக வச்சிருக்கிறதே நம்ம மலர்விழிதான். ஆகச்சே, நம்மளோட இந்தக் குழந்தையின் ஆயுள் பலத்தை உத்தேசிச்சானும், பகவானிடம் மனம் விட்டுப் பிரார்த்தனை செய்ய வேண்டியது பெற்றவர்களாகிய நம்ம கடமை!... இல்லியா, கமலம்? ம்... கும்பிடு!''

புதிய உணர்வில் மெய் சிலிர்த்தாள் தாய்.

மலர்விழியின் நெற்றிக்கு அந்தக் குங்குமம் எவ்வளவு எடுப்பாக அமைந்துவிட்டது!

"டிபன் சாப்பிட்டுட்டு, டாக்டரைப் பார்க்கலாம், என்ன சொல்றே!"

"முதலிலே டாக்டரை பார்த்திட்டு வந்தால்தான் மனசு நிம்மதிப்படுங்க, அத்தான்!" மூக்குத்திக் கற்கள் பளிச்சிட்டன.

"கமலம், நீ பாப்பா இல்லே, ஒரு பாப்பாவுக்கு அம்மா. பழசை நினைச்சு, நினைச்சு, ஏங்கி, ஏங்கி, உருகித் தவிச்சு இனி ஒண்ணும் ஆகப் போகிறதில்லே. நீயே எனக்கு புத்தி படிச்சுக் கொடுப்பே. இப்போ நீ இப்படி மனம் மறுகிறு, உன்னை நம்பி இருக்கிற நம்ப பாப்பாவோட எதிர்காலம் என்னுகிற தின்னு யோசிச்சுப் பார்த்தியா?... பாப்பாவுக்குப் பால் வேணுமில்லே!... வா, டிபன் பண்ணிட்டே போகலாம்!"

விளம்பரப் பலகையில், 'டாக்டர் சிவசுப்ரமணியன் பி. எஸ்ஸி, எம்.பி.பி.எஸ்., டி.ஸி.எச்' என்ற பட்டங்கள் பொலிந்தன.

"வா, கமலம். மனசை அலேபாயவிடப்படாது. குழந்தையை கெட்டியமாய்ப் பிடிச்சிக்க வேணும்," என்று நினைவூட்டிய வண்ணம் சண்முகம் முன்னே நடந்து, இரும்புக் கதவின் கொக்கியை நிதானமாக விலக்கினான்.

அன்றைக்கும் இப்படித்தான் இறுதியில் கைகள் நடுங்கி விட்டன! 'ராஜா! தெய்வமே!' தந்தை மனம் அழுது புலம்பியது. முகத்தைத் துடைத்துக்கொண்டான். தலை சுற்றியது. சாமர்த்தியமாகச் சமாளித்தான். மலர் விழி அவன் நெஞ்சில் அழகாகச் சிரித்தாள். பொங்கிப் புரண்ட பாசத்தோடு திரும்பினான். "பாப்பா!" என்றான்.

கமலம் கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

மலர்விழிக்கு என்ன தெரியும்?-அவள் தன் போக்கில் தன் லயத்தில் சிரித்துக் கொண்டிருக்கிறாள்.

"கமலம், நம்ம இருக்கிறது டாக்டர் வீடு."

"சரிங்க!"

"ஸார்! டாக்டர் ஸார்!" என்று மெல்லக் குரல் கொடுத்தான் கமலத்தின் கைப்பிடி நாயகன். 'டாக்டர் நல்ல வாக்காகக் கொடுக்கணுமே!... பகவானே!'

டாக்டரின் சம்சாரம் வந்தார்கள். "இருங்க, ஐயா ஸ்னனம் பண்றுங்க. நைட் டியூட்டி. வந்துடுவாங்க," என்றார்கள்.

"நல்லதுங்கம்மா."

மலர்விழிக்கு ஜலதோஷம். 'வேபரப்' டப்பாவும் டவலும் உதவின.

கிலு கிலுப்பை பாவம், என்ன பாடு படுகிறது!

சண்முகத்துக்குத் தன் இன்னுயிர்த் துணையை நோக்கவே பயமாக இருந்தது. 'பாவம், பெற்ற மனசு ஏங்கித் தவிக்குது. புரியுது. புரிஞ்சு இனிமே என்ன ஆகப் போகுது?... எங்க பாக்கியம் அவ்வளவுதான். எனக்குத் தெரியாம அவளும், அவளுக்குத் தெரியாம நானும் உருகுகிறது தான் கண்ட பலன். நானும் எத்தனையோ பாடு பட்டும் எதையுமே என்னாலே மறக்கவே முடியவில்லையே! ஐயோ, அறிஞ்சு ஒரு பாவமும் செய்யலையே!... ராஜா! என் தெய்வமே!'

பத்து மாதங்கள் இருக்கும். இருக்கும் தெய்வங்களையெல்லாம் நெஞ்சில் இருக்கச் செய்து இருந்த விபூதியை யெல்லாம் நெற்றியில் இருத்தித்தான் அவன் இங்கே குழந்தை ராஜாவை எடுத்து வந்தான். கமலத்துக்கு ஒன்பது மாதம்.

ராஜாவுக்கு இருந்திருந்தாற்ப் போல வயிறு உப்பத் தொடங்கியது. 'சவலை' என்றார்கள் தெரிந்தவர்கள். அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. விதியை தெரிந்திருக்கவில்லை அவர்கள். கடைசியில் டாக்டர் பார்த்தார். "குழந்தைக்கு ஈரல் குலைக்கட்டி" என்றார். நாடிக் குழல், நோயின் நிலையை —நிலைமையைச் சோதித்தது. "தப்பு பண்ணிட்டீங்களே?

ரொம்ப லேட்டாய் வந்திருக்கீங்க. ஹாஸ்பிட்டலுக்கு வாங்க. என்றால் ஆனமட்டும் 'ட்ரை' பண்ணிப் பார்க்க றேன்" என்றார் டாக்டர்.

இந்த டாக்டர் நல்லவர். குழந்தை ஸ்பெஷலிஸ்ட். குழந்தை குட்டிக்காரரர். சிறு வயசு. ஆனாலும், அனுபவத் தின் வயசு கூடுதல்.

டாக்டரின் மனமும் படிப்பும் குழந்தை ராஜாவின் உயி ரைப் பிடித்து நிறுத்திக் காப்பாற்றி விடப் படாதபாடு பட்டன.

பெற்றவர்களைப் போலவே, பதினைந்து மாதக் குழந்தை யும் ஜீவமரணப் போராட்டம் நடத்தியது.

ஆனால்...

எழுதிச் செல்லும் விதியின் கை ஓங்கிவிட்டது.

சோறு தண்ணீர் இல்லாமல், இருபத்திரண்டு நாட்கள் செய்த தவம், ஆடி வெள்ளமாகப் பெருக்கெடுத்த பாசம் எல்லாம் பாழ்! பாழ்!...

"தெய்வமே!...ஐயோ, எங்க தெய்வமே ராஜா!..."

செருப்புச் சத்தம் கேட்டது. கமலமும் சண்முகமும் சுயப் பிரக்ஞை கொண்டு சடக்கென்று எழுந்து கும்பிட்டார் கள்.

டாக்டர் "வாங்க," என்று சொல்லி, சண்முகத்தைப் பார்த்தவுடன், அவரது முகமலர்ச்சி சடுதியில் மாறியது. விதியை நினைவு கூர்ந்திருக்க வேண்டும்.

நப்பு கொட்டியபடி, மலர்விழி ரேழியில் தவழ்ந்து விளை யாடினாள். விதியின் விளையாட்டை அவள் எப்படி அறிவாள்?

"பொண்ணு பிறந்திருக்கோ?"

"ஆமாங்க, டாக்டர் ஸார்."

“அதுக்கென்ன! அடுத்தாற் போல, ராஜா வந்து பிறந்துடுவான்!”

ராஜா மீண்டும் வந்து பிறக்க வேண்டும் என்று தான் சண்முகம் தம்பதி பிரார்த்தனை செய்தனர்.

ராஜா திரும்பி வரவில்லை!...

இதோ, மலர்விழிதான் வந்திருக்கிருள்!-தாயையும் தந்தையையும் பைத்தியம் பிடிக்காமல் காப்பாற்றிய புண் ணியவதி அவள்!

“மிஸ்டர் சண்முகம், பாப்பாவுக்கு உடம்பு ஒண்ணு மில்லையே?”

“ஒண்ணுமில்லீங்க. சும்மா ‘மெடிகல் செக்கப்’புக்காக வந்தோம். பழைய பயம் உறுத்திக்கிட்டே இருக்குதுங்க. நீங்க பேபியை ‘டெஸ்ட்’ பண்ணிப் பார்த்திட்டால் தேவ லாம்னு நினைச்சோம்!”—சண்முகத்தின் தொண்டை அடைத்தது.

கேள்விகளும் பதில்களும் பரிவர்த்தனை ஆயின.

குழந்தை தும்மினுள். நல்ல தும்மல்தான்.

டாக்டர் நல்வாக்குக் கொடுத்தார்.

கடவுளே!

மலர்விழி கொடுத்து வைத்தவள்! வாங்கிக் கொண் டாள். முத்தங்கள் ஆயிரம்!

தூங்குமூஞ்சி மரங்கள் இளஞ்சிவப்பில் பூக்களை உதிர்த்து, வேனல் பூக்களை உதிர்த்து வேனல் மறைந்த காற் றையும் உதிர்த்தது.

குஞ்சுக் கால்களை அப்பாவின் ஹிருதயத்தில் பதித்து அழ குடன் சிரித்தாள் குழந்தை. ஜீரண மருந்தின் துளி ஒன்று தேங்கியிருந்தது, மேலுதட்டில்.

'ராஜா!'—சண்முகத்தின் உள்ளத்தின் உள்ளம் கூவி அழைத்தது. ஓடிவந்தான் ராஜா. கால் சதங்கைகள் கிண் கிணி முழங்க, பால்வாய்ச்சிரிப்பின் மெல்லலைகள் பண்பாட 'ப்...பா...அ...ப்பா!' என்று பதில் குரல் கொடுத்துக் கொண்டு ஓடிவந்தான், அழகாக. அழகின் அழகாக, ஓடோடி வந்தான். வந்தவன், தங்கையின் அழகுமுகத்திலே கலந்தான். இரண்டறக் கலந்தான். "மலர்விழி!...ராஜா!" ஈரம் கசிந்தது.

தாய்மனம் விம்மியது.

"கமலம்!"

"ம்!" என்றவள் "அத்தான்...அத்தான். துணியிலே பட்டுடப் போகுதுங்க. எங்கிட்ட கொடுங்க. கூஜாவிலே தண்ணி இருக்கு; எடுங்க!"

நடந்தார்கள்.

சத்தியமூர்த்தி வீதி, கீழராஜ வீதிக்கு வழி காண்பித்தது.

புகையும் நடந்தது.

குடைக்கும் மீறிய வெக்கை.

டாக்டரின் மருந்துச் சீட்டு கித்தான் பைக்குக் கனம் ஏற்றியது.

"இருமல் மருந்து இன்னும் ஒரு பாட்டில் இருக்கல்ல?"

"ஓ!"

"காலம்பற வரப்போ சாப்பிட்டியில்ல?"

சாப்பிட்டேனே! இல்லாட்டியா, பாப்பாவை சமாளிக்க முடியுமா?"

புதிய நிழற்பட நிலையம் அது.

"கமலம், இனி நமக்கு அறந்தாங்கிக்கு நாலு நாற்பதுக்குத்தான் பஸ். டைம் ரொம்ப இருக்கு!"

“சரிங்க. மாகசின் வாங்கி ரொம்ப நாளேச்சேங்க, அத்தான்!”

“வாங்கிடுறேன்!”

சண்முகம் கடிகாரச் சங்கிலியை நெருக்கி விட்டபடி, ஓர் அரைக்கணம் சிந்தனை வசப்பட்டான். பிறகு, “கமலம், பேபியை வச்சு நாம ஒரு போட்டோ எடுத்துக்கிடலாம். இன்னிக்கு நல்லநாள். போன வருஷம்தான் தடங்கல் பட்டுப் போச்சு!” என்று மெலிந்த தொனியில் வெளியிட்டான்.

ராஜாவைப் படம் பிடிக்க வந்த நேரத்தில் சோதனை போல ‘கரண்ட்’ நின்றுவிட்ட அந்தச் சோக நிகழ்வை அவள் எங்ஙனம் மறப்பாள்? “சகுனத் தடையாட்டம் கரன்ட் ஆஃப் ஆயிடுச்சு. மறுதரம் வாரப்ப, படம் எடுத்துக் கிடலாம். இப்போ பஸ்ஸுக்கு டயம் ஆயிட்டுது,” என்று தம்பதி முடிவிட்டுத் திரும்ப நேர்ந்தது. ‘அன்னிக்கே ராஜா வைப் படம் பிடிச்சிருந்தால், அந்த படமாச்சும் ஒரு ஆறுத லாக இருந்திருக்குமே?...தெய்வமே. ராஜா!’ ராஜா மோக னப் புன்னகை செய்த வண்ணம் பெற்ற மனத்தின் ஆடரங் கிலே வண்ணப் பொற்கனவாக நர்த்தனம் புரிந்தான்!

“கமலம்!”

“உங்க மனசுப் பிரகாரம் செய்யுங்க!”

ஜரிகை கவுன், தங்க வளைகள், டாலர் வைத்த சங்கிலி, பொட்டு, கனகாம்பரச்சரம், கிளாஸ்கோ பிஸ்கட். மலர்விழி யின் சிரிப்புக்கு ஈடு ஏது? ஏன் இல்லே? ராஜா அச்சாக இதே மாதிரிதானே சிரிப்பான்?

படம் எடுத்து முடிந்தது.

சண்முகம் புகைப்பட நிபுணரை அண்டினான். “பேபியை மட்டும் தனியே உட்கார்த்தி வச்சு ஒரு ஸ்னப் எடுத்திட ணும். இதுவும் காபினட் சைஸ்தான். இதுக்கு மட்டும் கையோட ஒரு ப்ரூஃப் கொடுத்திடணும்!” என்று நயந்து வேண்டினான்.

சம்மதம் கிடைத்தது.

'ப்...பா!' குரல் கொடுத்தது குழந்தை.

சன்முகம் மௌனத்தைக் கலைத்தான். மேனி புல்லரித்தது. ஆருயிர் கமலத்திடமிருந்து பையை வாங்கினான். கைகள் நடுநடுங்க, ஒரு கவரை வெளியிலே எடுத்தான். புத்தம் புதிய டெர்லின் ஷர்ட்டும், ட்ரவுஸரும் பிரிந்தன. "கமலம்! மலர்விழிக்குச் சீக்கிரம் இதுகளைப் போடு. ஜடையைப் பிரிச்சிட்டு, வகிடு எடுத்து கிராப் வாரி விடு!" என்று உணர்வுகள் விம்மச் சொன்னான்.

கமலம் நெடுமூச்செறிந்தாள். ஏக்கம் குமிழ் பரப்பியது. அந்தப் புதிய மேற்சட்டையையும் காற்சட்டையையும் பாசத்தோடு மலர்விழிக்கு அணிவித்தாள். குழந்தையின் நெற்றியில் சிதறிய முத்துக்களை ஒற்றினாள். கிராப் வாரினாள். "ராஜா!...என் ராஜா!...எங்க ராஜா!...தெய்வமே, உனக்கு எங்க பேரிலே இப்படியொரு கருணையா? தெய்வமே ராஜா!..." என்று தேம்பினாள். பொங்கிப் புரண்டு கொண்டிருந்த அந்தப் பாசத்தின் சுழிப்பிலே, நிழல், கனவாக வளர்ந்து கொண்டிருந்தது போலும்!

தெய்வமே!

கடைசியில் மலர்விழி எத்தனை அழகாகச் சிரித்து விட்டாள்!

காமிரா விழித்தது. 'தாங்க் யூ' என்று இரண்டாந் தடவையாகக் கூறியது.

அந்தப் படத்தைப் பார்த்துப் பார்த்து, குலுங்கக் குலுங்கச் சிரித்துக் கொண்டே யிருந்தாள் மலர்விழி!– "கண்...ணே!...ண்...ணன்!...வாய் ஓயாமல் 'பறைந்து' கொண்டே யிருந்தாள் கவுன்!—மின்னியது!

"ராஜா!"

"ராஜா!..."

ராஜா திரும்பி வந்து விட்டான்!—கெட்டிக்காரன்!...

# பாவிகளை ரட்சிக்க...

உங்களுக்கெல்லாம் தெரிந்திருக்க நியாயமில்லை தான்!—நான் மிட்டாய் கம்பெனி ஒன்று நடத்தினேன். முக்கூட்டு; ஆமாம்! முக்கூட்டு ஒப்பந்தம்.

கம்பெனி நடந்த இடம் முக்கூடலாக இருந்திருந்தால், ஒரு வேளை பணம் காசு மிஞ்சியிருக்குமோ, என்னவோ?

ஆனால், கம்பெனி நடந்த இடம் என்ன, தெரியுமா?

பாண்டிச்சேரியாக்கும்!

'ஜாக்கிரதை' என்ற சிவப்புக் கொடி காட்ட பாவம், பாண்டி மட்டும் என்ன பாவம் செய்து விட்டது—இன்றைய நாட்டு நடப்பிலே?

முஜ்பிர் ரஹ்மான் போர்க்கோலம் ஏந்தினர் அல்லவா? அன்று இங்கே நேருநகர் விழாக்கோலம் ஏந்தியது. வந்திருந்த பெரிய மனிதர்கள் அனைவரும் சொல்லி வைத்தமாதிரி வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வாரி வாரி வழங்கினர்கள். அத்தனை நல்லாசிகளிலே சாஸ்திரத்துக்காவது ஒன்றேனும் பலிக்காதா என்று தான் காத்திருக்கின்றோம்.

ஆனால், ஒரு சிதம்பர ரகசியம் என்ன, தெரியுமோ?

எங்கள் கவலைகளுக்கெல்லாம் காரணபூதர்களாக—பூதங்களாக அல்ல—ஆடாமல் அசையாமல் இருந்துவரும் எங்கள் வாடிக்கையாளர்கள், "அண்ணுச்சி, எந்தத் தொழில் ஆரம்பிச்சாலும் சரி, ஒரு மூணு வருஷம் விட்டுத்தான் பிடிக்க வேணுமுங்க. அப்புறம் பாருங்களேன், வந்து குமிகிற பணத்தை உங்களாலே எண்ணக்கூட முடியாதாக்கும்!" என்று புத்திமதி சொல்லி வருகிறுர்கள்.

அந்தக் காலக் கெடுவை இருப்புப் பெட்டகத்தின் தலைக்கு மேலே கண்ணுடிபோட்டு மாட்டி அழகு பார்க்கவும் நான் தவறி விடவில்லை!

இன்னெரு பங்குதாரர் கடலூரில் இருந்தார். தங்க மானவர், தங்க வியாபாரி ஆயிற்றே!

மூன்ருவது பங்காளி தங்கமுத்துவுக்கு அவரிடமிருந்த இயந்திரங்களே அவருக்கான பங்கு முதலீடாகக் கை கொடுத்தன. அவருக்கு வெளியூர் 'டூர்' தான் ஜோலி. 'ட்ராப்ஸ்' என்றும் 'பான்குட்ஸ்' என்றும் சிகரெட் மிட்டாய், தி.மு.க. மிட்டாய் கதர்க்கொடி மிட்டாய் என்றும் 'லோகோ பின்னருசி' என்கிற முதிர்மொழிக்கேற்ப வகை வகையான ரகங்களிலே, வகை வகைப்பட்ட ருசிகளோடு மிட்டாய்களைத் தயாரித்துக் குவிப்பது, எல்லாவற்றையும் 'ராக்கு'களில் வைத்துக் கொண்டு அழகு பார்க்கவா?

"அண்ணுச்சி, திண்டிவனத்திலிருந்து நைட் திரும்பிவிடுறேன். வசூல் பாக்கிகளையும் நெருக்கிப் பிடிச்சுக் கேட்டு வாங்கிவரப் பார்ப்பேனுங்க. தயவு செஞ்சு நீங்க கொஞ்சம் பொறுமையாக இருங்க. எல்லாம் தன்னுலே சீராயிடும்!... பை தி பை... டூர் முடிஞ்சி திரும்பினதும் முதல் அலுவலாக ஒரு நல்ல எடுபிடிப் பையனுக்கு ஏற்பாடு செஞ்சுட்றேன். மிட்டாய்களை எடை போட்டுக் கவரில் போட்டு ஒட்டத் தெரிஞ்ச நாணயமான பையனை நியமிச்சிடலாமுங்க!" என்ருர் தங்கமுத்து. தங்கப்பல் ஒன்று முத்துநகை சிந்தத் தவறவில்லை. அந்நகையின் பொருளை நானே அறிவேன்!...

"ஓ.கே. இன்றைக்கும் எடுபிடி ட்யூட்டியை நானே கவனிச்சுக்கிறேன். ஒருவாரக் கணக்கு அப்படியே பெண்டிங் இருக்கு. குறிப்பு எழுதி, பேரேடு பதிஞ்சாகணும் நான். நான் பாங்கில்போட்ட பங்குப் பணம் பத்தாயிரமும் கரைஞ்சிட்டுது. வியாபாரிகளை நம்பினால், ப்ரொடக்ஷன் நம்மோட டெய்லி டார்ஜட்பிரகாரம் நடக்க முடியாது. முடிந்த வரை வசூலைப் பாருங்க. நாளைக்கு நீங்க வந்தவாசி போய்த் திரும்பியதும், நிலவரத்தைப் பார்த்துக்கிட்டு, நான் கடலூர் போய் வந்தால்தான் கதை நடக்கும் போலத் தோணுது!... ஆல் ரைட்!..." என்று ஓர் அழுத்தம் கொடுத்துச் சொல்லிவிட்டு அவருக்குப் பயணச் செலவுக்கும் பணத்தை எண்ணிக் கொடுத்தேன்.

மணி ஒன்பது அடிக்கிறது.

"போயிட்டு வாரேன், அண்ணுச்சி!"

"இருங்க, காப்பி சாப்பிட்டுட்டுப் போகலாம். அப்புறம் சிகரெட் பற்ற வைக்கலாம்!"

பேஷ்! சைக்கிள் ரிக்ஷா வந்து விட்டது!

ஓடிக் கொண்டிருந்த மின் விசை மோட்டார் 'சடக்' கென்று நின்றது.

வெற்றிலைப் பொட்டணத்தை அப்படியே போட்டு விட்டு, உள்ளே ஓடினேன்.

'பான்குட்ஸ் ரிவால்வர்'— அதாவது, மின்விசை மிட்டாய் அண்டா நின்றுவிட்டது. அண்டாவில் 'பீன்ஸ் மிட்டாய்' பாலிஷ் ஏறிக் கொண்டிருந்த நேரம் அல்லவா?

சுளையாக இருபது ரூபாய் கை விட்டுச் செல்ல, புதிய 'ரெமே' பெல்ட் ஒன்று கைதேடி வந்தது. மேஸ்திரி நடேசன் மாதிரி மற்ற வேலையாட்களும் அமைந்திருந்தால், என்னுடைய அமிர்தாஞ்சனச் சீசா அதற்குள் தீர்ந்திருக்க மாட்டாதே!

அண்டா ஓடத் தலைப்பட்டது.

எனக்கு நல்ல மூச்சு வந்தது. பளபளப்பு ஏறிக் கொண்டிருந்த மிட்டாயில் ஒரு கொத்தை அள்ளி குழல் விளக்கு வெளிச்சத்தில் சோதித்துப் பார்த்தேன். என் புன்சிரிப்பில் மேஸ்திரியின் கவலை கரைந்திருக்க வேண்டும்.

விசிறி ஓடுகிறது.

வேர்வையும் ஓடுகிறது.

சிட்டையில் ரிக்ஷா கூலியைக் குறித்துவிட்டு, தாம்பூலம் தரித்தேன். சாயங்காலம் வேலை நிரம்ப இருக்கிறது. முதலில் அகிலாண்டத்துக்குத் தபால் போட வேண்டும். குழந்தைகள் 'அப்பா அப்பா' என்கின்றனவாம்! தொழில் கொஞ்சம் சூடு பிடித்துவிட்டால், தைரியமாகக் குடும்பத்தை இங்கே அழைத்து வந்து விடலாம். போன வாரம் ஊர் சென்றபோது என் உடம்பு வாடியிருப்பதாக வருந்தினள் அகிலாண்டம். எனக்குப்புரியாமல் இல்லை. லாபத்தில் ஈவு கிடைக்குமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்தேன்; ஆனல் கடந்த ஏழு மாதங்களாக, நஷ்டத்தில் 'ஷேர்' கிடைத்து வருகிறது!— முருகா!...

புதிதாக வந்த 'ரெக்ரூட்' பொடியனுக்குக் காப்பி வாங்கி வரக்கூடத் தெரியவில்லை. மிட்டாயைக் கீழே சிந்தாமல் பிளாஸ்டிக் பைகளில் அள்ளிப் போடக் கூடவா தெரியக் கூடாது? அதட்டினேன். அழுதுவிட்டான்.

"தம்பி, அழாமல் வேலையைக் கத்துக்க. இப்பவே உழைச்சுப் பழகினல், பின்னல் எவ்வளவோ உபகாரமாக இருக்கும். மிட்டாயை ரொம்பச் சாப்பிட்டுடாதே. வயிற்றுக் கடுப்பு வந்திடப் போகுது!"

என் கடமை முடிந்தது.

தொழிற்கூடம் சுறுசுறுப்பாகக் காட்சியளிக்கிறது.

308 டிகிரி வெப்பத்திலே காய்ச்சப்பட்ட சர்க்கரைப் பாகு அதோ, பிளேட்டில் தளும்பி நிற்கிறது. கோவிந்தனின் இரு கரங்களிலும் இருந்த 'படைவெட்டி'கள் அந்தக் குழம்பைத் தடுத்து நிறுத்த, பழனி எஸ்ஸென்ஸை அளவு பார்த்து ஊற்றி லாவகமாகக் கலக்க, வேலப்பன் இயந்திர கதியில் படையை வெட்டி வெட்டி நீட்ட, மிட்டாய் ஸ்டாண்டில் தயாராக நின்ற பெரியவர் நாயுடு படையை வாங்கி வாங்கி அச்சு ரோலருக்கு அடியில் தள்ள, முத்தையன் ரோலரை மூச்சிறைக்கச் சுற்ற, 'ஏ. பி: ஸி. டி' மிட்டாய் 'ட்ராப்ஸ்' ரகத்தில் உருவாகி அடுத்த பிளேட்டில் வந்து விழுந்து கொண்டிருக்கின்றன. பதம் பார்த்து பிசிறு தட்டி, மிட்டாய் 'ஏடுகளை' இரண்டு கைகளாலும் உடைத்துக் குவிக்கிருர் நாயுடு.

களத்துமேட்டில் அம்பாரம் கட்டிக் கிடக்குமே சீரகச் சம்பா, அந்த இனிய பசுமை நினைவு என்னுள் எழ, ஒரு கை மிட்டாயை அள்ளி நோட்டம் கணித்தேன். அச்சு விலகியிருந்த மிட்டாய்கள் சிலவற்றைச் சுட்டினேன் நாயுடுவிடம். மேஸ்திரியும் எட்டிப் பார்த்தார். சுத்தியும் ஸ்பானரும் ஓடிவரவே, நகர்ந்தேன் நான்.

தூபால் நேரம் அது.

"அண்ணுச்சி!" என்ற குரல்— புதிய குரல் கேட்கவே, பாட்லி பாய் கம்பெனிக் கடிதத்தை மடித்தபடி, பார்வையை வெளிப்புறம் செலுத்தினேன்.

யாரோ ஒரு பையன்பிஞ்சுக் கரங்களைக் கூப்பியவண்ணம் வந்து நின்ருன்.

"என்ன வேணும்?" எனக்கே உரித்தான வேகத்தோடு தான் இக் கேள்வி வெளிப்பட்டிருக்க வேண்டும்.

"உங்க அன்பு வேணுமுங்க, அண்ணுச்சி!"

நான் புன்னகை செய்தேன். "அப்படியா, தம்பி?" என்றேன்.

"ஊம்!" பூவிழிகள் பொசிந்தன.

"சரி, விஷயத்தைச் சொல்!" என்றேன்; பாசத்தின் பிடிப்பில் பிறந்த ஓர் அக்கறையுடன் கேட்டேன்.

"அண்ணுச்சி, ஏற்கனவே நான் காந்தி மிட்டாய்க் கம்பெனியிலே பாக்கெட் போட்டுக்கிட்டிருந்தேன், எடுபிடிப் பையனுக!... உங்க ஜோதி கம்பெனிலே வேலே கிடைக் கலாம்னு கேள்விப்பட்டேன். வேலே கிடைக்குங்களா?" என்று விசாரித்தான் அச்சிறுவன். நம்பிக்கையின் துவிப்பு அந்த வெள்ளே மனத்தினின்றும் பிரதிபலித்து அந்தப் பால் வதனத்தில் நிழலாடிக் கொண்டிருந்தது.

நான் பையனே எடை போட்டேன். என் மனக் குறிப்பின் சாதுர்யத்தை—தொழில் ரீதியான நெளிவு சுளிவின் லயத் தைக் கண்டு என் எதிர்ப்புறம் ஹாலில் இருந்த எடைபோடும் அவேரிதராசு மனத்திற்குள் நகை பூத்திருக்கக் கூடும். "தம்பி, உன் பேரென்ன?" என்று வினவினேன்.

"குணசீலன்!" சுருட்டைமுடிகள் இப்போது ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தன. மேல் சட்டையின் இடது தோள்ப் பட்டையிலிருந்த கிழிசலே அவனது பூ விரல்கள் நெருடிக் கொண்டிருந்தன.

"காந்தி மிட்டாய்க் கம்பெனியிலேருந்து நீ நின்னுட் டியா? இல்லே, அவங்க நிறுத்திட்டாங்களா?"

பாலகன் வேதனே கசிய நகை சிந்தலானுன். "நான் தப்பு செஞ்சிருந்தால், அவங்க என்னே நிறுத்தியிருப்பாங்க!..." என்று நிறுத்தினுன். பிறகு தலேயைக் கம்பீரமாக நிமிர்த்திய வனுக, "நானேதானுங்க அண்ணுச்சி வேலேயை விட்டு நின்னுட்டேன்!" என்று முடித்தான்.

"காரணம்?..."

"தப்பு செஞ்சவங்க அவங்களாக்கும்!"

"ஓஹோ, அப்படியா?"

"ம்!...தினம் எழுபத்தஞ்சு காசு கூலி தாரதாகச் சொல்லி ஒரு வாரம் கொடுத்திட்டு வந்தவங்க மூந்தாநாள் ஐம்பது காசு போட்டுக் கொடுத்தாங்க. ஏன்னு காரணம் கேட்டதுக்கு, வியாபாரம் 'டல்' ஆயிடுச்சின்னு சொன்னுங்க. சொன்ன சொல்லைக் காற்றிலே பறக்க விட்டவங்ககிட்டே என் உழைப்பைச் சேதப்படுத்த என்னுேட மனசு ஒப்பலேங்க. கூலிக் காசைக்கூட வாங்காமல் ஓடியாந்திட்டேன்!"

"மெய்யாகவா?"

"பொய் பேசப் பழகல்லேங்க உங்க தம்பி!"

மெய்சிலிர்த்தது எனக்கு. கதைக்குக் கரு கொடுக்க வல்ல பேச்சல்லவா அது?—பிஞ்சு நெஞ்சின் நாணயப்பண்பு எனக்கு இதமாக இருந்தது இயல்புதான். ஏழைமையிலும் நேர்மை சிறப்பதென்பது சிலாகிக்கப் படவேண்டியதல்லவா?

புதிய காலடியோசை கேட்டது. ஏறிட்டு விழித்தேன். யார் அந்த அம்மணி?

"ஐயா, எம்மகன் குணசீலன் ரொம்ப கெட்டிங்க. சொன்ன அலுவலைக் கச்சிதமாய்ச் செஞ்சுப் புடுவான். தானும் தப்புச் செய்யமாட்டான். தப்புச் செய்யறவங்களையும் சும்மா விடமாட்டான்!...எங்க வயித்திலே வந்து பிறந்திட்டானுங்க! நாங்க ஏழை பாழைங்கதான். இவன் அப்பா ரிக்ஷா ஓட்டிப் பிழைக்கிறவருதான். ஆனுலும் நாங்க மானம் அவமானத்துக்குப் பயந்த ஜென்மங்களாக்கும்!... எங்க வீட்டுக்காரருக்குக் கள்ளுக்கடைதான் சதம். நானும் என் மகனும் என்ன பாடுபட்டும், அவரைத் திருத்தவே முடியலீங்க. அந்தத் தீவினை எந்த மட்டுக்கும் கொண்டு போகப் போகுதோ? தெரியலீங்க!...ஐயா, நீங்க பெரிய மனசுவச்சு எம்மகனுக்கு ஒரு வேலை போட்டுக் கொடுத்தால், எங்க வயிற்றுப்பாடு சங்கடமில்லாமல் நடக்குமுங்க!"

குணசீலனின் தாய் பேசினுள். அவளது அழகுக் கண்களிலேதான் எத்துணை நம்பிக்கை!...

நல்ல பிள்ளையைப் பெற்று, நல்ல பிள்ளையாக வளர்த்துள்ள அந்தத் தாயைக் கையெடுத்துக் கும்பிடவேண்டும் போலிருந்தது எனக்கு. பன்னிரண்டு வயசுச் சிறுவனின் தாயாகத் தோன்றவில்லை அவள். ஏதோ சின்னஞ்சிறுசு போலே, உடற்கட்டு விடாமல், எளிமையான இயல்பான எழில் குலுங்க, சீவிச் சிங்காரித்து நிற்கிறுள்!...பையனையும் பையனை ஈன்றவளையும் மாறிமாறிப் பார்வையிட்டேன். பிறகு, "அம்மா, கவலைப்படாதீங்க. உங்க பிள்ளைக்கு வேலை போட்டுக் கொடுக்கிறேன்," என்று அந்த அம்மணியை நோக்கிச் சொல்லிவிட்டு, குணசீலன் நின்ற திசைக்குப் பார்வையைத் திசை மடக்கிவிட்டேன். "தம்பி, உனக்கு தினம் எவ்வளவு சம்பளம் வேணும்?" என்று கேட்டேன்.

"அதை நீங்க முடிவு செய்யுறது தானுங்களே முறை?"

"ஓ, அப்படியா?...தினம் ஒரு ரூபாய் போட்டுக் கொடுத்திடறேன். போதுமில்லையா?"

"போதுமுங்க. போதும் என்கிற மனம் பொன் செய்யும் மருந்து அப்படின்னு படிச்சிருக்கேனுங்க நான்!" என்றுன் குணசீலன். விழிகள் கசிந்தன.

"உங்களுக்கு ரொம்பப் புண்ணியம் உண்டுங்க ஐயா. நான் புறப்பட்றேன்; போய்ச் சாப்பாட்டுக்கு வழி பண்ண வேணும்!"

அவள் புறப்பட்டாள்.

"நான் மத்தியானத்திலேருந்து வேலை பார்க்கிறேன், அண்ணுச்சி!"

"ஊம்!"

"கூலி வாங்கிட்டுப் போறப்ப, டீக்கின்னு ஒரு பத்துக் காசு கொடுக்கிறது வழக்கம் பழைய கம்பெனியிலே!...நான்

அந்தப் பத்துகாசை அப்படியே எங்கம்மாகிட்டே கொண்டு போய்க் கொடுத்திடுவேன். அப்பன்காரர் காசு கொடுக்காமலே, சம்பாதிச்சது பூராவுக்கும் கள்ளைக் குடிச்சிட்டு, சோத்துக்கு வந்து நிற்பார். பசிக்குச் சோறு போடாட்டா, குடி வெறியிலே அம்மாவை அடிச்சுப் போட்டுடும்!...ஆனதாலே, என்னோட அந்தப் பத்துக்காசு எங்க ஏழைப்பட்ட குடும்பத்துக்கு ரொம்பவும் உதவுமுங்க!" செவ்வதரங்கள் துடித்தன.

"நானும் தினக்கூலியோடு டீக்கு பத்துக்காசும் கொடுத்திடுறேனப்பா!"

குணசீலன் கையெடுத்துக் கும்பிட்டான்.

அட, கடவுளே!

நான் தெய்வமா, என்ன?

பசித்தது.

பசிக்கு விதி ஏது?

எங்கள் 'பார்ட்னர்' தங்கமுத்துவைச் சொல்லிக் குற்றம் இல்லை. அவர் சிபாரிசு செய்ததன் பேரில், வேலைக்குச் சேர்க்கப்பட்ட பொடியன் வேலப்பன் வேலை முடிந்து திரும்புகையில், தன்னுடைய நிஜார்ப் பையில் இருநூறு கிராம் பேபி மிட்டாய்ப் பாக்கெட்டைத் திருடி வைத்திருந்ததைக் கண்ட குணசீலன், அதைப் பறித்திருக்கின்றான். உடனே வேலப்பன் தன் குற்றத்தை உணராமல், குணசீலனை அடிக்க எத்தனிக்க, சினம் மூளப்பெற்ற சிறுவன் குணசீலன் குற்றவாளி வேலப்பனை நையப்புடைத்து விட்டானும்!

சீனி மூட்டைகள் எடுத்து வந்த நான் சேதி அறிந்தேன். என் நீதிவிசாரணை, பொடியன் வேலப்பனைக் குற்றவாளியாக நிருபித்தது. குணசீலன் பொய் சொல்லமாட்டான். நான் அறிவேன். உடனேயே, திருடிய மிட்டாயைப் பறித்துக் கொண்டு வேலப்பனை வேலையைவிட்டு விலக்கி விட்டேன்.

பாலமுருகனின் அபயக்கரம் ஏந்திய காலண்டரின் தாள்களை காலம் என்னும் செப்பிடு வித்தைக்காரன் மாய மாய்க் களவாடிக் கொண்டிருந்தான்.

சிறுவன் குணசீலன் ரொம்பவும் பொறுப்பாக இருந் தான். வாணலியில் காய்ச்ச சர்க்கரை அளக்க வரும் சோமு காலில் எற்றிக்கொண்டு வரும் மிட்டாய்களை என்னை முந்திக் கொண்டு பொறுக்கி எடுத்து டின்னில் போட்டுவிடுவான் அவன். மார்க்கெட், பஸ் ஸ்டாண்ட், இளங்கோ நகர் என்று நான் பிஸினஸ் விஷயமாக வெளியே போய்த் திரும்பும் போது, என்னைத் தேடி வந்த நபர்களின் பெயர்களைக் குறித்து வைத்திருந்து, அவர்கள் வந்த காரணத்தையும் விளக்கமாக எடுத்துரைப்பான்.

எனக்கு எவ்வளவோ வேலை மிச்சம். இந்தச் சில தினங் களாகத்தான் வாஸ்தவமாகவே எனக்கு ஓரளவு ஓய்வு கிடைத்து வருகிறது என்பதையும் சொல்லாமல் இருக்கக் கூடாது.

வேலை முடியும் நேரம்.

தொழிற்கூடத் தலைவர் வந்தார். 'பாய்லிங்' கணக்கு விவரம் சொன்னார்.

"நாளைக்கு எப்படியும் பதினெட்டு பாய்லிங் போட்டு விடவேணும். சர்க்கரை ஸ்டாக் இருக்கு. ஆரணிக்கு புது பார்ட்டிக்குச் சரக்கு அனுப்பவேணும். அட்வான்ஸ் வாங்கி யாச்சு," என்று குறிப்புக் கொடுத்துவிட்டு, குறிப்புக் கணக்கு நோட்டைப் பிரித்தேன். கூலி கொடுக்க வேண் டாமா? அங்கு தினக்கூலிதான். இடம் பாண்டிச்சேரி, பாருங் கள்!...அன்றாடக் கூலியைத்தான் தொழிலாளர்கள் எதிர் பார்த்தார்கள்!

வழக்கப்படி, கடைசியில் கூலி பெறுபவன் குணசீலன் தான்.

நான் படுக்கும் ஹாலை துப்புரவாகப் பெருக்கிவிட்டு, 'ஜக்'கில் நீர் நிரப்பி வைத்துவிட்டு, நின்றான் சிறுவன்.

ஒரு ரூபாயும் பத்துக்காசும் கொடுத்தேன்.

அவன் ஐம்பது காசை என்னிடம் திருப்பிக் கொடுத்து, "அண்ணாச்சி, இருநூத்தி அம்பது கிராம் பாலிஷ்மிட்டாய் கொடுங்க; எங்கம்மா ஆசையாய்க் கேட்டதுங்க," என்றான்.

அவன் தவறு செய்ய அங்கு எவ்வளவோ வழிகள் குறுக்கும் நெடுக்குமாகக் காத்திருக்கின்றன. அப்படியிருந்தும் அவன்—அந்தச் சிறுவன் நேர்மை தவறாமலே இதுவரை நடந்து வந்திருக்கின்றான். ஆகவே, அவனிடம் காசைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, இருநூற்றைம்பது கிராம் நிறுத்து எடுத்துக் கொள்ளுமாறு தெரிவித்தேன். அந்த மிட்டாய்க் கான கிரயத்தை 'விற்றுவரவு' வைத்துக்கொண்டு, அத் தொகையை என் கணக்கில் பற்று எழுதிக்கொள்ள வேண்டும்!

குணசீலன் காசை வாங்கிக்கொள்ள மறுத்தான். "உங்க அன்புதானுங்க எனக்கு வேணும். அது போதுமுங்க, அண்ணாச்சி!" என்றான். மிட்டாயை அள்ளி எடை போட்டான்.

ஆரஞ்ச் எஸ்ஸென்ஸ் எவ்வளவு சுகமாக இருக்கிறது!

ஐம்பது காசு உபரி விற்று வரவு வைத்துக் கொண்டேன்!

குணசீலன் இன்று வேலைக்கு வரக் காணோம்!

நித்தநித்தம் காலையில் ஏழரை மணிக்கே வந்து விடுவானே குணசீலன்?—ஏன் வரவில்லை?

ஒருநாள், இப்படித்தான் அவன் அலுவல் பார்க்க வர வில்லை. ஆனால், அவனுக்குப் பதிலாக, அவனுடைய 'லீவ் லெட்டர்' வந்துவிட்டது. வெகு வக்கணையாகவும் கூடிய மட்டும் தப்புத் தவறு இல்லாமலும் எழுதியிருந்தான்.

கசக்கிப் போடும் காகிதங்களை ஒன்றுவிடாது பிரித்துப் படித்துப் பழகியவன் ஆயிற்றே?

என் பாடு திண்டாட்டம் ஆகிவிட்டது.

ரோலர் சுற்றுப்பவனும் 'ஹீட்ரும்' எடுபிடி ஆளும் மிட்டாய்ப் பாக்கெட்டுகளை அவ்வப்போது ஒய்ந்த நேரங்களிலே அடுக்கிக் கொண்டிருந்தார்கள்.

தராசு என்னை ஆட்டிப் படைத்தது.

குணசீலனை ஏனோ என்னால் மறக்கவே முடியவில்லை. சதா அச்சிறுவனின் ஞாபகம்தான் நெஞ்சரங்கில் நிழலாடியது. ரத்தபாசத்தை அனுபவ பூர்வமாக அறியக் கொடுத்து வைக்காத நான், அந்த ஏழைச் சிறுவன் குணசீலன் வாயிலாக ரத்தபாசத்தை அனுபவித்து வந்தேன். அதற்கும் சோதனையா?

சோதனைக்கென்றுதான் வாழ்க்கை அமைக்கப்படுகிறதா?

சோதிப்பதற்கென்றுதான் தெய்வம் விளையாடுகிறதா?

ஒருநாள்:
"அண்ணைச்சி, நீங்க கதை எழுதுவீங்களாமே?"

"ம்!"

"அப்படின்னு, என்னைவச்சு ஒரு கதை எழுதுங்களேன்!"

"நேரம் கிடைக்கட்டும். கட்டாயம் எழுதுவேன்!"

முத்துப்பற்கள் கம்பீரமான அமைதிகொண்டு மூரல் சிந்தின.

அன்றொரு தினம், மத்தியான்னம் உணவுகொண்டு, ரிக்ஷாவில் திரும்பினேன்.

குணசீலன் ஓடிவந்து, "அண்ணைச்சி, பாரதி வீதியிலே ஒரு பெரிய வீடு அடுத்த வாரம் காலியாகுதாம். நம்ப

ரெண்டுபேரும் போய்ப் பார்த்து முடிச்சிடலாம். எங்க அண்ணியையும் பிள்ளைங்களையும் பார்க்க எனக்கு ஒரே துடிப்பாய் இருக்குங்க, அண்ணாச்சி!'' என்றான்.

"ஆகட்டும்,'' என்று சொல்லி, அவன் முகத்தை ஊடுருவினேன். பால்முகத்தில் நிரம்பி வழிந்த ஆனந்தச் சிரிப்பையும் மீறிய வகையிலே, ஒருவிதக் களைப்பும் வேதனையும் விரவிக் கிடக்கக் கண்டேன்.

"தம்பி, மதியம் சாப்பிடலையாப்பா?'' என்று பரிவு சூழக் கேட்டேன்.

அவன் சற்றே தயங்கினான். பிறகு "ஆமாங்க!'' என்றான்.

"ஏன்?''

"எங்க அப்பாரு குடிக்கிற பாவம் போதாதின்னு எங்கிட்டோ சுத்திக்கிட்டு இருக்காருங்க. காசு கொண்டாந்தால்தானே அடுப்பு எரியும்? அந்திக்கு நான் காசுகொண்டு போய்க் கொடுத்து, அரிசி வாங்கி உலை வைக்கவேணும். இதெல்லாம் எங்களுக்கு சகஜம்தானுங்க!...சமயாசமயங்களிலே எங்க அம்மாவோட மாமன் தங்கசாமி என்கிறவர் பணம் கொடுப்பார். அவர்தான் எங்கம்மாவைக் கல்யாணம் கட்டிக்கிட கனவு கண்டவராம்! அந்த ஆளும் ஊரிலே இல்லையாம்!...'' என்றான் அவன்.

"பணம் தருகிறேன். கொண்டு போய்க் கொடுத்திட்டு வா!'' என்று சொல்லி, பணப்பையைத் திறந்தேன்.

"வேண்டாங்க. வேலை முடிஞ்சு ஒரேயடியாக வீட்டுக்குப் போயிடுறேன்,'' என்று கூறிவிட்டான் குணசீலன்.

நினைத்துப் பார்த்தேன். நன்றாகப் புரிந்துவிட்டது எனக்கு. அந்தப் பிஞ்சு நெஞ்சத்திலே என்னவோ ஓர் ஏக்கம்—என்னவோ ஒரு வேதனை அரித்துக் கொண்டிருந்தது

என்கிற உண்மையை மட்டும் என்னுல் தட்டிக் கழித்திட இயலவில்லைதான்!

எங்கள் கம்பெனிக்குப் பின்புறம் இருந்த ஒதியஞ் சாலைக் குப்பப் பகுதியில்தான் குணசீலனின் குடிசை இருக்கிறதாம்!—அவனே ஒருமுறை சொல்லியிருக்கிருன்.

நான் அவனை எங்கே கண்டு தேடுவது?

எனக்கு இருப்புக் கொள்ளவில்லை!—'குணசீலன் ஏன் வேலைக்கு வரவில்லையாம்?'

காலம் ஆமையாகிறது!...

கூன்பிறை விண்ணிலே தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தது.

இராச் சாப்பாட்டை முடித்து கம்பெனிக்கு மீண்டேன் நான். மேஜைமீது விரிந்து கிடந்த கணக்குவழக்குகள் எனக்குப் பூச்சாண்டி காட்டின. இதற்கிடையே வீட்டு ஞாபகம் வேறு. வெற்றிலை போட்டுக்கொண்டே, கூடத்துக் கதவை உட்புறமாக நாதாங்கி இட்டு விட்டு, என்னுடைய அறைக்கு வந்தேன். படுக்கையை உதறினேன்.

அப்போது, ஒரு காகிதத்துண்டு மின்விசிறிக் காற்றில் சிதறியதை ஒளிச் சிதறல்கள் சுட்டின.

எடுத்தேன்.

"அன்புள்ள அண்ணச்சி!

ஓடிவந்து உங்கள் காலடியில் விழுந்து புலம்ப வேணுமென்றுதான் துடித்தேன். ஆனு, எந்த முகத்தை வைத்துக் கொண்டு நான் உங்களைப் பார்ப்பது? ஆனபடியால், இதை எழுதுகிறேன். இந்த லெட்டரை நீங்க பார்க்கையில், நான் இந்த உலகத்திலே இருக்கமாட்டேன்!

என் அம்மாவுக்கு அப்பா துரோகம் செய்தார். என் அப்பாவுக்கு அம்மா துரோகம் செய்தாள். ஆபத்துக்கு உதவி ஒத்தாசை செய்து வந்தார் தங்கசாமி. அந்தக் காரணத்தின் ரகசியம் புரிந்துவிட்டது எனக்கு. அப்பாவை யும் அம்மாவையும் சிறுபிள்ளையான என்னால் திருத்த முடியுமா?—நான் தோல்வி அடைஞ்சிட்டேன்.

அப்பாவும் அம்மாவும் பாவிகள்.

அந்தப் பாவிகளை ஒரு நொடியில் 'க்ளோஸ்' செய்துவிட முடியும் என்னாலே! — ஆனா, அந்தப் பாவத்தை எந்த ஜென்மத்தில் நான் கழிப்பது?

பாவிகளை ரட்சிக்க சிலுவைச் சாமி வருவாராமே?

எனக்கு அந்தத் துப்பெல்லாம் தெரியவில்லை! — புரிய வில்லை!

நான் சின்னப் பிள்ளை!...

மான அவமானத்துக்குப் பயப்படாத என் அப்பா—அம்மாவின் பிள்ளையாக உயிர் தரிக்க என் மனசு ஒப்ப வில்லை!...

சாவதற்கா வழி யில்லை இந்த லோகத்திலே?

உங்க தம்பியை மறந்திட மாட்டீங்களே, அண்ணாச்சி?

இப்படிக்கு,
உங்கள் தம்பியான,
**குணசீலன்.''**

வேர்வை ஆடிப்புனலாக ஓடியது. 'குணசீலா! தம்பி குணசீலா!' என்று என் உள்மனம் ஓலமிட்டுத் தவித்தது. கண்கள் பொடித்தன. குணசீலன்பால் நான் கொண்டிருந்த பாசம் என்னைப் பைத்தியமாக ஆக்கிவிடுமோ? அந்தப் பிஞ்சு நெஞ்சின் விதி எப்படி விளையாடி விட்டது!

வெளியே வந்தேன்; நடந்தேன்.

கதையிலே தன்னை எழுதச் சொன்னான் குணசீலன்!—இப்போது, அவனே கதையாகி விட்டானே? கதை கொடுத்தும் விட்டானே?...தெய்வமே! பாசம் என்ற சக்தியை ஏன் படைத்தாய்?—மனிதர்களைப் பைத்தியமாக்கவா? பாசத்தை அறிந்தவன் நான்; பாசத்தை எழுதியவன் நான். ஆனால், தெய்வம் போல எங்கிருந்தோ வந்த அந்தச் சிறுவன் குணசீலனை ஏன் என் முகத்தில் காட்டினாய், முருகா... குணசீலா!...தம்பி!

திண்டிவனம் நெடுஞ்சாலையை அடுத்திருந்த நரிமேட்டுப் பகுதியில் ஒரே ஜனக் கூட்டம் தெரிந்தது.

எட்டிப் பார்த்தேன்:

குணசீலன் சுய நினைவிழந்து மண்ணில் கிடந்தான். மேனி தெப்பமாக நனைந்திருந்தது.

"குணசீலா! தம்பி!" என்று உணர்ச்சிப் பெருக்குடன் அலறினேன்.

குணசீலன் விழிகளைத் திறக்கவில்லை!

நான் தவித்தேன்.

"உங்களோட தம்பியா ஐயா இந்த விசுக்கான்?"

"ஊம்!"

"இவ்வளவு தங்கமான அண்ணன் இருக்கையிலே இந்தப் பிள்ளை அனாதை மாதிரி — நாதியற்ற அனாதை மாதிரி நரிமேட்டுப் பாதாளக் கேணியிலே தற்கொலை செஞ்சுக்கிட ஏன் விழுந்தானும்?" என்று அனுதாபப்பட்டார் நல்ல வழிப் போக்கர் ஒருவர்.

"தம்பி!...குணசீலா!" என்று உயிரின் பலத்தை ஒன்று திரட்டி, அந்தப் பலத்தில் அன்பின் பாசத்தையும் கூட்டிக் கலந்து அழைத்தேன். சாமான்யமான அழைப்பா அது?...

தெய்வமே!...

உயிரின் அழைப்பு — விளிப்பு கேட்டிருக்க வேண்டும்!

பூ இதழ்கள் பூமொக்குகளாக மலர்ந்தன. சிறு விழிகளின் விரிப்பில் அமைதி மண்டியது; ஆனந்தம் நிழலாடியது. "ஆ! அண்ணாச்சியா!" என்று விம்மிப் புடைத்தவனாக, மெல்ல மெல்ல—மெள்ள மெள்ள தலையை எழுப்பி, எழுந்து உட்கார எத்தனம் செய்தான், குணசீலன்.

"தம்பி!..."

"அண்ணாச்சி, வேடிக்கையான இந்த உலகத்திலே எனக்குக் கூட ஒரு துணை கிடைக்க ஆண்டவன் மனசு இரங்கியிருக்கானே!...அந்த வரைக்கும் அந்தத் தெய்வம் என்னையும் கூட ரட்சிக்க மனம் இரங்கியிருக்கத் தான் வேணும்! ஆமாங்க, அண்ணாச்சி!..."

தெய்வமே!...

எனக்குப் பேசத் தெரியவில்லை! நல்லகாலம், விம்மவாவது தெரிந்ததே!...

# அவள்தான் விதியோ?

இடம் பிசகவில்லை!...

திறந்து விடப்பட்ட 'டாட்ஜ்' வண்டியின் பின்புறத்துக் கதவு வழியே குனிந்த தலையோடும், குனியாத கவனத் தோடும் மெதுவாக இறங்கினார் சபேசன். மூச்சு இறைக்க, மெள்ள மெள்ள முதுகை நிமிர்த்தி விட்டார். ஆயாசமும் ஆற்றாமையும் மேலிட்டன. ஸில்க் ஜிப்பா போட்ட சோளக் கொல்லைப் பொம்மையாகவா காட்சி தருவார்? கூடுதல் ரத்த அழுத்த நோய், சர்க்கரை வியாதி முதலான பணக்கார நோய்கள் ஆட்டிப் படைத்திடும் பயங்கரச் சோதனைகளுக்கு ஆளாகி நின்றவர் பின் எப்படி நிற்பார், பாவம்?...

அந்தப் பங்களாவின் 'போர்டிகோ' வந்தது.

சபேசன் நின்றார்; வெட்டிப் பிளந்துக் கொண்டிருந்த நெடுமூச்சு மட்டும் நிற்கவில்லை. நெஞ்சைப் பற்றிக் கொண் டார் அவர். 'இப்போது நான் செய்யப் போற அந்தக் காரி யம் நல்லபடியாக முடிஞ்சிடுமா? வினைதீர்க்கும் முருகா, இனியும் இந்தப் பாவியைச் சோதிப்பது தர்மமாகுமா? பட் டது போதும். இனி இந்தச் சாண் உடம்பில் வெறும் எலும்

டும் தோலும்தான் மிச்சம்!...' அந்தி மாலையைத் தழுவித் தவழ்ந்து வந்த இளந்தென்றல் எங்ஙனம் அவருக்கு இதமாக இருக்க முடியும்?

புதிய மனிதரைக் கண்ட அல்சேஷன் பெருங்குரலெடுத்துக் குரைக்கத் தலைப்பட்டது. பிணைப்புச் சங்கிலியை அதனுல் அறுக்க முடியாது; தோற்றது.

முதியவள் ஒருத்தி விரைந்து வந்தாள். அவள், முகம் கலவரம் அடைந்திருந்த சபேசனை ஏறஇறங்கப் பார்த்தாள். முகக்குறிகள் சலனமடைய, "யாருங்க நீங்க?" என்று விசாரித்தாள்.

"மாம்பலத்திலேயிருந்து வர்றேன். என்பெயர் சபேசன். கமலாவைப் பார்க்கவேணும்!" என்று விடை சொன்னுர் சபேசன். குரலில் அவரையும் மீறி ஏற்பட்டுவிட்ட நடுக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை அவரால்.

'ஓஹோ!...' என்று சொன்னவள் தொடர்ந்து, "எஜமானி அம்மாவைப் பார்க்க வேணுமாக்கும்?..." என்று சுவாரசியம் இழந்த குரலிலே கேட்டாள். பிறகு, "சரி; அப்படி உட்காருங்க," என்று கூறிவிட்டாள் வேலைக்காரி.

சபேசன் கூடை நாற்காலியில் உட்கார்ந்தார். அது முள்ளாக உறுத்தியது. தலைநிமிர்ந்து உட்கார முயன்முர். முடியவில்லையே!—'கமலா!...கமலா!...சாவின் வாசல்படியிலே நின்னுகிணு இருக்கிற என்னுேட இந்தப்பயங்கர நிலைமைக்கு அனுதாபப்பட்டாவது மன்னிப்பாயல்லவா இந்தப் பாவியை?' வெளுத்தும் குழிபறித்தும் காணப்பட்ட கண்கள் தளும்பத் தொடங்கின. நெற்றித் திட்டில் பட்டை பட்டையாகப் பொலித்த திருநீற்றுக் கோடுகளில் வேர்வை வழிந்தது.

இந்தப் பங்களாவிலே எவ்வளவு அழகான அமைதி விளையாடிக் கொண்டிருக்கிறது!...

சபேசன் உயிர்க்கழுவில் ஊசலாடிக் கொண்டிருந்தார்; அவருடைய மனமும் மனச்சாட்சியும் விம்மிப் புடைத்து வெடித்தன. 'கமலா!'—நெஞ்சிலும் நினைவிலும் பிரசன்ன மான கமலாவின் அந்த 'ஆசை முகம்' அப்போதும் அவரை நெருஞ்சி முள்ளாகக் குத்திக் குதறாமல் தப்பி விடவில்லை. நான் பாவி! அந்தப் பாவம்தான் என்னை ஓட ஓடத் துரத் திக் கொண்டே வந்து இப்போது சாவின் திருச் சந்நிதானத் தில் உடும்புப் பிடியாகப் பிடித்து வைத்துக்கொண்டு வேடிக்கை பார்க்கிறதோ?—வேடிக்கை காட்டுகிறதோ?

அந்தப் பாவம் சாமான்யப் பட்டதா?

செல்வச் செருக்கும் அனுசரணைச் சூழலும் இணைந்தும் பிணைந்தும் சபேசனின் இளமைப்பிராயத்துப் பருவவெறியை தலைவிரித்தாடச் செய்துகொண்டிருந்தகலாம் அது. அப்பாவி அப்பாவின் மரணத்துக்குப் பின், சபேசனே அந்த மாளிகை யின் ஏகச்சக்கராபதியாகிவிட்ட அத்தருணத்தில்தான் அவனு டைய அச்சுக் கூடத்திலே அச்சுக் கோக்கும் பணிக்கெனச் சேர்ந்த கமலாவைக் கண்டதும், அவனுக்குச் சேற்றில் முளைத்த செந்தாமரை மட்டுமில்லாது, நத்தை வயிற்றில் பிறந்த முத்தும் அவன் நினைவை ஆட்கொண்டதோடு ஆட்டி யும் படைத்தன.

கமலாவின் இயற்கை எழில் மகத்தானது ஆயிற்றே!

சபேசன் கிறுக்கு ஆனான். பின், கண்ணி வைக்காமல் ஓய்வானா? கண்ணியில் புள்ளிமான் சிக்கியது. "அன்புக் கமலா! சீமான் வீட்டுச் செல்வமாகிய என் சொத்து சுகம் அத்தனையுமே இனிமேல் உன் காலடிக்கே அர்ப்பணமாக்கும்! மணந்தால் உன்னையே மணப்பேன்!...நமக்குள்ளே இனி ஜாதியோ அந்தஸ்தோ, அல்லது விதியோ குறுக்கிடவே முடி யாது. இது சத்தியம் என்னை நம்பு, கமலா!" என்று 'டய லாக்' பேசினான்.

கமலா நம்பினாள். உள்ளத்தைக் கொள்ளை கொண்டவ னுக்கு உடலையும் கொள்ளை கொள்ளச் செய்து விட்டாள்

அப்பாவிக் கன்னி. மறுநாள் தாலியும் கழுத்துமாக சமுதாயத்தின் முன்னே விளங்கப் போவதாகக் கனவு கண்டு கொண்டு சபேசனைச் சந்தித்தாள் அவள். அங்கே அவளுக்குக் கிடைத்த பரிசு 'வேசி' என்னும் பட்டம்தான்! அடப்பாவி! உன் பணக்காரப் புத்தியைக் காட்டி விட்டாயே? அன்றைக்கு நீ செய்த சத்தியத்தை தெய்வ வாக்காக நம்பி மோசம் போனேனே? ஐயையோ!...நம் சினிமாக்களிலே இப்படிப்பட்ட பயங்கரங்களைக் கண்டிருந்தும் ஏமாந்து விட்டேனே?...என்னை வஞ்சித்த—எனக்குத் துரோகம் செய்த நீ எந்நாளுமே விளங்கவே மாட்டாய்!...உன் குடும்பமும் உருப்படாது! ஆமாம்! என்னுடை ஆவி உன்னை நீ சாகிறமட்டும் துரத்திக்கினே இருக்கும் என்கிற விதியை மட்டும் நீ மறந்து விடாதே!" என்று 'சாபம்' கொடுத்து விட்டு, அவன் கன்னங்களில் நாலு அறைகளையும் கொடுத்துவிட்டு மறைந்தாள் கமலம்.

கமலம் இட்ட சாபம் தான் சபேசனை ஓட ஓடத் துரத்தி வருகிறதா?

இல்லையென்றால், நாள் பார்த்து நட்சத்திரம் பார்த்துத் திருப்பூட்டிய பெரிய இடத்தைச் சேர்ந்த ஆருயிர் மனைவி கோமதி திடுதிப்பென்று மாரடைப்பால் மரணம் அடைந்திருப்பாளா? கருவேப்பிலைக்கொழுந்துபோன்று பிறந்த ஒரே செல்வன் சேல்வராஜ் திருமணத்துக்கு நின்ற நேரத்தில், தொழிற்சாலையிலிருந்து காரில் திரும்பிக் கொண்டிருக்கையில் விபத்துக்குப் பலியாகி இருப்பானு? அன்றைக்கு ஏழைப் பெண் கமலாவுக்குச் செய்த நம்பிக்கைத் துரோகத்தை-நம்பிக்கை மோசத்தை எண்ணி எண்ணி உருகி உருக்குலைந்து கொண்டிருக்கும் போது, இத்தகைய குடும்ப இழப்புகளின் மகத்தான—ஈடுகட்ட முடியாத சோகம் கூட்டுச் சேர்ந்து கொண்டு அவரது உள்ளத்தையும் உடலையும் அரித்தெடுத்து எலும்பும் தோலுமாக்கி மரணத்தின் நிலைப்படியில் கொணர்ந்து நிறுத்தியிருக்குமா?—செய்த பாவத்துக்கு மன்

னிப்புக் கோரிக் கழுவாய் தேடிக்கொள்ளாவிட்டால், நல்ல மூச்சு எப்படிக் கிட்டமுடியும்? நல்ல சாவு எங்ஙனம் கிடைக்க வாய்க்கும்? ஐயோ, க ம ல ா!...ஐயையோ, தெய்வமே!...

"கமலா!...கமலா!..."

சபேசன் சுயப்பிரக்ஞையுடன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்; கமலம் படுரோசக்காரி!—தன் பெண்மையின் கற்பு பலியாகிவிட்ட அநியாயத் துயரத்தைத் தாங்காமல் அவள் கடலில் குதித்துத் தற்கொலை செய்து கொண்டிருக் கவே வேண்டுமென்றுதான் அவர் முடிவு கட்டியிருந்தார். ஆனால், அதுவரை அந்த கமலத்தைப் பற்றின தகவல் எதுவும்கிட்டாதிருந்த நேரத்திலே சமீபத்தில் ஒருநாள் 'ஆபட்ஸ் பரி'யில் நிகழ்ந்த மணவினை விழாவொன்றில் ஏழைமகள் கமலாவை பணக்காரியாக அவள் கணவன் அருகில் தோளோடு தோள் பின்னி நின்றுக்கொண்டிருக்க கண்டதும், சபேசன் அடைந்த வியப்பைக் காட்டிலும், அடைந்த சஞ்சலமும் உறுத்தலுமே அதிகமாயின. கமலாவை அடிநாளிலேயே சந்திக்கும் ஒருவாய்ப்பைத் தெய்வம் அருளியிருந்தால் அவள் காலடியில் விழுந்து கதறி மன்னிப்பு வேண்டியிருந்தால் ஒருவேளை, இப்படிப்பட்ட அவலங்களுக்கெல்லாம் தான் பலியாகாமல் தப்பி விட்டிருக்கக் கூடுமோ?...

அரவம் கேட்கவே, அரவம் கண்ட பாங்கில், சபேசன் தலையை நிமிர்த்த முயன்றார். வெட்கமும் வேதனையும் உறுத்தலும் விழிகளில் நீர் தெளித்திருக்க வேண்டும்.

"வாங்க ஐயா!"

'டீக்'காக உடுத்திக் கொண்டிருந்த ஒரு மனிதர் புன்னகை துவங்கிடவந்தமர்ந்தார்.

வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருந்த சபேசனுக்கு வேர்வை ஆறாகப் பெருக்கிற்று.

“ஐயா நீங்க யார்?”

“நான்... சபேசன்!”

“கோமதி செல்வராஜ் இண்டஸ்ட்ரீஸ் முதலாளி!”

“ஓஹோ! அப்படீங்களா?”

சபேசன் உடல் நடுங்க தலையை உலுக்கி வைத்தார்.

“யாரைப் பார்க்கணும், ஸார்?”

‘கமலாவைப் பார்க்கவேணும்! நீங்க...?’

“என் பெயர் பரமசிவம். இங்கு லஸ்ஸிலே நடக்கிற கமலாபவனோட ஓனர் நான். நான் தான் கமலாவோட ஹஸ்பெண்ட். ஆல்ரைட்! என்ன விசேஷம்!...”

“ஒரு அவசரக் காரியமாக கமலாவை நான் உடனடியாகச் சந்திக்க வேணும்!...”

“அப்படிப்பட்ட அவசரக் காரியம் என்னவென்று நான் அறியலாமா, மிஸ்டர் சபேசன்?”— நரை மயிர்களை வெகு லாவகமாகக் கோதி விட்டுக் கொண்டார் பரமசிவம்.

சபேசன் தவித்தார். நடந்த கதையை— பாவக் கதையை— அநீதிக் கதையை எப்படிச் சொல்வது? ஒரு சமயம், அந்தக் களங்கம் குறித்து தன் கணவனிடம் கமலா இது வரை வெளியிடாமலே இருந்திருந்தால்?... வழிந்த வேர்வையை வழித்துவிடக் கூட சிந்தை இழந்திருந்த அவர் பரமசிவத்தை ஏறிட்டு ஊடுருவிப் பரிதாபமாகப் பார்வை யிட்டார். “ஐயா, உங்க அன்பு மனைவி கமலாவை ஒரு ஐந்து நிமிஷம் மாத்திரம் நான் தனியாகச் சந்திக்கிறதுக்கு நீங்க பெருமனம் கொண்டு பெர்மிஷன் கொடுத்தால், அதன் மூலம் மிச்சம் மீதமாக நின்று, உயிருக்கு மன்றாடிக்கிணு இருக்கக் கூடிய இந்தப் பாவியைக் கடைத் தேற்றும் புண்ணியம் உங்களுக்கும் கிட்டலாம், ஐயா!... தயவு செய்து மேற்கொண்டு எதையும் இப்போது

என்னிடம் கேட்காதீர்கள், மிஸ்டர் பரமசிவம்!" என்று ஈனஸ்வரத்தில் பேசினார் அவர். மூச்சு வாங்கியது.

பரமசிவம் சிரித்தார், விநயமாக.

சபேசன் கண்களை அகல விரித்துப் பரமசிவத்தை நோக்கிய தருணத்திலே, பரமசிவத்தின் அழகான முகம் இருளத் தொடங்கியதைக் கண்டு பதறினார்.

"ஆல்ரைட்! வாங்க என்னோடு! கமலாவை மீட் பண்ணலாம். ஊம் எழுந்திருங்க சபேசன் ஸார்!"

ஒளியின் நிழலைத் தொடர்ந்தார் சபேசன்.

"மிஸ்டர் சபேசன், அதோ அந்தக் கூடத்திலே தான் கமலா இருக்கிறாள். நீங்க குறிப்பிட்ட பிரகாரம் உங்க பேச்சை ஐந்து நிமிஷத்துக்குள்ளே முடிச்சிட வேண்டியது தான் நாகரிகம். புரிந்ததல்லவா?.

"ஆகட்டும் ஸார். உங்க பெருந்தன்மைக்கு ரொம்பவும் நன்றி, பரமசிவம் ஸார்!"

அந்தக் கூடத்தின் மூடிக்கிடந்த கதவுகளை கைகள் பதைக்க திறந்து விட்டார் சபேசன். மறுகணம், "கமலா!... கமலா!" என்று விம்மிப் புடைத்து வீரிட்டபடி, கூடத்தைத் துழாவினார் அவர். பாதாதிகேசமாக அவர் உடல் நடுநடுங்கத் தொடங்கி விட்டது. "ஐயோ கமலா!... உன்னை இந்தக் கோலத்திலே காணத்தானா நான் உயிரைக் கையிலே பிடிச்சுக்கினு ஓடோடி வந்தேன்?... ஐயையோ, தெய்வமே!..." என்று வீரிட்டுக் கதறிய வண்ணம் தரையில் வீழ்ந்தார்.

தலைமாட்டில், கமலா புன்னகையும் புதுநிலவுமாகக் காட்சி தந்தாள்—நிழற்பட உருவத்தில்!...

"ஆமாம், நான் பாவியேதான். அதனால்தான் இந்தப் பாவியை மன்னிக்கிறதுக்கு மனசு ஒப்பாமல்தான் நீ இறந்து

போயிருக்கவேணும்!... இந்தப் பாவியை யார் மன்னிப்பது? இத்தனைக் காலமாக நான் அணு அணுவாகச் செத்தது போதாது!...இன்னமும் தினமும் செத்துப் பிழைச்சு கடைசியிலேதான் நான் சாகவேணும்! அப்பதான், தெய்வமும் மனச்சாட்சியும் என் பாவத்தை மன்னிக்க ஒப்பும்! ஆமாம்!"

கதறித் துடித்துக்கொண்டே எழுந்து வெளிப்புறம் ஓடோடி வந்தார் சபேசன்.

ஹால்.

அங்கே கண்ணீருடன் நின்றார் பரமசிவம்.

"ஐயா, தெய்வம் மட்டுமல்ல, கமலாவும் என்னைச் சோதிச்சிட்டுது! நான் பாவியிலும் கேடுகெட்ட பாவி? இந்தப் புண்ணிய பூமியிலே இனிமேலும் நான் கால்தரிச்சு நிற்பது தர்மமல்ல; நாகரிகமும் அல்ல! நான் வருகிறேன், பரமசிவம் ஸார்!..."

பரமசிவம் தலையை நிமிர்த்தி, "மிஸ்டர் சபேசன், என்ன விஷயமாக நீங்க என் கமலாவைச் சந்திக்க வந்தீங்க என்கிற விவரத்தை இனியாகிலும் என்கையிலே சொல்லலாமா?" என்று கேட்டார்.

விதியைக் கண்டு குலைநடுங்கியவராக, "ஒன்றுமில்லேங்க ஐயா. கமலா என் விளையாட்டுத் தோழி! அது கையிலே மணல் வீடுகட்டி விளையாடினப்போ 'டூ போட்'டுட்டேன். அந்த 'டூ' வைக் கலைச்சு 'ராசி' ஆகிட்ணும்னு தான், சாவோடு போராடிக்கினே ஓடோடி வந்தேன், ஸார்!" என்றார் சபேசன்!...

"ஓஹோ!... அப்படீங்களா கதை?... ஐயோ, பாவமே!..."

திருவாளர் சபேசன் இப்போது அங்கு இல்லை!...

மகாத்மா அறக்கருணை துலங்கப் புன்னகை செய்து கொண்டிருக்கிறார்!

பூஜைக் கூடத்திலே, விநயம் நிரம்பிய சிரிப்பு ஜோடி கூடி ஒலித்தது; எதிரொலித்தது!

"அத்தான், அன்றைக்குப் பொய் சொல்லி ஏமாற்றி, என்னோட புனிதமான கற்பைச் சூறையாடி வஞ்சித்தார் இந்தப் பாவி சபேசன். அந்தக் கொடுமையைத் தாளமாட்டாமல், அப்பவே கடலிலே குதிச்சுத் தற்கொலை செஞ்சுக்கிட இருந்த என்னைத் தெய்வம் போல வந்து காப்பாற்றி என்னோட சோகக்கதையை கேட்டுத் துடிச்சு எனக்குப் பெருந்தன்மையோடவும் மனிதத் தன்மை யோடவும் புகலிடம் தந்தருளிய 'மனிதர்' நீங்க என்கிற ரகசியம் தெய்வத்துக்கும், தெய்வ மனிதர் மகாத்மாவுக்கும் தானே புரியும்?..."

"வாஸ்தவம், கமலா!"

"டியர் அத்தான்!... மன்னிப்புக்கும் அப்பாற்பட்ட இம்மாதிரியான நேர்மையற்ற—நியாயமற்ற—தருமமற்ற நாகரீகமற்ற தவறுகளைச் செய்யும் பாவிகள், திருவாளர் சபேசன் மாதிரி நித்த நித்தம் அணு அணுவாகச் செத்துக் கொண்டேயிருக்கவேண்டியதுதான். அந்தப் பொய் மனிதர் களுக்கான ஆயுள் தண்டனை என்கிற சமுதாய நீதியின் விதியை இப்போதாகிலும் சபேசன் அந்தரங்கப் பூர்வமாக உணர்ந் திருப்பாரோ, என்னவோ?... பாவம்!"

கமலா—திருமதி கமலா பரமசிவம், அட்டகாசமாகவும் தீர்த்தாட்சண்யமாகவும் சிரிக்கிறாள்;—சிரித்துக் கொண்டே இருக்கிறாள்!

அவன்தான் விதியோ?...

விதிதான் அவனோ?...

# சகடயோகம்

திருவாளர் மெய்கண்ட பிள்ளைவாளுக்கு ஜாகை திருக் காட்டுப்பள்ளியில் தான் என்றாலும், அவரது சொத்து—பத்து மட்டும் தஞ்சாவூரில் தான் ஏகமாகச் செழித்துத் தழைத்து வந்தன. இதுதான் உண்மை. ஆனால், இதைக் காட்டிலும் இன்னொரு பெரிய உண்மையும் அவரது பிறந்த மண்ணில் வாசம் இருந்தது. அது: மண் வளம் கொழித்திடும் திருக்காட்டுப்பள்ளி வயல்களிலேதான், நெல் மணிகளோடு அதிர்ஷ்டச் சுடர்களும் விளையலாயின. விளைந்தது ஓரிடம், விதைத்தது மற்றோர் இடம். இருக்கட்டுமே!

திருவாளர் மெய்கண்ட பிள்ளை 'மெய்'யை வாழ்த்தி வணங்குபவர். இந்த விஷயம் துல்யமான நிஜம் என்பது புலனாக, 'வழிகள்' பல திறந்து வைக்கப்பட்டிருக்கும். வழிகள் என்றால், 'எந்த வழிகள்?' என்றுதானே திகைக்கி றீர்கள்? பேஷ்!

போகும் வழிக்குப் புண்ணியம் சம்பாதிக்க வேண்டியதே தமது லட்சியம் என்பது பிள்ளைவாளின் அழுத்தமான கருத்து. அதன் நிமித்தமே அவர் உண்மை வழிபாட்டு வழி களிலே தீவிரமான கவனம் செலுத்தி வந்தார். அதற்கான செயல்களில் இறங்கி நிற்கையில் தான், அவருக்கு

அவரது தந்தையின் 'டாக்கீஸ்' கட்டடம் கை கொடுத்தது. அதற்கு அவர் தோள் கொடுத்தார். 'மெய்கண்டான் தியேட்டர்' உருவாயிற்று.

மார்க்கெட்டிலே காய்கறியிலிருந்து 'இறைச்சி' வரை வாங்கும் பொது ஜனங்கள் சகலத்தனை பேர்களும், அந்தச் சினிமாக் கொட்டகையை ஒரு தரம் நின்று முறைத்துப் பார்த்து விட்டுப் போகாமல் இருந்ததில்லை; இருக்கவும் மாட்டார்கள். இதற்குக் காரணம் என்னவென்று தெரியுமா?

அது..........

அந்தத் தியேட்டரின் வெளி முகப்பில், "உண்மையே தெய்வம்; வாய்மையே வாழ்வு!" என்ற வாசகங்கள் பிரகதீசுவரர் கோயில் கலசம் போல் துலாம்பரமாகப் பளிச்சிட்டன. இம்மாதிரியான உபதேசங்களை வாழ வைத்து, அதன் மூலம் தாமும் வாழ எண்ணியவர் பிள்ளைவாள்.

உண்மையைச் சோதித்துப் பார்க்கும் அளவுக்குத் துணிச்சல் பெற்றவர் பிள்ளை. பொய்களுடனே புழுங்கி வந்த சகடயோகத்தை அழைத்துக் காப்பி வாங்கிக் கொடுத்து, அவரையே மானேஜராக்கி, அதன்பிறகு தாம் எழுதிய மணிவாசங்களின் மணியோசையைக் கேட்கச்செய்த துணிச்சல் பேர்வழி ஆயிற்றே அவர்! வாரம் ஒருமுறை வந்து தஞ்சையில் தங்கி, சகடயோகத்தையும், சகடயோகத்தின்பால் தொடர்பு பூண்ட 'உண்மை-பொய்ப் படலத்'தின் நிகழ்ச்சிகளையும் பரிசோதனை செய்து திரும்புவது முதலாளியின் வழக்கம்.

சகடயோகம் இருக்கிறாரே அவருக்குக் காசுதான் குறி; காசுதான் கடவுள்! அதற்காக, அவர் சட்டத்தின் பேரில் கைவைக்க முடியவில்லை. தமாஷ் வரி கூடிய டிக்கெட்டுப் புத்தகங்களில் 'தமாஷ்' பண்ண முடியவில்லை. அவர் பொறுப்பில் நடந்த பெட்டிக்கடையிலும், 'கான்டீ'னிலும்

கை வைத்தார். 'காம்ப்ளிமெண்டரி டிக்கெட்' வழங்கி பெரிய மனிதர்களின் அன்புக்குப் பாத்திரமானுர். அதன் பலனுக, ரகசிய உதவிகள் கிடைக்கப் பெற்றுர். சட்டம் நாற்புறமும் காவல் புரிந்து கொண்டிருக்க, ஆண்டவன் ஒருருவாக உண்மையின் வடிவாகச் சிரித்து நிற்க, ஆஜானுபாகுவாக நிமிர்ந்து நின்று கொண்டிருந்த அந்தத் தியேட்டரின் ரகசிய அறையில் அன்பர் சகடயோகம் சட்டத்தை உடைக்கும் வகையில் மதுப்புட்டிகளை உடைத்து வந்த சம்பவங்கள், அவருக்கு வேண்டப்படாதவர்களால் தூது அனுப்பப்பட்டு, அவை பிள்ளைவாளின் தன்மானம் மிக்க உணர்வுகளைச் சுண்டியிழுத்தன......!

மெய்கண்ட பிள்ளை முகப்பில் தொங்கிய உண்மை விளக்கப் படங்களை எடுத்துக் கொண்டு வந்து, உள்ளே மானேஜர் அறையில் தொங்கவிட்டார். சகடயோகத்தைக் கூப்பிட்டனுப்பினுர். அவர் வந்தார். அவருடன் கூட, அந்தச் சிறுவனும் வந்தான். அவன் அவருக்கு எடுபிடி ஆள்.

தியேட்டருக்குச் சொந்தக்காரர் அந்தப் பொடியனைப் பார்த்தார். ஆழமான பார்வை அது!

"பய யாரு?"

"தெக்குச் சீமைப் பயலுங்க. பேரு சங்கிலி. கை சுத்தம் ஜாஸ்தியுங்க, முதலாளி...!"

முதலாளியின் அந்தரங்க மேடையில் அமைந்திட்ட குற்றவாளிக் கூண்டில் தான் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துப்பு அல்லது ரகசியம், அல்லது உண்மையை அறிந்து கொள்ள சகடயோகத்துக்கு வயசு போதாது!

"டேலே...!"

காவற்காரன் வந்தான்; பவ்யமாகக் கைகட்டி நின்றுன்.

"எங்கேடா நம்ப பயல்...?"

"யாரைச் சொல்றீங்க?"

"அதாண்டா சங்கிலி!"

சங்கிலி ஓட்டமாக ஓடி வந்தான். பத்து வயசுதான். வறுமைக் காலத்தை ஒருபொருட்டாகக் கருதியிருக்கவில்லை அவன் என்பதை, அவனது முகத் தெளிவு சுட்டியது. அழுக்கு நிஜார்; புதுச்சொக்காய். பரட்டைத் தலையை எண்ணெய் எழிலுறக் காட்டிற்று.

பத்து மணிச் சங்கு ஊதியது.

வெய்யில் சுள்ளாப்புப் பெற்றது.

பனி வாடை கலந்தது.

வாசற்புறத்தே சீன எதிர்ப்புக் கண்டனத் தொனி விண்ணைச் சாடியது.

சங்கிலி கை கட்டி நின்றவன், கோஷங்களைக் கேட்டு வாசலுக்கு விரைந்து வந்து, "சீனுக்கர்ரன் ஒழிக!" என்று கூவி விட்டு, அதன் உணர்வில் தன் கடமையை ஓரளவேனும் நிறைவேற்றிக் கொண்டவன் மாதிரி திருப்தி அடைந்தவனாக மறுபடியும் உள்ளே சென்று, பழைய இடத்தில் நின்ற போது, அவன் பார்வையில் அருவருக்கும் கொடூரமான பார்வையுடன் சுவரில் காட்சி தந்த வில்லன் ஒருவனின் படம் தான் தென்பட்டது. பையனுக்குச் சிரிப்பு புறப்பட்டது. அடக்கிக் கொண்டான். முதலாளியின் கோபம் தேங்கிய முகத்தை இந்த ஒரு மாசத்தில் அவன் ஒரு வாரம் கூடக் கண்டதில்லையே?...

'என்ன சமாச்சாரம்......ஐயா கோபமாயிருக்காங்களே?'

"ஐயாவுக்குக் காப்பி வாங்கியாரட்டுமுங்களா?" என்று மானேஜரின் காதைக் கடித்தான் சங்கிலி.

சகடயோகம் மூச்சுக் காட்டினால்தானே?

“ஏம்பா, இப்ப நீ என்ன சொல்றே?”

“சத்தியமான பேச்சுங்க. நான் தப்பு தண்டா ஏதும் செஞ்சதில்லீங்க! யாரோ வேண்டாதவங்க உங்ககிட்டே கோள் மூட்டியிருக்கிறானுக...!”

எட்டு முழச் சுவரைத் தாண்டியிருந்த வெளியில், ஒரு பரிவாரம் நின்றது.

பிள்ளை, நீறு பூசிய நெற்றியைப் பிடித்துக் கொண்டே ஒரு சில கணங்கள் வீற்றிருந்தார். ஆசனம் சுட்டது. நெஞ்சுச் சூடு சும்மா விடுமா? மறுபடியும் மறுபடியும் சகடயோகத்தை ஓரக் கண் கொண்டு பார்த்தார். ‘ஆளு நடிக்கிறான்!...ம்...நடிக்கட்டும், நடிக்கட்டும்...!’

“ஓய்! உள்ளே வாரும் ஓய்!...” என்று சகடயோகத்தை அழைத்துக் கொண்டு உள்ளே நடந்தார் மெய்கண்ட பிள்ளை. பட்டுச் சட்டை, அந்தக் கறுப்பு மேனிக்கு கன பொருத்தம். அதாவது, கன சரீரத்துக்குக் கனபொருத்தம்!...

இருட்டறைகள் சிலவற்றை வெளிச்சத்தைப் போட்டுத் தேடினார் அவர். ஒரு தடயமும் கிட்டவில்லை!

மானேஜரின் முகத்தில் அப்பொழுது தான் புதுக்களை வந்தது.

“ஐயாவுக்கு ஒவல்?...”

ஓடி வந்த குரலுக்கு முன்னே ஓடி வந்தான் சங்கிலி.

“டேய்!”

“ஏங்க...!”

“நீ எத்தனி நாளா இங்கே இருக்கிறே?”

“ஒரு மாசம் கிட்டத்தட்ட ஆகியிருக்குங்க...!”

“வேலே...?”

“பாட்டுப் புஸ்தகம் விப்பேன்...சாயா விப்பேன்... அப்புறம் பீடி சிகரெட்டு விப்பேனுங்க!”

“ஊம்!”

“ஆமாங்க...!”

“ஒனக்குச் சம்பளம்?”

“இருபது ரூபாயுங்க!”

“இது கட்டுதாடா?”

“என்னமோங்க...சின்னப் பயலுக்கு சின்னூண்டு வயிறு தானுங்களே!” தலையைச் சொறிந்து கொண்டான் சங்கிலி. பிள்ளைக்கோ தலை ‘விண்’ என்று தெறித்தது.

“சம்பளம் யாரு தாரது?”

“மானேசரு தருவாருங்க...அதாகப் பட்டது, ஒங்க பணமுங்க!”

“பலேடா!”

பையனின் இளஞ்சிரிப்பு, பெரியவரின் இதழ்க்கடையில் வளர்ந்திருந்தது.

“உனக்கு நெசம் பேசிப் பழக்கமிருக்குதா?”

“நெரம்ப இருக்குங்க...அதாலே தாங்க, முகப்பிலே தொங்கவிட்டிருக்கிற பொன் மொழிங்களைக் கண்டு எனக்குப் பயமே உண்டாகல்லேங்க. நானும் இங்கேயே தங்கவும் முடியுதுங்க!...”

“பலேடா!” என்று மெய்ம் மறந்து ‘மெய்’ நினைந்துருகிச் சிரித்தார். தியேட்டருக்குடையவர்.

“இங்கிட்டு வாடா!”

சங்கிலியின் காதுடன் காதாக ஏதோ ஓதினார் பிள்ளை. ரகசியம் அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

"ஓய் சகடயோகம்! உம் யோகம் இன்னிக்கு இந்த மினிட்டோட சரி. உம் கணக்கை செட்டில் செய்து கிட்டுப் போம்! சட்டத்தைப் பாதுகாக்க வேண்டியது நம்ம கடமையிங்கற நல்லெண்ணம் உண்டாகாத வரையிலே, சமுதாயம் உமக்கு ஒரு நாளும் பரிவு காட்டவே காட்டாதுங்காணும்! என்னோட மானத்தைப் பணயம்வச்சு, உம்மோட பணத்தைப் பெருக்கிக்கற ரகசிய நாடகம் இனியும் நடக்காதுங்காணும்! போம்!" என்று ஆத்திரம் சுழிக்கக் கூச்சலிட்டார். "இப்பவே உம்மைக் கம்பி எண்ண வைச்சிருப்பேன்; பாவம், பிள்ளைகுட்டிக் காரராச்சேன்னு மன்னிச்சேன்!"

"சங்கிலிப் பயல் பொய் சொல்றானுங்க எசமான்!" —என் சாண் உடம்பு ஒரு சாண் ஆனது!

சங்கலி ஏளனமான நகையை உதிர்த்துவிட்டபடி, மானேஜர் சகடயோகத்தின் தலையைக் சகடக்காலை உருட்டுவது போல உருட்டி விட்டவனாக ஒரு முறைப்பு முறைத்து விட்டுப்பேசினான்: "நானா பொய் சொல்லுறேன்? அநாதைப் புள்ளையான நான் உங்க சொல்படி உங்க சோத்தை வந்து தின்னுருந்தேன்னா, நான் பொய் சொல்லித்தான் இருந்திருப்பேன். ஆனா, நான் இது வரைக்கும் சாப்பிட்டது எம் பணம் —நான் ராக் கண் பகல் கண் முழிச்சுச் சம்பாரிச்ச பணம். ஒரு வேளைச் சோறுன்னு சாப்பிட்டுக்கிட்டும், சாயாவும் சுடு தண்ணியுமின்னு குடிச்சுக்கிட்டு நாணயமா நாளை ஓட்டுற ஏழைப்புள்ளை நான். நீங்க போலிப் பணக்காரங்களோடே சேர்ந்துக் கிட்டு, ரெண்டாம் ஆட்டம் முடிஞ்சதும், என்னெ வெளியே காவலுக்கு வச்சுப்புட்டு, நீங்கஎல்லோரும் உள்ளே குடிச்சீங்கங்கற விசயமே எனக்கு இப்பத்தான் பட்டுச்சு! நான் சின்னப்புள்ளே. இதெல்லாம் இதுவரை எனக்கு விளங்கல்லே!" என்று சொல்லி உள்ளே ஓடிவிட்டுத் திரும்பினான். அவன் கைகளில் சாக்கடை நாற்றம் வீசியது. ஐந்தாறு அழகிய பிராந்திப் புட்டிகள்—வெறும் சீசாக்கள் இருந்தன, அவனது கரங்களில். "இதெல்லாம் நீங்க கொல்லை

யிலே ரகசியமாய்ப் புதைச்சது தானுங்களே?" என்று கம்பீர மாக முகம் நிமிர்த்தி, சுருட்டை முடிகளை ஒதுக்கி விட்டுக் கேட்டான் சங்கிலி.

சகடயோகத்தின் பொய்களை மன்னித்தார் பிள்ளை.

இப்போது தியேட்டருக்கு மானேஜர்: சிவசங்கரன்.

சங்கிலிப் பயலுக்குச் சம்பளம் நாற்பது ரூபாய்.

"ஏ...எம்,ஜியும், சிவாஜியும் ஒண்ணு நடிச்ச பழைய படம் டோய்!" என்று அந்த 'மாட்டினி ஷோ' வில் குரல்கள் நெரிந்தன. ஜனங்களும் நெரிந்தனர்.

**தைப்** பொங்கல்.

சங்கிலிக்குக் காலை முதல் வேலை நெட்டி வாங்கியது. புதுச் சட்டையும் புது ட்ரௌசரும் அவனுடைய அழகின் அணிகலன்களாயின. அந்த வெள்ளைச் சிரிப்புத்தான் அவனுக்குச் சேம நிதி.—'பாங்க் பாலன்ஸ்!'

மெய்கண்ட பிள்ளை அன்று தினம் தியேட்டருக்கு வருகை தந்து, சிப்பந்திகளுக்குப் 'பொங்கல் இனாம்' தந்தார்.

சங்கிலிக்குக் கிடைத்த இனாம் பத்து ரூபாய். வானத் துக்கும் பூமிக்கும் குதித்தான் பயல். வாயெல்லாம் பல்.

ஜெமினி நடித்த புதுப் படம். கூட்டம் தாங்கவில்லை. 'க்யூ' வளர்ந்தது.

மணி பன்னிரண்டு!

புது மானேஜர், தியேட்டரின் முகப்பில் வாழைக் குருத் துகள் கட்டப் பட்ட பணியை மேற்பார்வையிட்டார். பிறகு "சங்கிலி!" என்று அழைத்தார்.

நாகரிகமாக வந்து நின்றான் சிறுவன்.

"ஸார்......!"

“டேய்! ஒரு கால் பிளேட் பிரியாணியும், ஒரு ஆம்லெட்டும் வாங்கியாடா... பசி தாங்கலே... டிக்கட் புக்கிங் முடிஞ்சு தான் வீட்டுக்குப் போக முடியும் போல!...” என்று காரணம் சொல்லி, பத்து ரூபாய்த் தாள் ஒன்றினைச் சுண்டி எடுத்து அவனிடம் நீட்டினார்.

சங்கிலி வெளியேறி, அந்தக் கிளப்பினுள் நுழைந்து, ‘ஆர்டர்’ கொடுத்தான். தூங்கும் கூட்டம் நிரம்பி வழிந்தது. சாப்பிட்டவர்களும் சாப்பிடப் போனவர்களும், அடங்கிய பசியையும் அடங்காப் பசியையும் மோத விட்டார்கள். சங்கிலி, அந்தக் கல்லாவை—மேஜையை நெருங்கினான்... பிறகு, “எனக்கு கால்பிளேட் பிரியாணி... ஒரு ஆம்லெட்...;” என்று சொல்லி, கையிலிருந்த பத்து ரூபாய் நோட்டை நீட்டினான். நோட்டு மேஜை இழுப்பினுள் நுழையவே, “பாக்கி சில்லறை குடுங்க...!” என்று கேட்டான் அவன்.

“இருப்பா!...” என்ற பதில் ‘கல்லாக்காரர்’ரிடமிருந்து வந்தது.

“பிரியாணி கால்...ஆம்லெட் ஒண்ணு...எம்பத்தைஞ்சு காசு பில்!” என்று ‘குரல்’ கன கச்சிதமாக வந்தது.

பையன் பிரியாணி—ஆம்லெட் பொட்டலங்களைக் கையில் வாங்கிக் கொண்டு, “ஐயா! பத்து ரூவா குடுத்தேன்...எண்பத்தஞ்சு காசு போக மிச்சம் தாங்க ஸார்!” என்று கேட்டான், வலது கையை மேஜையின் தலைப்பு வரை நீட்டியவாறு.

நீட்டி நின்ற கையைத் தள்ளிவிட்டு “எங்கிட்டவா நீ பத்துருபா குடுத்தே? டேய்!...என்னடா ‘டாவு’ விடறே?” என்று கோபாவேசமான குரல் ஒன்று அவனைத் தாக்கவே, திக்பிரமை கொண்ட சங்கிலி, நீர் சுரந்த நேத்திரங்களால், நாணயங்களை ஆண்ட அந்த மகானுபாவனை ஏறிட்டுப் பார்த்தான்.

‘ஆ...நீரா?’...

"ஏம்பா, ராமு...இந்தப் பய காசு இல்லாம வந்து பொய் சொல்லி, பிரியாணி, ஆம்லெட்டுகளை களவாடிக் கிட்டுப் போக வந்திருக்கான். கேட்டா, பெரிய அரிச்சந்திரன்போல் கதை அடிக்கிறான். எல்லாத்தையும் பறிச்சுக்க. இவனை விரட்டியடி! ஊம். சல்தி!"...

ஏழை அழுத கண்ணீர் அம்பலம் ஏறுமா?

"ஏய்யா! ஓம்மருக்கு இதயமே இல்லையா?...எம்மாதிரி பிள்ளை உமக்கும் இருக்குதே ஐயா?... பின்னே, ஏனய்யா என்னைச் சோதிக்கிறீங்க இப்படி?" என்று 'நியாயம்' கேட்கப் போக, அவனது பிஞ்சுக் கன்னங்கள் இரண்டிலும் கைத் தழும்புகள் பதிந்ததுதான் மிச்சம்!

சகடயோகத்தின் அகங்காரச் சிரிப்பில், சங்கிலியின் சட்டைப் பையிலிருந்த பொங்கல் இனும் கரைந்தது!

விநாடிகள் ஓடின.

புது மானேஜர் நாசூக்காக ஏப்பம் பறித்தார். ஏப்பத்தின் விலை, ரூபாய்: பத்து. காசு: எண்பத்தைந்து...!

மூன்றாவது ஆட்டம் தொடங்கச் சில நிமிஷங்களே இருந்தன.

சங்கிலி தெம்பை வர வழைத்துக் கொண்டு கடமை புரிந்தான். சாயா கிளாஸ்கள் கைமாறின; சில்லறைக் காசுகள் சட்டைப் பையில் புரண்டன; அடிவயிற்றில் பசி புரண்டது. கண்கள் இருண்டு வந்தன. "பாட்டுப் புஸ்தகம் பத்துக் காசு!...பாட்டுப் புஸ்தகம் பத்துப் பைசா!..."

தரை மகா ஜனங்களிடமிருந்து விடை வாங்கிக்கொண்டு பெஞ்சுகளுக்கு மத்தியில் 'டார்வின் தியரி' படித்து, கடைசியாக நாற்காலிகளை நாடின வேளையில், பாட்டுப் புத்தகங்களுக்கு கிராக்கி தட்டவே, உன்னிப்பான பார்வையை நெடுகிலும் ஓட விட்டவாறு நடந்தான். காசுகளை வாங்கிச் சட்

டைப் பையில் போட்டு விட்டு, புத்தகங்களை நீட்டிச் சென்றான்.

அடுத்த வரிசைக்குத் திரும்பின தருணம் சங்கிலியின் பார்வையில் பட்டு விலகினர் இருவர்; ஒருவர்—திருவாளர் சகடயோகம்: அடுத்தது, அவரது 'தர்ம பத்தினி!'

ஒருகணம் கொதிப்பு பொங்கியது.

மீண்டும் குரல்கள் மீட்டின. "ஏ...பாட்டு புஸ்தகம்... வா...வா!"

சில்லறைகள் மொத்தமாக விழுந்தன.

"இந்தாப்பா...இங்கே ஒண்ணு கொடு!" என்று கேட்டுக் கொண்டே பத்துக் காசை நீட்டினார் சகடயோகம்; தூரத்தே கும்பிட்டவனைச் சிரிப்பால் வாழ்த்தினார்.

சங்கிலியின் கைகள் அந்தப் பத்துக் காசை ஏந்திக் கொண்டு, சட்டைப் பைக்குள் திணித்தன. ஆனால், அவன் பாட்டுப் புத்தகத்தை நீட்டவில்லை.

தர்ம பத்தினியின் நச்சரிப்பைத் தாங்காத சகடயோகம் அங்கவஸ்திரத்தை நகர்த்திப் போட்டபடி, "எங்கேப்பா பாட்டுப் புஸ்தகம்?..." என்று வினா விடுத்தார்.

சங்கிலி அட்டகாசமாகச் சிரிக்கலானான். 'காசு குடுய்யா!...பாட்டு புக் தன்னாலே உம்மகிட்டே ஓடியாரும்!" என்றான்.

"காசுதான் சித்தமுந்தி குடுத்தேனப்பா!"

"நீரா காசு குடுத்தீர்?...பொய் பேசறீங்களே ஐயா, போயும் போயும் இந்தப் பத்துப் பைசாவுக்கு!..."

பையன் இரைச்சல் போட்டான்.

பாட்டுப் புத்தகத்தில் இருந்த காதல் பாடல்களில் லயித்திருந்த ஆண்-பெண் ஜோடிகள் திரும்பினர். 'ஒண்டிக் கட்

டை'களும் தங்கள் கவனத்தை நிமிர்த்தினர். ஆக, சகட யோகத்தை ஆண்களும், அவர் தர்ம பத்தினியைப் பெண் களும் 'ஒரு மாதிரியாக'ப் பார்க்கத் தொடங்கினர். இந்தப் பார்வையைச் சகடயோகம்பொறுத்துக் கொள்ளத் தயாரா இருந்தும் கூட, அவரது தர்மபத்தினி அவ்வளவிற்குத்துணிவு பெற்றுளில்லை!

"பத்துப் பைசா பிச்சைக்காசு...இன்னொரு வாட்டிதான் குடுத்துடுங்களேன்!...இந்தப் பத்துப் பைசாவுக்குப் போயி, கேவலம் வாண்டுப் பயலோட வம்பு பண்றது எனக்கு வெட் கமா யிருக்குதுங்க!..." என்று 'நைஸாக'ச் சொன்னாள்.

"சட்...இரையாதே!" என்று சன்னக் குரல் அழுது வழிந்தது.

பட்டுத் தெறித்த பற்களுக்கு மத்தியில், ஆத்திரத்தைப் போட்டு மென்று கொண்டு, மறு பத்து பைசாவாகத் தடவி எடுத்து நீட்டினார் சகடயோகம். தெரிந்தவர்கள் முகங்கள் தெரிந்தன. பாவம், அவருக்கு வேர்வை கொட்டியது!

சங்கிலியின் கைப்பிடிப்பில் இருந்த ஒரு புத்தகத்தின் கனம் குறைந்தது. அட்டகாசமாகச் சிரிக்கும் பொறுப்பினை இப்பொழுது ஏற்றுக் கொண்டவன் சங்கிலி.

இருட்டு அரசோச்ச, காதலர்களின் கண்கள் 'மௌன நாடகம்' ஆடத் தொடங்கின!—திரையிலே!

ஆட்டம் முடிந்தது. கும்பல் கலையத் தொடங்கியது. சகடயோகம் தன் தர்ம பத்தினியின் மென் கரம் பற்றி வெளியே வந்து கொண்டிருந்தார். பழைய வேலைக்காரன் 'சலாம்' வைத்தான். 'கேட்'டை நெருங்கிக் கொண்டிருக் கையில், பையன் சங்கிலி குறுக்கே மறித்து நின்றான். "ஐயா, இந்தாங்க ஒங்க பத்துப் பைசா! இது எனக்கு வேணும்... எம்பிட்டு பத்து ரூபாய்க்கு ஈடுகட்ட, இந்தப் பத்துப் பைசா வாலே முடியுமா? ஆனா எம்மாதிரி ஏழை பாழைகளுக்கு கஷ்டநஷ்டத்துக்கும் ரொம்பச் சொந்த முண்டுங்க!...ஆனா,

ஒங்களுக்கு இன்னிக்கு—அதான் ஸார்-இப்ப படம் பார்த்தப்ப...உண்டாச்சே ஒரு நஷ்டம்...அதை உங்களாலே தாங்க முடியாதா ஸார்?...நீங்க படே ஆளு ஸார்! உங்களுக்குத்தான் இதெல்லாம் சர்வ சகஜமாச்சே! நான் சொல்றது பொய்யா ஸார்?" என்று 'டயலாக்' பேசிவிட்டு, கையில் தயாராக வைத்திருந்த பத்துக் காசுப் பணத்தை அலட்சியத்துடன் நீட்டினான் அவன்.

செயலற்று நின்றுவிட்ட சகடயோகத்தின் முகத்தில் 'தெரிந்த முகங்கள்' தெரிந்தன. வேர்வை வழிய, கால்கள் நடுங்க, கோபம் கனல் தெறிக்க, அந்த அலட்சியச் சிரிப்பை எதிர்க்க முடியாத தோல்வியுடன் முகத்தைத் தாழ்த்தி, நடுங்கிய கையை நடுக்கத்துடன் உயர்த்தி நீட்டி, அதில் விழுந்த அந்தப் பத்து காசு நாணயத்தை உள்ளங் கையில் வைத்து மூடிக்கொண்டே, ஓர் அரைக்கணம் செயலிழந்து, செய்வதை அறியமால் நின்றார் சகடயோகம்.

சங்கிலி ஜெயஸ்தம்பமென உயர்ந்து, வெற்றிக் கொடியின் காம்பீர்யத்துடன் நிலை நாட்டப்பட்ட உண்மையைப் போன்று அந்தரங்க சுத்தியுடன் நின்று, அந்த மனிதரையே இமை பாவாமல் பார்த்துக் கொண்டிருந்தான்—அதே அலட்சியப் பாவனையுடன்!

"ம்...வாங்கோ...போவோம்!"

தர்ம பத்தினியின் தோள்களில் அவர் அணையப் பெற்றவராக, வழி நடந்தார்.

எவனோ, "தூ...!" என்று சத்தமிட்டுக் காறித் துப்பி மறைந்த உண்மை நடப்பைத் திரும்பிப் பார்க்கவும் மனத் துணிவு அற்று, தன் போக்கில்-தன்னுடைய தடத்தில் நடந்து கொண்டே இருந்தார் சகடயோகம்...!

# உரசல்

ஜட்கா சத்தம் கேட்டது.

பட்டறையிலிருந்தபடியே ஆவலோடு தலையை நீட்டிப் பார்த்தார் பொன் வேலை செய்யும் காசி. 'நெக்லஸ் கொடுத்திட்டுப் போன அந்த மீனு அம்மாளாக இருந்தால் தேவலாமே!'

அவர் முகம் மாறியது.

ஜட்கா, ராணி ஆஸ்பத்திரியைத் தாண்டி மேற்கே ஓடியது.

மீனு அம்மாள் ஏன் இன்னமும் வரவில்லை?

"என்னுங்க! ராத்திரிப் பாட்டுக்காச்சும் ஏதானும் வழி பிறந்திச்சா? இல்லே, இன்னிக்கும் ஏகாதசி விரதம்தானு?"

காசி கைகளைப் பிசைந்தார்.

"கையிலே மடியிலே காசு புழங்குகிறபோது, கால் அரை சேர்த்து வைக்கச் சொல்லிக் கெஞ்சிக் கூத்தாடினேன். நான் சிறுவாடு சேர்த்து வெச்சிருந்த ஒண்ணு ரெண்டையும் தங்க விடலே!" என்று செருமினுள் காமாட்சி.

காசி மெல்ல எழுந்தார். “காமாட்சி! திருக்கோகர்ணம் வரை போயிட்டு வந்திடுறேன்!” என்றார் காசி.

அவள் துணுக்குற்றாள். “திருக்கோகர்ணத்துக்கா? ஏன், மாப்பிள்ளையைப் பார்த்துப் பல்லைக் காட்டி, முடைக்கு அஞ்சு பத்து பணம் காசு வாங்கிட்டு வரவா?” எரிச்சலும் எகத்தாளமுமாகக் கேட்டாள்.

காசியின் கண்கள் ரத்தம் கட்டிச் சிவக்கத் தொடங்கி விட்டன.

“காமாட்சி, பல்லுப் போனாலும் சொல்லுப் போகாதவன் இந்தக் காசி. பொண்ணைக் கொடுத்த மாமன்காரனாச்சே என்கிற மட்டு மரியாதையைக்கூட மறந்து, பணத் திமிரிலே என்னையே எடுத்தெறிஞ்சு பேசின மாப்பிள்ளை கணபதி கிட்டவா நான் பல்லைக் காட்டப்போறேன்?”

“பின்னே எதுக்குப் புறப்பட்டீங்க?”

“வேலை இருக்குது. நேத்திக்கு நெக்லஸைக் கொடுத்து அழுக்கு எடுத்து நகாசு போடச் சொல்லிக் கொடுத்திட்டுப் போனாங்களே, அந்த மீனு அம்மாளோட ஊர் திருக்கோகர்ணம்தான். இந்தச் சில்லறை வேலைக்கு அஞ்சு, பத்து கூலிக் காசு தந்தால், ரெண்டு நாள் பாடு தீருமில்லையா?”

கணவன் புறப்பட்டதும், காமாட்சி நெடுமூச்செறிந்தாள். அந்தக் கண்டசரம் கண்ணுக்குள்ளேயே ஊசலாடியது. ‘கண்டசரம் போட்டு அழகு பார்க்கிற பொசிப்பு எனக்கு ஏது? ஹூம்!’

அந்தி மயங்கிய நேரத்தில், காசி தள்ளாடியபடி வீட்டுக்கு வந்து சேர்ந்தார். “ஏ காமாட்சி!” என்று கூப்பிட்டுவர், வெளித் திண்ணையிலேயே அரிசிப் பையைப் போட்டுவிட்டு உட்கார்ந்தார்.

அவனுக்கு அரிசியைக் கண்டதும், புதுக் களை படர ஆரம்பித்தது. வாயெல்லாம் பல். "ஏனுங்க, அந்த மீனு அம்மா இருந்தாங்களா? மெருகுக் கூலி தந்திட்டாங்களா?"

அவர் கண்கள் கலங்கின. "தெரிஞ்சவர்கிட்டே ரெண்டு ரூபாய் கைமாற்று வாங்கி அரிசி வாங்கினேன்."

காமாட்சி திகைத்தாள். "ஏன், அந்த அம்மாள் ஊர்ப் பயணம் போயிட்டாங்களாமா?"

'ஆமாம்' என்ற பாவனையில் சோகத்தோடு தலையை உலுக்கினர் காசி.

"எங்கே போயிருக்காங்களாம்? எப்பத் திரும்பி வருவாங்களாம்?"

"திரும்பி வரமுடியாத ஊருக்குப் போயிட்டாங்களாம் அந்தப் புண்ணியவதி!"

"அட, பாவமே!" அதிர்ந்தாள் காமாட்சி.

"காலம்பற திருக்கோகர்ணத்திலேயிருந்து பஸ்ஸிலே வந்து வடக்கு வீதி திருப்பத்திலே இறங்கினுங்களாம் அவங்க; அநேகமா நம்ம வீட்டுக்குத்தான் புறப்பட்டு வந்திருக்கு வேணும். ஒரு எட்டு எடுத்து வச்சதும் மாரடைப்பு வந்திடுச்சாம். தரையிலே சாய்ஞ்சிட்டாங்களாம். தர்மத்துக்கு இரக்கப்பட்டவங்க அந்த அம்மாளை வண்டி வச்சுத் தூக்கிப் போட்டு ராணி ஆஸ்பத்திரியிலே சேர்த்தாங்களாம். அப்பவே மூச்சு நின்னுடுச்சாம். பாவம்!" அவருக்குத் தொண்டையை அடைத்தது.

காமாட்சி அரிசிப் பையை எடுத்துக் கொண்டு நிமிர்ந்தாள். "ஆமாம், அந்த மீனு அம்மாளுக்குப் பிள்ளை குட்டி...?"

"யாரும் இல்லையாம். அந்த அம்மாள் சாகிறப்ப வீட்டுச் சாவிக் கொத்து மட்டும் தான் இருந்திச்சாம். அதை

யும் ஸி. எம். ஓ. ஐயா வசம் சேர்ப்பிச்சிட்டாங்களாம்! சொந்தம் சோபாரின்னும் அக்கம் பக்கத்திலே யாருமே இல்லேன்னுதான் பேசிக்கிட்டாங்க!"

"ஓகோ!" என்றாள் காமாட்சி. "இப்ப அந்த அம்மா வோட நெச்லஸை இனி என்ன செய்கிறதுங்க?"

திகைப்பூட்டியவளை உன்னிப்பாக ஊடுருவினார் காசி. "இது சம்பந்தமாக நீ யார்க்கிட்டவும் மூச்சுக் காட்டிடாதே. பிறத்தியார் சொத்து நமக்கு வேண்டியதில்லே. ஆனால். அந்த அம்மா என்கிட்டே மெருகுபோடக் கண்டசரம் கொடுத்தது தெரிஞ்சதும், அவங்களுக்கு வேண்டியவங்க யாராச்சும் 'வளையல் தந்தாங்களாமே, வைரமூக்குத்தி தந்தாங் களாமே அழுக்கெடுக்க?' அப்படின்னு இல்லாததெல்லாம் கேட்பாங்க."

எதையோ சிந்தித்தவளாக, "மூச்சு விடாமல், நாம நம்ம கிராமத்துக்குப் போயிட்டால் என்னங்க?" என்று அவள் புதிர் போட்டாள்.

காசி சிரித்தார். "காமாட்சி! அயலார் சொத்துக்கு நான் பிறக்கல்லே! அந்த நெக்லஸைச் சரியான வாரிசுக் காரன் யார் வந்து கேட்டாலும் சிவனேன்னு வீசிப்பிட வேண்டியதுதான் என் கடமை. அப்பதான், உண்ணுற சோறு உடம்பிலே ஒட்டும்?"

"ஆமா! இப்படியே சாப்பாட்டுக்குத் திண்டாடிக்கிட்டுக் கிடக்கலாம்!" என்று கழுத்தை நொடித்தாள் காமாட்சி.

"நாளைக் கழிச்சு வெள்ளிக்கிழமையிலிருந்து மேல வீதி தங்கவேல் பட்டறையிலே சிப்பந்தியாக வேலை செய்யப் போறேன். தினக்கூலியாய் அஞ்சு ரூபா கொடுக்கிறாராம்! அது போதும் நமக்கு! புரியுதா?"

காசி கிணற்றடிக்குப் போய்விட்டார், குளிப்பதற்காக.

கதவைத் தாழிட்டாள் காமாட்சி. உக்கிராண அறையில் ரகசியமான இருப்பிடத்தில் முடங்கிக் கிடந்த அந்த நெக்லஸை எடுத்துப் பார்த்து, ஒரு பெருமூச்சு விட்டாள்.

மறுநாள் காலை.

உள்ளே போய் அலமாரியைத் திறந்தவருக்குத் தூக்கி வாரிப்போட்டது: "ஏய் காமாட்சி!"

"என்னங்க?" என்றாள் அவர் மனைவி, பின்கட்டிலிருந்து அமைதியாகக் கேட்டாள்.

"இங்கே வைச்சிருந்த கண்டசரம் எங்கே? உண்மையைச் சொல்லு!"

"எனக்கு எதுவும் தெரியாதுங்க?"

"கொலை பண்ணி விடுவேன் உன்னை! கொடுக்கப் போறியா, இல்லையா?"

அதற்குள் வாசலில் ஜட்கா வந்து நின்றது.

"ஐயையோ! அவங்க வந்திட்டாங்க போலிருக்கு!" ன்று பதறினார் காசி.

ஆனால், வண்டியிலிருந்து இறங்கினவர்களோ அவர்களுடைய மகள் கமலமும், மாப்பிள்ளை கணபதியும்தான். சீர் வரிசை விவகாரத்தினால் ஏற்பட்ட முறிவுக்குப் பின் இப்போது தான் வருகிறார்கள்.

"வாம்மா, கமலம். வாங்க மாப்பிள்ளை," என்று திகைப்பும் சிரிப்புமாக வரவேற்றார் காசி.

பிள்ளைத்தாச்சி மகளை உள்ளே அழைத்துச் சென்றாள் காமாட்சி.

காசி, மாப்பிள்ளையை ஊடுருவிப் பார்த்தார். "ஏன் மாப்பிள்ளை, என்னவோ போல் இருக்கிறீங்க?"

அதே சமயம், உள்ளே மகளின் விம்மலும் கேட்டது அவருக்கு.

மாப்பிள்ளை கணபதி ஒரு பெருமூச்சு விட்டார். "எங்க ஊரிலே பக்கத்து வீட்டு அம்மாள், யாரோ வேண்டப்பட்டவங்களுக்குக் கலியாணம் என்று சொல்லி நம்ம கமலத்தோட புது நெக்லஸை இரவல் வாங்கிட்டுப் போனாங்க. நேற்றைக்குக் காலையிலே திருப்பித் தந்திடுறதாகச் சொன்னாங்க. ஆனால் திடுதிப்னு மாரடைப்பிலே செத்துப் போயிட்டாங்களாம்!..."

காசிக்குத் தலை சுற்றியது. "வந்து...திருக்கோகர்ணத்தைச் சேர்ந்தவங்களா?...அவங்க பேர்?"

"மீனா அம்மாள்னு சொல்வாங்க...ஏன், உங்களுக்குத் தெரியுமா அவங்களை?..."

காசி மென்று விழுங்கினார். "அவங்க நல்லவங்கதான்... இரவல் வாங்கிய நகையை நல்லா மெருகு போட்டுத் திருப்பிக் கொடுக்கணும்னு நினைச்சிருக்காங்க!..."

"அப்படியானால்?..." மாப்பிள்ளை கணபதி ஆனந்தத்துடன் படபடத்தார். "அது..."

"காமாட்சி!" என்று குரல் கொடுத்தார் காசி. "இப்பவாவது சொண்டு வந்துவிடு! காதிலே விழுந்திச்சல்ல எல்லாம்?"

உள்ளேயிருந்து மகளுடன் வந்தாள் காமாட்சி. "நல்ல காலம், நம்ப கமலத்தோட கண்டசரம் வேறே மூணாம் மனுசன் கையிலே கைமாறிப் போயிடாமல் தப்பிச்சுதே!" என்றாள்.

இப்போது மகளின் கழுத்தில் நெக்லஸ் சிரித்துக் கொண்டிருக்கிறது!

# மூன்றும் துருவம்

**ரேடியோக் கதை :**

'முப்பது நாட்களும் எப்படிக் கழிந்தன? ஏன் கழிந்தன?' சுதர்சனின் இதயத் தளத்திலிருந்து கேள்விபற்றிச் சுழித்து அவர் முன் கொக்கியிட்டு நின்றது-உள்ளமா? உணர்வா? உயிர்ப்பா? ஒரு கணம் அவர் நிலை மாறிச் சுற்றினார்; சுழன்றார். கைவிரல் இடுக்கில் சுழன்று கொண்டிருந்தவீட்டுச் சாவியைக் கொண்டு பூட்டைத் திறக்க வேண்டும் என்பதையும் மறந்து, அடித்து வைத்த சிலையாகி நின்றார். அவரிடமிருந்து பெருமூச்சு பவனி வந்தது.

அழகுக்கென நிறுத்தி வைக்கப் பட்டிருந்த நிலைக் கண்ணாடியை, அப்போதுதான் புதிதாக வாங்கி வந்தவர் பார்ப்பது போல், அவ்வளவு புதுமையுடன், பூரிப்புடன் பார்த்தார். பார்த்த அவர் பதறிப் போய்க் கண்ணாடியை அண்டினார்.

"சாந்தினி?" அவர் ஓலமிட்ட குரலில் அவர் நெற்றிப் பட்டையிலிருந்து ரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது. திரும்பினார். கண்ணாடியில் தன் உருவத்தினைக் கண்ட அவரது உள்ளம் ஏமாற்றங் காட்டியது. அவர் அழுதார். சூன்ய

மான இதயத்தை இழுத்துப் பிடித்துக் கொண்டு அடி பார்த்து, அடியெடுத்து வைத்தார்.

அவள் உயிர்த்துணை! — அவருக்கு உள்ளத்தின் உள்ள மாக—உயிரின் உயிராக, துடிப்பின் துடிப்பாக இருந்தவள் சாந்தினி! அவரது வாழ்க்கையின் பாதிப் பங்குரிமை பூண்ட வள்; அவருடைய 'மறுபாதி' அவள்.

போய் விட்டாள்.

சுதர்சன் நின்று கொண்டிருந்தார்.

குல விளக்கு அணைந்து விட்டது!

அவர் இருட்டில் தத்தளித்தார்.

எங்கோ ஒலித்த மாதா கோயில் மணியின் நாத அலைகள் காற்றில் மிதந்து வந்து இரவு மணி எட்டு என்பதைக் காலத்திற்குக் காத்திருந்தவர்களிடம் தெரிவித்தன. இந்தக் கடிகாரங்களுக்கு எத்தகைய கடமையுணர்ச்சி!

விடிந்தது, பொழுது.

அடுத்த நாள் சுதர்சன் மனித யந்திரமாக இயங்கத் துணி சக்தி உடலில் பிறந்திருந்தது. எழுந்து நடமாடினார். வெறும் உயிர்க் கூடு; அவ்வளவுதான்!

ஜன்னலுக்கடியில் தூசி படிந்த தரையில் பரந்து கிடந்த வற்றை மேஜை மீது அவர் விசிறிப் போட்டது நினைவுக்கு வந்தது. கிழிக்கப் படாத உறையிட்ட கடிதங்களையும், கிழிக் காமல் பார்க்கக் கூடிய கார்டுகளையும் அவர் படிக்கவில்லை; தபால் அஞ்சலில் வந்திருந்த சஞ்சிகைகள் சிலவற்றை எடுத்த எடுப்பில் பிரிக்கலானார். அங்கு வந்திருந்த நான்கு பத்திரி கைகளிலும் நான்கு பெயர்கள் 'சாந்தினி' வடிவில் அழகு காட்டி நின்றன. அவள் எழுதியிருந்த கதைகள் அந்தப் பத்திரிகைகளில் பிரசுரமாயிருந்தன. அவள் கதாசிரியை:

சுதர்சன் உறவு பூண்டிருந்த அந்த மனம் எங்கோ ஓடியது. கண்கள் எங்கோ ஓடின; விரல்கள், தவழ்ந்து கிடந்த பத்திரிகையின் பக்கங்களைப் புரட்டின.

"எழுத்தாள ஜோடிஎன்றுபெயர் பெற்ற சுதர்சன்-சாந்தினி தம்பதியில், திருமணமாகி ஓராண்டிற்குள்ளாகவே திருமதி சாந்தினி அவர்கள் உயிர் நீத்தார் என்பதறிந்து மிகவும் வருந்துகிறோம். அவரது ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கிறோம்."

அனுதாபக் குறிப்புக்கள் இப்படி பல:

சுதர்சன்-சாந்தினி எழுத்தாளத் தம்பதியாக திகழ்ந்தது, வாழ்ந்தது கதை போலவா? அது உண்மைச் சம்பவம்:

'லாவண்யா' என்ற எழுத்தாளரிடமிருந்து வந்திருந்தது அக் கடிதம். அதில், தன்னை காண்பதற்கு ஆவல் கொண்டு துடிப்பதாகக் குறிப்பிடப் பட்டிருந்தது கண்டு சுதர்சனுக்குப் பெருமிதம் பொங்கியது. சொல்லி வைத்தாற்போல, அவர் கதைகள்வெளிவரும் ஒவ்வொரு இதழிலும் 'லாவண்யா'வின் கதைகளும் ஜோடியாக இடம் பெற்ற விந்தையை என்னவென்று கூறுவது!

'லாவண்யா' குறிப்பிட்ட வண்ணம் 'ராபின்ஸன் பார்க்'கில் சந்திக்கப் புறப்பட்டார் சுதர்சன். 'லாவண்யா' என்ற பெயர் அவரை நொடியில் திகைக்க வைத்தது. எழுதுவது நிஜமாகவே பெண்ணு? 'பெண்ணின் புனை பெயரில் ஓர் ஆடவனே சிருஷ்டித்திருந்தால்?...' என்று பலவாறு அவர் மனம் குழம்பியது.

நண்பரைப் பார்த்து வருவதாகத்தான் சாந்தினியிடம் சொல்லிப் புறப்பட்டார். பூங்காவின் கோடியில் யார் வரவையோ எதிர்பார்த்திருப்பவள் போல பெண் ஒருத்தி நின்று கொண்டிருந்தாள்.

"நீங்கள்தான் சுதர்சன் அவர்களா?"...

"ஆம்: நீங்கள் தாம் லாவண்யாவா?"......

"இல்லை...அவள் என் தோழி. எதிர்பாராத சில காரணங்களால் அவள் இங்கு வர இயலவில்லை. உங்களைத் தன் இல்லத்திற்கு அழைத்துப்போகவே நான் காத்திருக்கிறேன்."

வீடு வந்தது.

"இவள் தான் லாவண்யா; இயற்பெயர் சாந்தினி," என்று அறிமுகம் செய்து வைத்தாள் தோழி.

சுதர்சன் வியப்பு விரிந்த கண்களால் ஏறிட்டுநிமிர்ந்தார். அங்கு அவர் மனைவி முறுவல் கோலத்துடன் நாற்காலியில் அமர்ந்திருந்தாள்.

"சாந்தினி, நீ தான் லாவண்யாவா? ஆஹா! நான் பாக்கியசாலி!"

"தாங்கள் எழுதும் கதைகளைப் படித்த என்னையும் எழுத உந்தித் தள்ளிற்று. உங்கள் ஆசியில் வெற்றி கண்டேன். கதைகளை என் தோழியின் வீட்டு விலாசத்திற்கு அனுப்பி வைத்தேன். உங்களை ஒரு நாள் திடீரென்று திகைக்கச் செய்ய வேண்டுமென்றே என் தோழியின் ஒத்திகையின் பேரில் இந்த நாடகத்திற்கு இசைந்தேன். வெற்றி கிட்டியது... இனி சாந்தினி என்ற பெயரில்தான் நான் கதைகள் எழுதுவேன். திருப்திதானே?"

சுதர்சனின் நினைவு ஏடுகள் புரண்டன. சுய நினைவு பெற்றார். அவர் அமர்ந்திருந்த நாற்காலியின் பாதத்தில் கிடந்த சிறு பள்ளமொன்றில் கண்ணீர் வேலி படர்ந்து கிடந்தது. அவர் விம்மினார்.

"ஐயோ, சாந்தினி! என்னைப் பிரிந்தாயே கண்ணே!"

எதிரொலித்து முழங்கியது கட்டடம்.

ஆபீஸ் முடிந்து வீட்டினுள் நுழைந்ததும் 'ஏன் நுழைந்தோம்' என்று தான் இருந்தது சுதர்சனுக்கு.

அடுக்கி வைத்திருந்த கடிதங்களை ஒவ்வொன்ருய்ப் பிரித்தார். கடந்த முப்பது நாட்களாக வந்தவை அவை.

எத்தனை எத்தனை வகை வகையான கடிதங்கள்!

சிலர்-செய்தி அறிந்தவர்கள் சாந்தியின் பிரிவுக்கு அனுதாபம் கூறியிருந்தனர். உறவினரின் கடிதங்களும் இந்தக் குழுவில் அங்கம் பெறவேண்டியவை.

இறுதிக் கடிதம்தான் சுதர்சனது உள்ளத்தில் ஏதோ ஓர் உளைச்சலை ஏற்படுத்திவிட்டது. அவரது ஒன்று விட்ட தமக்கை எழுதிய கடிதத்தில், இரண்டாம் திருமணம் பற்றிய சில குறிப்புகள் கண்டிருந்தன! புத்திமதி வாசகம் அது. ஒவ்வொரு சொல்லும் அவருக்கு உள்ளத்தைப் பற்றி எரியச் செய்தது. நெஞ்சம் பொறி பட்ட பஞ்சாயிற்று!

பதில் கடிதங்கள் பறந்தன.

**"அன்புச் சகோதரி அவர்கட்கு"**

நமஸ்காரம். உங்கள் கடிதம் கண்டேன். உங்கள் புத்திமதிக்கும் நன்றி. தயவு செய்து இனி என் சொந்த வாழ்வில் குறுக்கிடாதிருக்க வேண்டுகிறேன். சாந்தினி என் வரை இறந்து விடவில்லை; என்னுள் அவள் உயிரோவியமாக இதோ ஆனந்த நடமிடுகின்ருளே! இன்றும் அன்றும் ஏன், என்றுமே என் சாந்தினிதான் என் துணை... உயிர்த்துணை!

தங்கள்,

சுதர்சன்."

சுதர்சனுக்கு உடம்பு அனலாய்க் காய்ந்தது. அவர் அடித்துப்போட்டாற் போலக் கிடந்தார். இலக்கிய ரசிகர் ஒருவர்; பக்கத்து வீட்டு நண்பர். வந்து அவரை அடிக்கடி கவனித்தார்.

சுதர்சனுக்குப் பேச்சு மூச்சில்லை; விழிகள் திறக்கவில்லை. அவருக்குத் தன் உடம்பைப் பற்றிக் கவலையே இல்லை. அதைப்

பற்றிக் கவலை கொண்ட ஒரே உயிர் சாந்தினிதான். போய் விட்டாளே! அவர் படுத்து விட்டார்.

டாக்டர் வந்தார். 'டைபாயிட் ஜுரம்' என்றார் அவர். சுதர்சன் வியாதியின் பெயரைக் கேட்டதும் ஒரு விநாடி மலர்ச்சி பெற்றார். ஆம்; அவருக்கு உலகம் வெறுத்திருந்தது. ஏனென்றால், அதில் சாந்தினி மட்டும் இல்லாமலிருந்தாள்!

காலம் 'கடமை, கடமை' என்று உயிரை விட்டுக் கொண்டிருந்தது.

மனிதனுக்குத்தான், கடமை என்ற ஒன்று உண்டென் பதைப் பற்றிக் கூட ஐயப்பாடுதானே!

பதினைந்து நாட்கள் முடிந்தபின், அன்று தான் சுதர்சன் மெல்லக் கண்களைத் திறந்தார். புது முகங்களைக் கண்டதும் அவர் உடலில் திகைப்பு ஊறியது.

"அக்கா, எப்போ வந்தே? மாலினியையும் அழைச்சுக் கிட்டு வந்தியா?" என்ற சொற்கள் அவர் உதடுகளின்றும் வெளிப்பட்டன. வெளிறிப் போயிருந்த உதடுகள் மறுபடியும் மூடின.

"தம்பி, உடம்பை அலட்டிக்காதே. நாங்க வந்து ஒரு வாரமாச்சு. நீ தான் லெட்டர் கூடப் போடலியே, அப்பா? மாலினியும் மாமாவைப் பார்த்தாத்தான் ஆச்சு என்று பிடி வாதம் பிடித்தாள். அழைத்து வந்தேன். நீ தூங்கு. பின்னால் பேசலாம்," என்றாள் மங்களம்.

பல முறை தன்னை இரண்டாம் கல்யாணம் செய்து கொள்ள தன் சகோதரி எழுதியிருந்த பல கடிதங்கள் அவருக்கு நினைவில் எழுந்தன. அவரது முகம் மாற்றம் காட் டியது.

'அக்கா ஏதுக்கு இங்கே வரணும்? ஆமாம்; நண்பர்தான் எழுதி இருப்பார். அக்காவோடே மாலினியும் வரக்காரணம்'

அக்கா திரும்பத் திரும்ப என் மறுமணம்பற்றி நச்சரிப்பதற்கு பூடகமான காரணம்? மாலினிதான் காரணத்திற்குரியவளா?...' மேலே அவர் நினைவுச் சங்கிலி தொடர் சேரவில்லை.

ஜுரவேகம் தணிந்து வந்தது. மாலினி அவர் அருகேயே இருந்து கொண்டு அவரைக் கண்காணித்து வந்தாள்; வேண்டிய பணிவிடைகள் செய்தாள். இவற்றையெல்லாம் கண்ட சுதர்சனுக்கு மனம் குழம்பி வந்தது. அவளது இத்தகைய சிரத்தைக்குக் காரணம் என்னவாயிருக்குமென்பதையும் அவர் உணரலானார். வரவர, அன்று வந்த தன் தங்கை, தமக்கையின் கடிதங்களின பொருளையும் இப்போது அவர் புரிந்துகொள்ளலானார். எல்லாவற்றிற்கும் காரணம் மாலினி! அவள் தன் மாமா சுதர்சனுக்கெனக் காத்திருக்கும் கன்னி!

இம்முடிவைக் கண்டுபிடிக்க சுதர்சனுக்கு அதிக நேரமாகவில்லை. பெண் உள்ளத்தைப் பல கோணங்களில் ஆராயும் எழுத்தாளருக்கு இந்த மாலினியின் மனத்தைப் புரிந்து கொள்வதில் வியப்பிற்குரிய தொன்றும் இல்லைதான்.

"தம்பி, பல முறை உனக்குத் தபால் போட்டேன்: நீ பதில் ஒன்று கூடப் போடவில்லை. மாலினியை மனசில் எண்ணித்தான் நான் உனக்குப் பல தடவை எழுதினேன். சதா அவள் உன் நினைவாகவே இருக்கிறாள். உன்னை தன் கணவனாக அடைய வேண்டுமென்பதே அவள் இலட்சியக் கனவு. சாந்தினியின் இடத்திற்கு அவள் எவ்விதத்திலும் தகுந்தவள். வீட்டில் விளக்கேற்றி வை. உன் வாழ்வையும் வளம்பெறச் செய்வதில் சிந்தனை கொள், தம்பி. சாந்தினி இருந்த இடத்தில் நீ என் மாலினியை அமர்த்திக் கொண்டால், சாந்தினியின் ஆவி எவ்வளவோ சாந்தி பெறும். தம்பி நல்ல முடிவு சொல்: மாலினி வாழ, உன்னுடன் வாழ நல்ல முடிவு கூறு...சுதர்சன்!..."

மங்களம் இப்படிப் பேசினாள்.

சுதர்சன் வியந்து போனார், சகோதரியின் ஆதாரமுள்ள அழகான பேச்சைக் கேட்டு.

"மாலினியைத் தன் இடத்தில் நிரப்பிக் கொண்டால் சாந்தினி மனநிம்மதி பெறுவாளா? நிஜமாகவா? என்றென்றும் நானும் மாலினியும் அவள் நினைவாகவே இருந்துதானே தீருவோம்; அது கண்டு என் சாந்தினி புளகித்துப் போவாள் அல்லவா?" என்று பலவாறு எண்ணக் கிளிகள் தத்தித் தத்தி ஓடின அவர் உள்ளத்தில்.

மாலினியைத் தான் மணப்பதென்ற முடிவு அவர் உள்ளத்தில் உருப்பெற்ற தருணம் அது. பழைய புத்தகங்களைப் பிரித்துக் கொண்டிருக்கையில், சுதர்சனின் பார்வையில் டயரி ஒன்று பட்டது. அது சாந்தினியினுடையது. பிரித்தார்; ஏடுகள் இதழ் புரண்டன. அதில் ஒரே பக்கத்தில் மட்டும் ஏதோ எழுதப்பட்டிருந்தது. படிக்கலானார்.

"....அத்தான் படுத்த படுக்கையாய்க் கிடக்கிறாரே? கடவுளே, என் கணவரைக் காப்பாற்று. எனக்குத் தாலி பாக்கியம் அருள். அவர் ஒருவரே இன்றைய என் கனவு. என்னைச் சுமங்கலியாக வாழச் செய். இல்லையென்றால் என்னைச் சுமங்கலியாக, மஞ்சளும் குங்குமமுமாகச் சாகச் செய், தாயே. சாந்தினி பிரார்த்திக்கிறாள். இந்த அபலையின் பிரார்த்தனை கேட்கிறதா? அவர் பிழைப்பாரா? ஆகா; நானே பாக்கியவதி!"

சாந்தினி இறப்பதற்கு முதல் வாரம், சுதர்சன் உடல் நலமின்றி இருந்த சமயம், அவள் பெண் உள்ளம் அந்த டயரில் பிரதிபலிக்கப் பட்டிருந்தது. அவள் பிரார்த்தனை—அவள் கனவு—அவள் உள்ளம்! இம் மூன்றின் உயிராக விளங்கினாளே சாந்தினி?... சுதர்சனுக்குக் கண்கள் இருண்டு வந்தன.

'ஆம்; அவள் பிரார்த்தனை ஈடேறியது. அவள் சுமங்கலியாகவேதான் உயிர் நீத்தாள். சாந்தினி, நீ பெண்

தெய்வம். உன்னை மறந்து, என் சுயநலத்தில் மறுமணம் செய்து கொள்ளத் திட்டமிட்ட நான் பாவி. சாந்தினி, நீ என்னை மன்னித்துவிடு!'

மாலினியை தான் மணக்க இயலாதென்று கூறி விட்டார் சுதர்சன். மாலினியின் விம்மல் ஒலியும், பெரு மூச்சும் அவரது இதயத்தில் எதிரொலித்தன.

அடுத்த நாள் மாலினியும், அவள் தாயும் ஊருக்குப் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தார்கள்.

சுதர்சன் படுக்கையை விட்டு எழுந்தார். மேஜையில் வைத்திருந்த ஹார்லிக்ஸை சிறிது எடுத்து அருந்தினார். என்னமோ தோன்றியது; தன்னுடைய அச்சான பழைய கதைகளின் 'பைலை' எடுத்தார். அதன் முகப்பில் 'அன்புக் கணவருக்கு' என்ற குறிப்புடன் ஒரு கடிதம் இருப்பதைக் கண்டார். எழுத்துக்கள் சாந்தினியுனுடையவை. மங்க லாகத் தெரிந்தன. நடுங்கும் கரங்களுடன், நீர் வழிந்த கண்களுடன், துடிக்கும் இதயத்துடன் அக்கடிதத்தைப் பிரித்தார். கடிதம் பேசியது:

''மதிப்புக்குரிய அன்புக் கணவருக்கு.

மரணப்படுக்கையில் ஊசலாடும் என் இறுதி மொழிகள் இவை. நான் இனிப் பிழைக்கமாட்டேன். எனக்குப் பின், என் இடத்தை இட்டு நிரப்ப ஒருத்தி காத்திருக்கிறாள் என்று அறிய எனக்கு எத்தனை மகிழ்ச்சி புரளுகிறது, தெரியுமா? அவள்தான் மாலினி. எவ்விதத்திலும் அவள் என் மறு பதிப்பு. அவள் உங்கள் அன்புக்குத் தவங் கிடக்கிறாள். அவளை இரண்டாந்தாரமாகக் கலியாணம் செய்து கொண்டால் என் உள்ளம் அமைதி பெறும்.

இப்படிக்கு,

சாந்தினி.''

மாண்ட தன் மனைவி மீண்டும் தன் முன் நேருக்கு நேர் நின்று பணிப்பதாகப்பட்டது சுதர்சனுக்கு. அவரது உடலெங்கும் ரோமாஞ்சலி கிளர்ந்தது.

அழுது அழுது வீங்கிக் கிடந்த முகத்துடன் தாயுடன் புறப்படத் தருணம் பார்த்து நின்ற மாலினியிடம் ஓடி அவள் பூங்கரம் பற்றி, "மாலினி, இனி நீ என் துணைவி. இது என் சாந்தினியின் ஆணை; எங்கே ஒரு முறை சிரி...." என்றார்.

அழகு ரோஜாவாகக் காட்சி தந்தாள் மாலினி!

தென்றலில் ஆவி கலந்து தழுவிடும் தென்பாங்குப் பாவின் மகத்துவத்திற்கு ஒப்புச் சொல்ல உதாரணம் இருக்கின்றதா?

சுதர்சன்—மாலினி திருமணமும் நடந்தது.

அன்று அவர்களது 'முதல் இரவு'. நிலவு சிரித்துக் கொண்டிருந்தது. முகில் கூட்டங்கள் கண்ணாமூச்சி விளையாடின. தென்றல் பூப்பந்தாடியது. இதமான வேளை; இன்பமான நேரம்.

வளை குலுங்கும் நாதம் இழைந்து வந்தது. படியேறிச் சென்றார், சுதர்சன். அவர் உள்ளம் எம்பிக் குதித்தது. ஆனால், உள்ளே சென்றதும், அவர் கண்ட காட்சி அவரது நெஞ்சை இறுக்கிச் சாறு பிழியச் செய்தது. அங்கு அழுத கண்ணீருடன், துயரமே வடிவாக நின்றாள் மாலினி.

சுதர்சன் திடுக்கிட்டார்.

"மாலினி!...."

"..............."

"மாலினி!...."

"மாமா, முதலில் என்னை மன்னிப்பீர்களா? நான் துரோகி. சாந்தினிக்குத் துரோகம் செய்துவிட்டேன்.

அவள் எழுதியிருந்ததாக நீங்கள் நினைத்திருக்கும் அக்கடிதம்–என்னை மணந்து கொள்ளக் கோரியிருந்த அக்கடிதம்-நான் எழுதியது. உங்கள் மனத்தை மாற்ற என் மனோதத்துவம் கற்பித்த பாடம்! அத்தான், என்னை மன்னியுங்கள். என் மனச்சாட்சி கடந்த சில நாட்காளாக எனக்குத் தக்க தண்டனையை அல்லும் பகலும் கொடுத்து விட்டது. மாமா!....” என்று அழுதாள் மாலினி.

இந்த முடிவைச் சுதர்சன் எவ்விதம் எதிர்பார்த்திருப்பார்? அவர், கண்களில் கனல் பறக்க நின்று கொண்டிருந்தார். எதிரே இருந்த அவரது முதல் மனைவி சாந்தினியின் புகைப்படம் அவரை ரம்பம் கொண்டு அறுப்பது போன்ற உள்ள வேதனை எய்தினார் அவர்.

“துரோகி!” என்று ஓலமிட்ட அவர் தன் மனைவி மாலினியை ஓங்கிப் பிடித்துத் தள்ளினார். அவள் தரையில் தஞ்சமடைந்தாள்; ரத்தம் குமுறிப் பாய்ந்து அவளுடைய பொற்பாதங்களைத் தஞ்சமடைந்தது. கடைசி மூச்சும் பிரிந்தது.

மறுநாள் சுதர்சனுக்கு ஒரு கடிதம் வந்தது.

**“அன்புக் கணவர் அவர்களுக்கு,**

உரிமை பாராட்டி அழைக்கிறேன்—உரிமையை அனுபவிக்க கொடுத்து வைக்காதவளாகி விட்டாலும்! உங்களை என் பதியாக என்றோ வரித்தேன். ‘உங்கள் மனைவி நான்’ என்று என்னுள் ஒரே முறை கூறிக்கொண்டாலும் போதும் என்ற துடிப்பு வெறியில் உழன்ற நான், வெற்றி பெற்றேன். சாந்தினி எழுதியது போல நான் அன்று உங்களுக்குக் கடிதம் எழுதி வைத்தேன். குற்றந்தான்! அதை என் ஆயுட் காலம் முழுதும் மறைத்து வைத்திருக்கலாம். என் மனச் சாட்சி என்னை வதைத்தது. ரகசியத்தை உங்களிடம் கூறினால், நீங்கள் எரிமலையாக வெடிப்பீர்கள் என்பதையும் அறிந்தேதான் இதோ, இந்தப் பாலை அருந்தி உங்களிடம்

விடைபெறுகிறேன், உங்கள் மனைவியாக நின்று! என் பாக்கியம் அவ்வளவு தான்! என்னை மன்னியுங்கள். உங்கள் பாதங்களுக்கு என் கடைசி வணக்கங்கள்.

மாலினி.''

இலக்கியச் சந்தையில் புதிதாகப் பூத்த கதைமலர் வாசகர்களது கவனத்தைக் கவர்ந்தது. பெயர்: 'மூன்று துருவங்கள்.'—ஆசிரியர் சுதர்சனின் நூல் அது.

முதல் ஏட்டில் 'காணிக்கை' என்ற தலைப்பைக் கண்டேன்.

"தழுவாத மூன்று துருவங்கள் என் வரை — எங்கள் மூவர் வரை - தழுவும் துருவங்களாக வாய்ப்பு அண்டியும், அவை பிரிந்து விட்டன. பித்தனாகி ஏங்கித் தவித்து நிற்கும் நான், என் மனைவியாக அங்கம் வகித்து உயிர் நீத்த என் முதல் மனைவி சாந்தினி, பின், என் இரண்டாம் மனைவியாக ஒரு கணம் நின்று நிறைவுற்றுப் பிறகு விடுதலை பெற்ற என் உயிர்த்துணைவி மாலினி ஆகிய என் இரு துணைவிகளின் இன்ப நினைவாக என்னுடைய இந்த 'மூன்று துருவங்கள்' எனும் தொகுதியை அவர்கட்குக் காணிக்கை செலுத்துகிறேன்.

சுதர்சன்.''

# அபர்ணா—தாரணி

'ஸ்கூட்டர்' அந்த பங்களாவின் முகப்பு வாசலில் வந்து நின்றதுதான் தாமதம்! வேலைக்காரன் ஒருவன் ஓட்டமாக ஓடிவந்து, ஸ்கூட்டரை அழகேசனிடமிருந்து வாங்கிக் கொண்டு, அதை அதற்குரிய இடத்தில் பத்திரமாகவைத்துப் பூட்டினான். டென்னிஸ் மட்டை கைகளில் சுழல, நற்கனவு களின் இனிய நினைவுகள் நெஞ்சினில் சுழல, சுழன்றோடும் விழிகளை ஒரு நிலைக்குக் கொணர்ந்தவனாக அவன் பற்களைக் கடித்தான். 'இராஜ பாளையம்' தன் நன்றிப் பண்பை வாலில் இணைத்துக் காட்டிற்று. அவன் சிரித்தான். வேலைக் காரப்பையன் 'ஸல்யூட்' அடித்தான். அதற்கும் அவன் ஒரு தரம் சிரித்து வைத்தான். உற்ற பாசம் துள்ள, பத்துமாதம் சுமந்த பரிவு பெருமிதமடைய, பெற்றவள் வந்தாள். பணி வும் பாசமும் கலக்க, அவன் அவளிடம் அண்டிப் போனான். அவள் அவனது நெற்றியைத் தடவி கொடுத்து விட்டு, பிறகு, கையிலிருந்த காப்பிக் கோப்பையை நீட்டினாள். "அழகேசா!" என்ற தந்தையின் குரலுக்கு, "வந்திட்டேன் அப்பா; இன்னிக்குப் பந்தயத்திலே எனக்குத்தான் வெற்றி!" என்று சொல்லியவாறே, உடைமாற்றும் அறையை நாடி ஓடினான் அழகேசன்.

சிவப்பு விளுடி முள், கண்ணுக்குத் தெரியாத அமைப் புடன் கடமை இயற்றிக் கொண்டிருந்த நிமிஷ முள்ளைச் சுற்றிச் சுற்றி வேகமாக ஓடியது.

அந்தி வானத்தில் மலர்ந்து விளையாடிய விந்தைக் கோளங்களின் வர்ணக் கோலங்கள் மாடித் தாழ்வாரத் தினைக் கடந்து கூடத்தில் இழைந்து, இறைந்து கிடந்தன.

அழகேசன் ஆரோக்கிய மலர்ச்சியுடன், தலைமுடியைக் கோதி விட்டவனாகக் கூடத்துக்கு வந்தான். எச்சில் கோப்பை யும் கையுமாக சுந்தரி அம்மாள் நின்றாள்.

“அம்மா!”

“தம்பி, ராத்திரிக்குப் பலாச்சுளை வத்தல் போட்டுக் குழம்பு வைக்கச் சொல்லவா? உனக்கு இஷ்டமான வடகம், அப்பளமும் பொறிச்சுப்பிடறேன்,” என்று கேட்டாள் தாய்.

“உங்க இஷ்டம், அம்மா!”

“என் இஷ்டம் எல்லாம் அடுத்த வாரம் ஆவணி பிறக்கிற மட்டுந்தானே, அழகேசா?”

அழகேசன் தன் அன்னையின் அருள் நிறை அன்பு முகத்தை, பக்தி மண்டித்தழைத்த பாச உணர்வுடன் நோக்கினான். விழிகளிலே கண்ணீரின் சுழிப்பு; மெய் வெளி யில் அழுந்தப் பதிந்த நடுக்கம்; இதயத்தின் அடிமட்டத் தளத்தினில் அழகுருக்கொண்ட இன்பக்கனவின் நிழலாட்டம். சுய நினைவை மறப்பதற்கும் நேரம், காலம் உண்டல்லவா?

“அப்படி ஏனம்மா சொல்றீங்க? உங்கள் இஷ்டத்துக்கும் விருப்பத்துக்கும் தான் அம்மா இங்கே முதல் இடமும் முதல் மரியாதையும் முதல் மதிப்பும் உண்டு!...நான் கைப் பிடிக்கும் அபர்ணா, உங்களை முதலில் பெருமைப்படுத்தி— சந்தோஷம் அடையச் செய்து, அப்புறந்தான் என்னவளாக மாறுவாள், அம்மா! பெற்றவளுக்குப் பின் தானே

உற்றவள்?...பாசம் வழி நடத்த, பந்தம் வழி தொடர வேண்டியதுதானே உலகானுபவம்?..."

அபர்ணு என்னும் தெய்வப் பெயர் அழகேசனுள் மருக்கொழுந்து மணமாக வாசனை கூட்டியது. கிள்ளிய இடத்திலெல்லாம் சுகந்தம் பரப்பும் பண்பு கொண்டதாயிற்றே மருக்கொழுந்து! எளிமையின் கோலம் கொண்ட மருக்கொழுந்தைத்தான் அபர்ணுவுக்குச் சாலச் சிறந்த உதாரணமாகத் தேர்ந்தெடுத்தான் அவன்!

"தம்பி, என்னமோ, என் ஆசையெல்லாம் நீ மன நிம்மதியோடவும் மனச் சந்தோஷத்தோடவும் இருக்க வேணுமிங்கறதுதான்!" பாசத்தின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வடிந்தது. உச்சியை நோக்கினுள். பிறந்த குழந்தையை உச்சிமோந்த அந்த இன்பமிகு நன்னுட்களை அவள் எண்ணினுளோ?

"அண்ணு! அண்ணு!"

அழகேசன் திரும்பினுன்.

தம்பியும் தங்கையும் துள்ளி மகிழ்ந்து வந்தார்கள். 'ஸ்கிப்பிங் கயிறு' விளையாட்டுக் காட்டியது.

"அண்ணு, அம்மாவோட பேச வேண்டியதையெல்லாம் இப்பவே பேசிடு; அப்புறம் அண்ணி வந்ததுக்கப்பறம் 'டயம்' கிடைக்காதாக்கும்!..." ஒலிப் பதிவில் ஏற்பட்ட தவறு காரணமாக ஒரே குரலில் இரண்டு குரல்கள் 'பிசிறு' தட்டிப் பேசுமல்லவா, அந்தப் பாங்கில் பாலாவும் குமாரும் பேசினுர்கள்.

தாயும் தனயனும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்தார்கள்.

"தம்பி, பார்த்தியா மறந்துபிட்டேன். உனக்கு ஏதோ ரிஜிஸ்தர் கவர் ஒண்ணு வந்திச்சு. இனி நாளைக்குக் காலம்

பறத்தான் கிடைக்கும். ஞாபகம் வைச்சுக்க, அழகேசா!" என்று தெரிவித்தாள் தாய்க்காரி.

பத்தாம் நெம்பர் பஸ் அசுரவேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது.

தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை என்பார்கள்.

அழகேசன், தாயெனும் கோயிலின் தெய்வத் திருச் சந்நிதானத்தின் முன்னே பவ்யமாக நின்று உரிமையுடன் வேண்டிக் கொண்டான்: "அம்மா, நான் உங்ககிட்டே எப்போதோ சொல்லியிருக்க வேண்டிய தகவல் இது. சமய சந்தர்ப்பம் ஒண்ணுகூடி வரல்லே. இப்போ அந்தச் சந்தர்ப்பம் வாய்த்திருக்குது. இதையும் கைநழுவ விட்டுப்பிட்டேன்னு, என்னோட கனவையே கைநழுவ விட்டுப்பிட்டதாகவே உணர்வேன். அம்மா, உங்க விருப்பப் பிரகாரம் நான் உங்க தம்பி மகள் தாரணியைக் கல்யாணம் கட்டிக்கிட முடியலே. இதுக்காக நீங்க என்னை மன்னிச்சிடுங்க. தாரணி தங்கம். அது எனக்கு நல்லாப் புரியும். ஆனா, என் நெஞ்சிலேயேயும், நினைவிலேயும் நீக்கமற நிறைஞ்சிருக்கிற கடவுளாட்டம் ஒரு உயிர் முழுசா வடிவெடுத்துப் பரவிக் கிடக்குதின்னு, அது...அது அபர்ணா என்கிற பெண்ணாகத்தான் இருக்கும். ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு இடத்திலே- ஒவ்வொரு பேரிலே பிடிப்பமும் பிடித்தமும் உண்டாகிறது சகஜந்தான்; என்னோட நிலைமையையும் நினைப்பையும் நெஞ்சுதிறந்து சொல்லிப்பிட்டேன். அப்புறம் உங்க இஷ்டம், அப்பா இஷ்டம்!"

கண்ணீருக்கு இதயம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தக் கண்ணீரின் இதயம், பாசத்தின் இதயத்துடன் கலந்து பேசியிருக்க வேண்டும்.

சுந்தரி அம்மாள் முத்தாய்ப்பு வைக்கலானாள்: "தம்பி உன் மனசு போலவே அபர்ணா என்கிற பெண்ணையே கட்

டிக்க. ஜாதகம் அனுப்பச் சொல்லு. பெண் பார்க்க வார தாக லெட்டர் போடு! லவிதம் என்று ஒன்று இருக்குதில்ல, அதுப்படிதானே சகலமும் நடக்கும்...!"

தியாகராய நகரிலே அட்வகேட் அம்பலவாணன் என்றால், கைதேர்ந்த புள்ளி. கைவிட்ட 'கிரிமினல் கேஸ்' கட்டுகளுக்கெல்லாம் உயிருட்டிய மனிதர் அவர். தம் மைந்தன் அழகேசனை எம்.ஏ—பட்டம் பெறச் செய்தார். அழகேசனுக்கும் அவனுடைய அம்மான் மகள் தாரணிக்கும் திருமணம் செய்வித்து, அவன் கையால் அவள் கழுத்தில் மூன்று முடிச்சுகளைப் போட்டுவிடச் செய்யவேண்டு மென்பது அவரது அபிலாஷை. "அந்த நாளையிலேயிருந்து உன் ஒருத்தனுக்குத்தான் அந்தப் பெண் ஒளிந்து கொள்ளுகிறாள்! ஒளித்து வைத்திருக்கும் பட்சணங்களை உன் ஒருத்தனுக்குத் தானே அவள் கொண்டாந்து தருகிறாள்? புருஷன்—பெண் சாதி என்கிற பாந்தவ்யம் சின்ன வயசிலேயிருந்தே பிறந்திடும் போலிருக்கு!" என்று அவனிடம் அவர் பூடகமாய்ச் சொன்ன நாட்கள் ஒன்றிரண்டல்லவே!

விதி வலிது!

○ ○ ○

உதயம் எனும் மலர் ஏடவிழ்ந்து, மணம் எனும் செஞ்சுடர்ப் பிழம்பை உலக உருண்டையைச் சுற்றிலும் இழைந்தோடச் செய்து வேடிக்கை காட்டி, அவ்வேடிக்கையை விளையாட்டாக்கி அனுபவித்துக் கொண்டிருந்தது.

திருமண அழைப்பு மடல்கள் கட்டுக் கட்டாக மேஜை விளிம்பில் அடுக்கி வைக்கப் பெற்றிருந்தன.

அழகேசனின் மனக்கனவுகள், அவனது கைப்பிடியிலிருந்த பேனாவுக்கு ஊட்டம் கொடுத்து இயக்கின. எடுபிடிப் பையன் அழைத்துவந்த தபால்காரன், ஓர் உறையை எடுத்துப் படித்து நீட்டினான், அழகேசனிடம்.

பதிக்கப்பட்ட கையொப்பம், உறைவாயைத் திறக்கும் உரிமையை ஈந்தது.

அழகேசனின் நயனமணிகளிலே ஆர்வமும் ஆதங்கமும் ஒன்றுக்கொன்று சமன் நிலையில் இயங்கும் உணர்ச்சிகளாகப் பிரதிபலித்தன. மடிக்கப்பட்டிருந்த நான்கு மடிப்புக் கடிதத்தைப் பிரதிபலித்தன. மடிக்கப்பட்டிருந்த நான்கு மடிப்புக்கு கடிதத்தைப் பிரித்து நேர்வாக்கில் பார்ப்ப தற்குள், அவனுக்குப் பதட்டம் கண்டது. எம்.ஏ. பட்டப் பரீட்சையில் தேர்வை எண்வாரியாகப் பார்த்தபோதிருந்த தென்பு எங்கே ஓடிற்றோ? கடைசிப்பக்கம் புரட்டப்பட்டது. இமைக் கரைகளில் அதிசயம் கரை சேக்கப்பட்டது. இதயத் தினின்றும் வெய்துயிர்ப்புத் தள்ளப் பட்டது. 'இதயம் விடு தூது' போலும்!

அந்தக் கடிதத்துக்குப் பேசத்தானா தெரியாது?

"பெருமதிப்புக்கும் நல்வணக்கத்துக்கும் உரிய எனது எதிர்காலக் கணவர் அவர்களின் பாதகமலங்களில் தண்ட னிட்டு அடியாள் அபர்ணா எழுதுவதாவது:

என்னுடைய இந்தக் கடிதம் உங்களுக்குத் திகைப்பை அல்லது ஆச்சரியத்தை விளைவிக்கக்கூடும்.

அன்றொரு நாள், தஞ்சையம்பதியில் என்னைப் பெண் பார்க்க தாங்கள் வந்தீர்கள். பிஞ்சுப் பிராயமதில் என் பால் ஏற்பட்ட ஒரு நல்லெண்ணம் காரணமாக, தாங்கள் என்னை ஆட்கொள்ள விழைவதாக என்னிடம் தாங்கள் தெரிவித்ததைக் கேட்ட நிலையில், மெய்யாகவே நான் மெய் சிலிர்த்துப் போனேன். காலச் சக்கரத்தின் விபரீதச் சுழற் சியின் விளைவாக, அடித்தளத்திற்குக் கொண்டுவரப்பட்டு விட்ட எங்கள் குடும்பம் தங்களது உயர் அன்பினால் புத் துயிர் பெறப்போகிறதென்பதை அறிந்த நான் ஆண்டவனை நினைந்து நினைந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, அந்த மகிழ்வுத் துளிகளையே ஐயனுக்குக் காணிக்கையாகவும் வைத்ததுண்டு!

ஆம்: நாமெல்லோரும் ஆண்டவனுடைய விளையாட்டுப் பொம்மைகள். இல்லையென்றால், இப்படிப்பட்ட சிருஷ்டி விளையாட்டுக்கள் நிகழ வாய்க்குமா?

வாழ்வே ஒரு சோதனை என்று புரிந்தும், உணர்ந்தும், சொல்லியிருக்கிறார்கள் பெரியவர்கள்.

இப்போது நானே ஒரு சோதனைக் கட்டத்தில்தான் நின்றுகொண்டிருக்கின்றேன்.

நேர்முகம் காட்டி உங்களிடம் சொல்லத் தயங்கித் தத்தளித்த ஒரு செய்தியை இப்போது உங்கள் முன் வைத்திடவேண்டியவளாக ஆகியிருக்கிறேன். இது என் கடமை யாயிற்றே?

எனக்கு ஓர் அத்தான் இருக்கிறார். பெயர்; சுந்தரம். சுந்தரமானவர்தான். 'எனக்கு அவர்; அவருக்கு நான்' என்றே எங்கள் இருதரப்புக் குடும்பத்தவர்களும் தீர்மானம் கட்டி வைத்திருந்தார்கள். ஆனால், விதி மாறிச் சுழன்றது. எங்களைத் திசைக்குத் திசை மாற்றிவைத்துச் சுழன்றது. என் தந்தையின் வியாபார நொடிப்பு ஒருபுறம் இருக்கட்டும். அது எங்கள் வரை, எவ்விதமான சலனத்தையும் உண்டாக்க வில்லை. ஆனால்...ஆனால்...?

என் அத்தான் கைதேர்ந்த ஆட்டக்காரர். 'டென்னிஸ் சாம்பியன்'. சென்னைக்கும் தஞ்சைக்கும் நடந்த பந்தயத்தில் வெற்றி பெற்ற அன்று அவர் மகிழ்ச்சி துள்ள ஓடோடி வந்தார், கைமட்டையைச் சுழற்றிக் கொண்டே. களைப்பின் மிகுதியால் ஏற்பட்டிருந்த கிறுகிறுப்பினால் அவர் நிலை தடுமாறிச் சாய்ந்தார். சாய்ந்த வேகத்தில், நடையில் கிடந்த அரிவாள்மனை அவருடைய சோற்றுக்கை முட்டை வெட்டி விட்டது. தொடக்கத்தில் அசிரத்தையுடனும் அஜாக்கிரதையாயும் இருந்ததால், நிலை சீர்கெட்டது. இறுதியில், அவரது வலது கை வீங்கியது; துடித்தார். வலக் கையில் உள்ளுக்குள்ளேயே புரையோடிப் போய்விட்ட புண்

காரணமாக, அவர் தனது வலது கையை இழக்க நேரிட்டு விட்டது!...ஐயோ, காலம் கொடிது!

என் அன்பு அத்தானிடம் விளைந்த இம்மாறுதல், என் இதயத்துள் எத்தகைய மாறுதலையும் எழுதிக்காட்டவில்லை. "அத்தான், நான் என்றென்றும் உங்கள் அடியாள்தான். என்னை ஏற்று ரட்சியுங்கள். உங்களுக்குச் சகல விதத்தி லும் நான் துணை நிற்பேன்," என்றேன்; நெஞ்சு நெக் குருகச் சொன்னேன். எரிதழலில் தூவப்படும் சாம்பிராணி யினின்றும் எழுகின்ற நறுமணமென என் இதயம் அவர் மனத்திடை மணத்தைப் பரப்பியதை நான் அவரது முக பாவத்திலிருந்து கண்டுகொண்டேன். ஆனால் நான் பாவி, கொடுத்து வைக்காதவளாகிப் போனேன்.

"உன் எழில் ஆதரிச எழில். முழுமை பெற்றிருக்கும் உன்னுடைய அழகிலே இணைவதற்கு, குறைபட்ட என் எழில் தகுந்ததன்று. என்னை நீ என்றென்றுமே மறந்துவிட வேண்டி நேரிடும். நிறை பெருக்குக்குள் என் குறை உடலைத் திணித்துக் கொள்வேன்!" என்று ஆணை வைத்தார்.

நான் துடித்தேன். தரைமீனானேன். "அத்தான், உங் கள் கருத்தெதுவோ, அதன் பிரகாரமே நான் நடக்கிறேன். நீங்கள் என்றென்றும் என் கண் பார்வையில் இருங்கள். அதுவேதான் எனக்கு அளப்பரிய ஆறுதல் நல்கும். இந்த ஒரு வரத்தையாகிலும் தாருங்கள்!!" என்று வேண்டினேன்.

அவர் சிரித்தார்.

என் மனம் அழுததை அவரிடம் எங்ஙனம் கோடிட்டுக் காட்ட முடியும்?

"உனக்கென்று—உன்னுடைய ஒவிய எழில் நிறைக் கென்று வேறு ஒருவர் ஜனித்திருக்க வேண்டும். பாரேன், உனக்குரிய மாப்பிள்ளையைத் தேடிப் பிடிக்கிறேனா, இல்லையா என்று!" என்று மகிழ்வின் பாதையில் மடங்கி நின்று, ஆசை யின் கனல் வீச்சுடன் நாத் தழுதழுக்கப் பேசினார்.

அத்தான் தெய்வம்!

அடுத்த கட்டத்தில்தான் நீங்கள் தெய்வ உருக்கொண்டு வந்தீர்கள்.

விட்டகுறை—தொட்டகுறையின் விளைவுகள் சரித்திரப் பிரசித்தம் அடைந்தவையாகும்.

உங்கள் மனங் கவர்ந்த அடியாளின் வேண்டுகோள் இதுவே; என் அத்தான் அவர்களுக்கு இன்றைய அளவில் என் ஒருத்தியைத் தவிர, வேறு எந்த ஆதரவோ, நிழலோ இல்லை. ஆகவே, என் அத்தான் என்றென்றும் நம்முடனேயே இருக்க தாங்கள் பெருந்தன்மை கொண்டு அனுமதி தருவீர்களா?

நான் உணர்கிறேன்: தாங்கள் என்மீது கொண்டுள்ள அன்பு, இதயபூர்வமானதொரு மகத்தான நம்பிக்கையின் வாய்மடையில் ஜனித்திருப்பதாகும். விதியும் காலமும் தோற்றுவித்த புதுவெள்ளப் பெருக்கில் கலந்திருந்த தூசு தும்பட்டையெல்லாம் மடைவாயிலேயே தங்க, அதன்பின் பிறந்து ஓடிவரும் நிர்மலமான புதுநீர் போன்ற தங்கள் பாசத்தை நான் தீர்க்கமாக அறிவேன். உங்களது அடையா நெடுங் கதவமான அந்த அன்புக்கு—அந்தப் பாசத்துக்கு என்னுடைய இந்த விண்ணப்பம்—உண்மைநிலை 'தாழ்' எதையும் இட்டுவிடலாகாதேயென்ற பயத்தில்தான் முன் கூட்டியே தங்கட்குத் தெரிவிக்கலுற்றேன். இந்த ஒரு வேண்டுதலையின் தலைவாயிலில் நின்று, பலன் எதையும் கருதமாட்டாத பக்தை என்ற நிர்ணயிப்பில், தாங்கள் என் அன்பை மதித்து, உரிய மதிப்பு அருளுவீர்களாயின், என்னைப்போல இப்பூவுலகிலே பாக்கியவதி வேறு யாரும் இருக்க இயலாது! அன்பு எதையும் கேட்காது. ஆனால், தங்களிடம் கேட்டு விட்டது!

தங்கள் தாய் தந்தையரின் அனுமதி கூட்டி, கைகூடி வந்த நல்ல தகவல் ஒன்றினைத் தங்கள் மறுமொழியாக மறு

தபாலிலேயே எதிர் நோக்கித் தவம் கிடக்கிறேன். எல்லாம் ஸ்ரீ பிரஹதீஸ்வரர் துணை.

இங்ஙனம்
தங்கள் அடியாள்,
**அபர்ணா.''**

சுழித்த சுடுநீரை மெல்ல வருடிப் போக்கடித்தான் அழகேசன். அக்கணமே, அவன் அவசரத் தந்தி ஒன்றை அனுப்பினான்: ''உன் எண்ணம் எதுவோ அதையே என் கடமையாகவும் ஏற்கச் சித்தமாயிருக்கிறேன்.

**அழகேசன்.''**

இளம்பருவத் தடம் ஒன்று.

அழகேசன் எலிமெண்டரி ஸ்கூலில் படித்தான். வகுப்புத் தோழி அபர்ணா. அருகருகான இடம். அபர்ணாவின் குடும்பம் பசையுடன் வாழ்ந்த காலம். அழகேசனுக்கோ புதுப் புத்தகங்கள் வாங்குவதற்குக்கூட இயலாமை; தடங்கல். இரண்டு நாள் சேர்ந்த மாதிரி புத்தகங்கள் வாங்கப்படாததால், அவன் பெஞ்சியின்மேல் ஏற்றப்பட்டான். அவனுடன் அபர்ணாவும் அந்தக் கதிக்கு உள்ளானாள். மறுதினம், அவனுக்கு உண்மையின் இரு வேறு கிளைகளின் தாத்பரியம் புரிந்தது. அவனுக்கும் சேர்த்துப் பாடப்புத்தகங்கள் அனைத்தையும் அவள் வாங்கி வந்தாள். முதல் நாளில், அவனுக்காகவே தான், தன் புதிய புத்தகங்களை மறைத்துவிட்டு, அவனுடன் பெஞ்சியில் ஏறி நின்றாள். இது பரம ரகசியமாம்!

தஞ்சை, எல்லையம்மன் கோவில் தெருவில் நடந்த நிகழ்ச்சி இது. கனவின் கனவாக-அன்பின் அன்பாக-இச்சம்பவம் அதனுள்ளே வாழ்ந்து, அவனை வாழவைத்த கதையை அவன்தான் அறிவான்! புயலில் சிக்கிய தளிராக, அபர்ணாவின் குடும்பம் காலவினைக்கு உடந்தையாகித் தவித்துத் தடுமாறிய கதையை அவளே அறியமுடியும்!

இறைமைச் சக்தியின் தலைமையின் கீழ், ஹோமத்தீ முன்மொழிய, கொட்டுமேளம் வழிமொழிய, வாழ்ந்து காட்டியவர்களின் முன்னிலையிலே, சிரஞ்சீவி அழகேசன் செளபாக்கியவதி அபர்ணாவுக்குத் திருப்பூட்டினான்.

ஆண்மையும் பெண்மையும் அதனதன் அளவில்—அதனதன் போக்கில் 'முழுமை' பெற்றன. இருவரும் உடலும் உயிரும் ஒன்று கலந்த பண்பாட்டில், காலம் பண் பாடிப் பறந்தது.

அழகேசனுக்கு அந்த ஒரு காட்சி பசுமை தட்டித் திகழ்ந்தது. கையிலேந்திய மங்கலநாணுடன், நாணம் பூத்த மணம் கமழ் மலராக-ரோஜாப் பூவாக, குனிந்த தலை நிமிராமல், நிமிர்ந்த பெருநோக்குப் பாசம்—அன்பு குனியாமல் வீற்றிருந்த மணப்பந்தல் கொலுப்பதுமையை ஜாடை சேர்த்துப் பார்த்திடத் தவித்த நேரத்தில், அவனது கண் விரிப்பில் அது சமயம் தாரணி தட்டுப்படுவாள், கண் கட்டு மாயம் செய்வாள், தாளையடிப் பயிர் உதிர்க்கும் நெல்மணிகளாய் தன் நினைவுகள் சிதறுமென்று அவன் கணித்திருக்கவா முடியும்? இல்லை, அந்தப் பெண் தாரணியின் அந்த ஒரு சொட்டுக் கண்ணீரின் பொருளை மாற்றுரைத்துச் சோதிக்கத்தான் அவன் சாகஸம் பயின்றவனா?... காதலின் கதையில் கண்ணீரின் கறை இருக்கத்தான் செய்யும். கண்ணீரின் கறையில் காதலின் கரை தென்படாமல் இருப்பதும் நியதிக்கு முரண்பட்ட கோட்பாடல்லவே! என்னவோ, காதல்!... என்னவோ, வாழ்க்கை!... விளையும் ஆசாபாசங்களையும்-நொறுங்கிச் சிதறும் ஆசாபாசங்களையும் நம்பித்தான் உலகம் உருள்கிறது!

அடிக்கடி அழகேசன் எண்ணமிடுவது இயல்பு: 'தாரணி தங்கமான பெண். அவள் விரும்புகின்ற நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்துத் திருமணம் முடித்து வைத்தால்தான் எனக்கு அமைதி பூக்கும்!...'

"குட்மார்னிங், மிஸ்டர் அழகேசன்!"

அழகேசன் விழித்துப் பார்த்தான்.

மேற்சட்டையின் வலதுகைப் பகுதி துவண்டு விழ, புதுமலர்ச் சிரிப்பை மாற்றுமல் வந்து நின்ருன் சுந்தரம்.

"குட்மார்னிங்...வெரி குட் மார்னிங்! உட்காருங்கள்!"

சுருட்டைத்தலை முடியுடன் வம்பாடிக் கொண்டிருந்த சீப்பைக் கையில் பற்றியவாறு, அவன் சுழல் நாற்காலியைச் சுற்றிய நேரத்தில், காலமெனும் சுழல் நாற்காலியும் சுழன்றது.

அழகேசனின் டென்னிஸ் ஆட்டத் திறன் பற்றி மாம்பலம், மயிலாப்பூர் வட்டங்களிலே நல்ல பெயர். ஒரு முறை, சென்னைக்கும் தஞ்சாவூருக்குமிடையே பந்தயம் நடந்தது. 'ஸிங்கிள்ஸ் ஆட்டம்'—ஒரு பக்கம்: அழகேசன். எதிர்த் தரப்புக்கு: சுந்தரம்! 'பாயிண்ட்ஸ்' கணக்கில் லயித்து, ஆட்டத்தின் சரிசமானமான திறமையில் மயங்கி நின்ற பார்வையாளர்களுக்கு இறுதியில் ஒரு செய்தி கிடைத்தது: அதுதான், சுந்தரத்தின் வெற்றி குறித்த செய்தி. வெற்றிக் கோப்பையும் தானுமாகக் காட்சியளித்த சுந்தரத்தின் உருவத்தை அழகேசன் பலமுறை நினைத்துப் பார்த்ததுண்டு. ஆனால், அந்த ஆட்டமே அவனுக்குக் கடைசி ஆட்டமாக அமையுமென்று அவன் நினைத்ததுகூட கிடையாது. 'அந்தச் சுந்தரம் என் அபர்ணுவுக்குச் சொந்த அத்தான்!'

அபர்ணு பலகாரத் தட்டுக்களுடன் அறைக்குள் நுழைந்து, தட்டுக்கள் இரண்டையும் ஸ்டூலில் வைத்துத் திரும்பினுள்.

அழகேசன் ஒரு தட்டைத் தன் மடியில் வைத்தான். சுந்தரத்தைப் பற்றிய சுயநினைவு அவனுள் வீறிட்டபோது, அவனுள்ளே பூகம்ப அதிர்ச்சி எழுந்தது. தன் தட்டை

எடுத்து ஸ்டூலின் மீது திரும்பவும் வைத்தான். சுந்தரத்தின் நாற்காலியுடன் தன் நாற்காலியை இணையாக நகர்த்திப் போட்டுக் கொண்டு, அவன் மடியிலிருந்த தட்டினின்றும் இட்டிலியைப் பிட்டுத் துண்டாக்கி, சுந்தரத்தின் வாயில் போட்டான் அழகேசன். சுந்தரத்தின் கண்களில் பனித் திரை.

அபர்ணு வந்தாள். தாரணி வந்தாள். முன்னவள் கையில் நெய்: பின்னவள் கையில் காப்பி.

"அத்தான்! சுந்தரம் அத்தானுக்கு நான் பலகாரம் கொடுக்கிறேன். இருங்கள், நெய் ஊற்றுகிறேன். நீங்கள் முதலில் சாப்பிடுங்கள். கம்பெனிக்கு நாழியாகி விட்டது!" என்றாள் அபர்ணு. ஒரு தடவை, குளித்துவிட்டு வந்தான் சுந்தரம். அபர்ணுவை முந்திக் கொண்டு அழகேசன் அவனுக்குத் துணிமணி எடுத்துப் போட்டுவிட்ட சம்பவம் அவள் மனத்தில் ஆழப்பதிந்தது.

'ஒ.கே' சொன்னான் அழகேசன்.

நெய் ஊற்றினாள் தாரணி. "இன்னும் கொஞ்சம்!" என்று கேட்டாள்.

கையமர்த்தினான் அழகேசன், "சுந்தரத்துக்குப் பார்த்து ஊற்று, தாரணி!"

"ஓ...!"

சுந்தரம் 'போதும்' என்று நான்கு முறை சொல்லியும், அவள் கேட்டால்தானே?

ஸ்பூனில் ஊட்டிக் கொண்டிருந்த அபர்ணுவுக்கும் சேர்த்து நெய் அபிஷேகம் நடந்தது, ஜம் ஜம் மென்று!

உற்றவர்களும் உறவினர்களும் விருந்து முடித்து, அவரவர்களின் ஊரை நாடிப் போய்ச் சேர்ந்தார்கள்.

தாரணி மட்டுமே மிஞ்சினாள். "அபர்ணா, என் அத்தானை நீ கவனித்துக் கொள். உன் அத்தானுக்கு வேண்டியவைகளை நான் கவனித்துச் செய்கிறேன்!" என்று சொன்னாள்.

அபர்ணா எப்படி அகமகிழ்ந்து போனாள்!

ஒரு வாய்ப்பு:

அழகேசனும் சுந்தரமும் தடுக்குகளில் அமர்ந்திருந்தார்கள். கிருத்திகை. தாரணி தக்காளி சூப்பைக் கரண்டியில் எடுத்து ஊற்றினாள். ரசத்துளிகள் தாரணியின் விழிகளில் தெறித்து விட்டன. அவள் துடித்தாள். அழகேசன் எழுந்து, கைக்குட்டையினால் அவளது கண்மலர்களை ஒத்திட்டு, இதழ் குவித்து ஊதி, அவளுக்குண்டான வேதனை எரிச்சலைப் போக்கடிக்க முயன்று கொண்டிருந்த சமயத்தில், மோர்ச் செம்புடன் தோன்றிய அபர்ணா, ஆலயத்தின் முன் இருப்பது போன்ற களங்கமற்ற-பரிசுத்தமான அன்புக் கண் கொண்டு அக்காட்சியைக் கண்டு, பிறகு ஓடிச் சென்று, தாரணிக்கு உதவினாள்.

இளமை மதியம் பவனி வந்தது.

"அபர்ணா!..."

"அத்தான்!"

"என்ன, தீவிரமான யோசனையில் ஆழ்ந்து விட்டாயே!"

"ஒன்றுமில்லை; சுந்தரம் அத்தானைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தேன். பூர்த்தி பெறாதிருக்கும் அவர் வாழ்வைப் பற்றிய நினைப்பு, என்னையே உருக்குலைத்து விடும் போலிருக்கிறது!"

"சிருஷ்டியைத் தத்துவம் என்கிறார்கள் ஞானிகள். அப்படிப்பட்ட தத்துவம் இப்போது புதிராகவும் காணப் படுகிறதே!"

"ஊம், எல்லாமே வேடிக்கையாகத்தான் இருக்கிறது!"

அன்று பாதிச் சாமத்தில் விழிப்புப் பெற்ற அழகேசன், பீரோவைத் திறந்து 'ஃபைல்' ஒன்றைத் தேடி எடுத்தான்.

அது:

"அன்புக்கும் தொழுகைக்கும் உரிய அத்தான் அவர்களுக்கு, அனந்த கோடி நமஸ்காரங்கள்.

உங்கள் கடிதம் கிடைத்தது. நான் பேரதிர்ச்சி அடைவேன் என்று நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நான் அடிக்கடி உங்கள் முன் சொல்வது மாதிரி, உங்கள் வாழ்வும் வளமும் தானே என் கனவும் குறிக்கோளுமாகும்! உங்கள் நெஞ்சில் குடிகொண்டிருக்கும் பெண் கொடுத்து வைத்தவள். அட்டியில்லே! நான் உங்கள் தாரணி. உங்கள் அன்பின் ஏவுதலுக்காகக் காத்திருக்கும் தோழிப் பெண் நான். உங்கள் ஆணைதான் எனக்குக் கடமை. அதுவே எனக்குத் தேவ கட்டளை! பின், நான் எப்படி அத்தான் மன அதிர்ச்சி பெற முடியும்? என்னைப் பொறுத்தமட்டிலே, தங்களது அன்புக் கதவு எப்போதும் தாழ் இடப்படாமல் இருந்தால், அதுவே என் பூஜா பலனாக அமையும். நான் இருந்து உங்கள் கல்யாணத்தை நடத்தி வைப்பேன், அத்தான்!

இப்படிக்கு,
**தாரணி.**"

அழகேசன் கண் இமைகளைத் துடைத்துக் கொண்டு மீண்டும் படுக்கையைச் சரணடைந்தான்.

O

காலத்தேர் என்றாவது ஓய்வுக்காக நின்றதுண்டா?

தாரணி அந்தரங்க சுத்தியுடன் அபர்ணாவைத் தேடி வந்து, "அபர்ணா! உன் அத்தான் சுந்தரம் அவர்களை நான்

திருமணம் செய்து கொள்வதாய் முடிவு செய்திருக்கிறேன்!'' என்று உணர்ச்சி வசப்பட்டவளாகச் சொன்னதைக்கேட்ட அபர்ணு, ''நிஜமாகவா? ஆஹா! என் கவலைகளையெல்லாம் ஒரு நொடியில் தீர்த்து வைக்கும் தெய்வமாக மாறிவிட்டாய், தாரணி!'' என்று தேம்பிக் கண்ணீர் பெருக்கினுள்.

விவரம் தெரிந்ததும், அழகேசன் பூரித்துப் போனுன். ஆம். தாரணி தெய்வமேதான். மனிதப் பிறவியின் காணக் கிடைக்காத தெய்வம் அவள். என் அபர்ணுவின் மனத்துயர் துடைக்க, அவள் சார்பிலே தாரணியிடம் நான் தூது சென்று, கண்ணீரைக் காணிக்கையாக்கிக் கோரிய என் விண்ணப்பத்தைத் தேவகட்டளையாக மதித்து, தன்னையே தியாகம் செய்து கொள்ளத் துணிந்திட்ட தாரணி மெய்யாகவே தெய்வம்தான். இந்த மர்மம் என்னைத்தவிர, தாரணியைத்தவிர, வேறு யாருக்குத் தெரியும்?...'

○ ○ ○

விடிந்தது, பொழுது.

தாழ் விலக்கிக் கிடந்த அறையினுள்ளே அபர்ணுவுக்காக ஓர் உறைக்கடிதம் காத்துக் கிடந்தது.

''அன்புள்ள அபர்ணு!

விதியின் சேஷ்டையினுல் நான் குறைமனிதனுகிப் போனேன். எனக்குப் பூரணத்வம் நல்கியருள நீ பாடுபட்டிருக்கிருய். அந்தப் பெண் தாரணி தெய்வம்-அழகு எனும் தெய்வம்!... நான் எங்கே? அந்தப் பேசும் பதுமை எங்கே?

'விதி' விதித்த தத்துவத்தின் நியதிக்கு நான் எப்படிச் சவால் விடுவேன்?

தாரணிக்குத் திருமணம் ஏற்பாடாகி விட்டதென்னும் ஓர் இனிப்புச் சேதியை என் காதுகள் ஏற்ருல்தான், நான் இனி உன் நிழலைத் தஞ்சமடைவேன்!

உன் அன்புக்கும் உன் கணவர் அன்புக்கும் தாரணியின் அன்புக்கும் ஈடு செய்ய நான் எத்தனையோ பிறவிகள் எடுக்க வேண்டும்!

எல்லாம் அலகிலா விளையாட்டுடையானின் விளையாட்டு!

சுந்தரம்.''

○ ○ ○

''ஆமா, அபர்ணா! இது வெறும் பேச்சல்ல!... இன்னும் எத்தனை நாளானாலும் சரி; நான் பச்சைத் தண்ணியைப் பல்லிலே நாடமாட்டேன். அவங்க அவங்க மனசுக்குள்ளே அவங்க அவங்க இஷ்டப் பிரகாரம் ஒவ்வொரு முடிவு இருந்துக்கிட்டுத்தான் இருக்கும்! என்னை மாலையும் கழுத்து மாப் பார்க்க வேணும்னு, ஏன்னோடே எனக்குத் தெய்வமாய் துணையிருக்கிற மகிமை அவர்...சுந்தரம் அவர்களுக்குத்தான் உண்டு!''

தாரணி வெறிச்சோடிய பார்வையை வீசியவளாகத் தேம்பினாள்.

மூன்றாம் நாள்.

இரவு.

நடுநிசி.

தாரணியின் கண்ணீர்த் தாழினை விலக்கிக் கொண்டிருந்தது அந்த '**இடது கரம்!**'

அவள் நினைத்தாள்:

'...ஓர் இரகசியத்தை இனிமேல் அவருக்கு நினைவூட்ட வேண்டும். பிஞ்சுப் பிராயமதில் மணல் வீடு கட்டி விளையாடி மகிழ்ந்திட்ட வேளையில், என்னுடன் 'டூ' போட்டுக் கொண்டு பிரிந்த அவர், இனியாவது என்னுடன் 'ராசி'யாகி

விடுவார் அல்லவா? தொல்லைக் குவியல்களுக்கு மத்தியில் தவிக்கும் அவருக்கு இந்தப் பழங்கதை எங்கே நினைவிருக்கப் போகிறது? தெய்வத் தன்மைக்கு முன்னே வலிமையிழந்த தாகி விடுகின்ற இந்தப் பேதை மனத்துக்கு இதைத் தவிர வேறு ஆறுதல் இல்லவே இல்லையோ?...'

நழுவி விழுந்த அந்தக் காகிதக் கிழிசல் கீழ்க்கண்ட வாசகத்தை ஒலி பரப்பிய பெருமையுடன் காற்றில் பறந்தது!

"என் மரணத்துக்கு நானே காரணம்!—சுந்தரம்."

# புதிய அலையும் பழைய விதியும்!

ஹோட்டல் சொர்க்கம்.

அறை எண்: இருபது.

'டப்' பென்று ஒரு சத்தம் கேட்கிறது!...

எரிச்சல் முட்டி மோதியது; அரை மனசோடு எழுந்து உட்கார்ந்தான் சுந்தர்.

என்ன சத்தம் அது?

உடலில் பரவிக்கிடந்த இன்பக் கிளர்ச்சியின் இனிய கிளுகிளுப்பு மாறவில்லை; மறையவில்லை. இன்னமும் கண்கள் சுற்றுமுற்றும் பரபரத்தன.

அதோ, தரையிலே விழுந்து மல்லாந்து கிடக்கிறதே. அந்தத் தலையணை?

சே!...

'ஓ...சுஜா!' கால்கள் இரண்டையும் முறைப்பாகவும் முனைப்பாகவும் நீட்டினுன் அவன். நெடுமூச்சு நழுவியது. தகிப்பு கூடுதல்தான். உடல் உஷ்ணத்தின் விளைவாக இருக்க வேண்டும். தலைமாட்டில் இருந்த திண்டு இப்போது

என்னவோ சுகமாகவே இருந்தது. அவன் பார்வையில் மறுபடி அந்தத் தலையணை தட்டுப்பட்டிருக்கலாம்; கைகளைச் சொடுக்கிக் கொண்டான். அதில்தான் எத்தனை வெறி!—ஓ. நிர்த்தாட்சண்யமான வெறி!

வெளியே என்னென்னவோ சலசலப்புக்கள்; சந்தடிகள்.

அவனையும் மீறியோ அல்லது அவனையும் அறியாமலோ ஒரு நமட்டுப் புன்னகை உருவாகி, உருப்பெற்று நெளிந்தது. நெஞ்சிலே சதிராடிய சுஜாதாவின் அந்தச் சந்திரபிம்ப வதனமும், பருவக் கவர்ச்சி ஊடாடிய எழில் நிறைந்த அந்த இளம் மார்பகமும் அவனை ஆட்டிப் படைத்திருக்காதா?... 'ஓ, மைடியர் வீனஸ் சுஜா!...' மயிர்க் கால்கள் குத்திட்டு நின்றன. தொடைகளில் சொல்லிவைத்த மாதிரி இரண்டு சொட்டுச் சுடுநீர் மணிகள் சரம் துறந்து சுற்றிய முத்துக் களாக உருண்டன. நெஞ்சைப் பற்றிக் கொண்டான். மனம் துடிதுடித்தால் அவன் என்ன செய்வான்? பாவம்! இரண்டொரு நிமிஷங்களுக்குப் பிறகுதான் அவனால் மின் விசிறியின் ஆறுதலை உணர முடிந்திருக்கிறது.

கதவை யாரோ தட்டுகிறார்கள்!

ஸ்டுடியோவிலிருந்து கார் வந்திருக்கலாமோ?

'பெண்ணுக்கு ஆண்' படம் தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் ரிலீஸ் ஆக வேண்டும். எடிட்டர் ஸார் ஆள் அனுப்பி யிருக்கக்கூடும்.

தட்டினால், திறக்கப்படும் அல்லவா?

பொன் அந்தி மணத்தது; சிரித்தது.

பையன் நின்றான்; ஹோட்டல் எடுபிடி. 'ஜாகப்! ஸாரோ!' என்று விளித்தான். 'சாயா தரட்டே?' என்று கேட்டான்.

'ஊம்!'

சுந்தர் சுவாரஸ்யம் இழந்தவனாகத் தலையை ஆட்டி வைத்தான்.

பொடியன் அவனைப் பார்வையால் ஊடுருவினான். ஸாருக்கு மனைவிபேரில் இருக்கும் கோபத்தைப்பற்றி அவனுக்குத் தெரியமாட்டாதா, என்ன?

ஒரு மாற்றம் தேவை.

சுந்தரின் இதயம் சலனம் அடைந்தது. ஒரு நிமிஷம் கல்லாக இருந்தான். ஆட்ட பாட்டம் அற்ற ஜடநிலை. சுயப் பிரக்ஞை மீண்டது. அவன் சுந்தர் ஆனான். போராட்டம் புயலாயிற்று; புயல் போராட்டமாயிற்று. சே! என்ன வாழ்க்கை இது!—மன உளைச்சலைப் போக்கிட ஸ்டுடியோ பக்கம் போய் வந்தால் கூட தேவலாம் போலிருந்தது. நேற்றுப் பூராவும் ஸ்டுடியோவே கதி என்று எடிட்டிங் ரூமில் அடைந்து கிடந்தவன், பகலில்தான் தங்கும் இடத்துக்கு—தங்கும் மடத்துக்கு வந்தான். வந்ததும், ஹாயாகத் தூக்கம் போட வேண்டுமென்று திட்டமிட்டான். உடைகளைக் களைந்தெறிந்துவிட்டு, கைலியை உடுத்திக் கொண்டிருக்கையில், இந்தப் பயல் வந்து சுந்தரின் பசியை நினைவூட்டினான். அது சமயந்தான், சுந்தருக்கும் பசியின் உணர்வு தடம் காட்டியது; தடயம் காட்டியது. உணவு வந்தது. வந்த உணவில் 'புதினா' துவையலும் வந்தது. அதில் துளி எடுத்து வாயில் போட்டு ருசிபார்த்தான். கரித்தது. உப்பு என்றால் படு உப்பு! சே!...உப்பு நன்றியறிவுக்குத் தாஜ்மஹால் போலன்றோ!...பையனை விழுங்கிவிட அவன் யார்? கோபம் கண்களிலும் பற்களிலும் நெரிபட்டது. அதே சடுதியில் அடங்கவும் அடங்கி விட்டது. வேறு என்ன செய்துவிட முடியும் அவனால்? ஹோட்டல் முதலாளி மஜீத் ஸாஹேபும் சுஜாதாவும் ஒன்றா, என்ன?...

'சுஜா!...'

உந்திக் கமலத்தில் உருவாகி, உருக்கொண்டு, உருக் காட்டிய தங்கப்பதுமை சுஜாதாவின் பெயர் உச்சரிப்பில் அவன் நெஞ்சு உடைபட்டது, கசிந்தது. மனச்சாட்சி சவுக்கடி தர்பார் நடத்தியது போலும்! சுழித்த கண்களைக் கசக்கி விட்டவனுக, கொட்டாவிவிட்டு முடித்த வேளையில். விரல்களின் ஈரம் திருஷ்டியில் நிழல் விரித்தது. திருஷ்டி கழிக்கவா? அப்படியென்றால், அவனுக்கும் 'இதயம்' என்று ஒன்று இருக்கிறதோ?

ஜாகப் சாயாவும் கையுமாக வந்தான். வந்தவன் சுந்தரைப் பார்வையிட்டான். பார்வையென்றால் வெறும் பார்வையல்ல; மேற்பார்வை. இந்தச்சுந்தர்-நினைவுதடுமாறிக் கிடந்த நேரத்தில், இவனது உடலுக்கடியில் நிலை தடுமாறிக் கிடந்த சுஜாதாவின் போட்டோவைப் பார்த்திருக்கிறுன் சிறுவன். அனுதாபம் மேலிட்டது.

எடுபிடியின் பார்வை அவனைச் சுட்டிருக்கத்தான் வேண்டும். அவமானத்தால் குன்றியதோ உடல்? குனிந்த தலையை நிமிர்த்த மாட்டாமல், சாயாவைச் சூட்டோடு சூடாகக் குடித்துவிட்டான் சுந்தர். பையன் மறைந்த பின்பும், மறையாமல் இருந்த சூன்யத்தின் அநியாய ஆக்கிர மிப்பு அவனை என்னமாய் அலைக்கழிக்கிறது?

'சுஜா!'

யார் சிரிப்பது? சுஜாதாவைத் தவிர வேறு ஒருத்திக்கு இத்துணை கார்வை லயத்தோடும் மீட்டர் சுத்தமாகவும் சிரிக்கத் தெரியுமா? சிரிக்க முடியுமா? சிரித்துக் காட்ட முடியுமா?

சுந்தர் தவித்தான். தரை மீன் என்பார்களே, அப்படி. நெஞ்சுக் குருத்தை யாரோ பிய்க்கிறுர்கள்!—'ஐயோ, சுஜா!' மனச் சாட்சிக்கு அழத் தெரியுமோ?

இந்தத் தேனும்பேட்டைத் தொகுதிஅவனுக்குச்சொர்க்க மாக—பூலோக சுவர்க்கமாகப் பொலிந்த காலம்—பொற்

காலம் ஒன்று இருக்கத்தான் இருந்தது. கனவல்ல அது கதையும் அல்ல!

தாய்வழிச் சொந்தம் விட்டுப் போகாமல் தொட்டுக் கொள்ளும் வகையில், தாய் தேர்ந்தெடுத்துக் கொடுத்த அழகி சுஜாதாவை சுபயோக சுபதினமொன்றில் கைத்தலம் பற்றின அந்தப் பொன்னுன வேளையை அவன் அன்றும் மறக்கவில்லை: இன்றும் மறக்கவில்லை.

என்னவோ ஒரு சோதனைக் காலம் —அவனும் அவளும் பிரிய நேர்ந்து விட்டது.

ஒரு நாள்:

ஸ்டூடியோவில் 'விதிச்சுழல்' படத்திற்கான படத் தொகுப்பு அலுவல்களை உதவியாளர் என்ற பொறுப்பின் கடனேடு முடித்துப் போட்டு விட்டு, கம்பெனிக் காரில் வந்து இறங்கினுன் அவன்.

சுஜாதா அவனுக்காகக் காத்திருந்தாள். அவனைக் கண்டதும், கதிர் முத்தம் பட்ட கமலமாக மலர்ந்த அவள், 'வாங்க, அத்தான்,' என்று முகமன் மொழிந்தாள். உணவு பரிமாறினுள்.

புதினு துகையல் என்ருல் அவனுக்குஎப்போதுமேநிரம்ப இஷ்டம்.ஆசையாக ஒருதுளியையெடுத்துப் பதம் பார்த்தான். உப்புக் கரித்தது. கரிப்பு என்ருல், அசாத்தியக் கரிப்பு. அவ் வளவுதான்! அவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து தொலைத்தது. கோபம் வந்துவிட்டால் அவன் மனி தனுகஇருந்து பழகாதவன். சுஜாவுக்குத் திருப்பூட்டிய மறுமாதமே அனுபவபூர்வமாகப் புரிந்து கொண்டாள். இப் போது அவள் குடித்தனப் பாங்கின் சாதுர்யத்தோடு, கொண்டவனைச் சமாதானப்படுத்தத் தயாராக இருந்தாள். ஆனுல் அவன் அந்தச் சமாதானத்தை மனிதாபிமானத்தோடு அங்கீகரிக்கத் தயாராக இருந்தால்தானே? அவன் அடித்த எல்லா அடியையும் உதைத்த எல்லா உதையையும் வைராக்

கியத்தோடு தாங்கிக் கொண்டாள் அவள். சாஸ்திரத்துக்கு ஒரு துளி கண்ணீர் விடவேண்டுமே அவள்!— ஊஹூம்! —மூச்!

அக்கம் பக்கத்தவர்கள் சுஜாதாவின் பொறுமையைப் போற்றினார்கள். ஆனால் அந்தப் பொறுமையை மதிக்கவோ, பாராட்டவோ, பரிகாரம் செய்யவோ சுந்தருக்குத் தெரிய வில்லை; ஆமாம், புத்தியில்லை!

அன்றிரவே சுஜாதா 'தூத்துக்குடி'யில் உறையூருக்குத் தாய் வீடு நோக்கிப் புறப்பட்டு விட்டாள்.

அவள் வீம்புக்கு அவன் வீம்பு ஒன்றும் சளைத்து விடவில்லை.

காலம் ஒரு புள்ளிமான் தான்!—சொன்ன வாய்க்கு ரேஷனில் கிடைத்தால் ஒரு மூட்டையாகக் கூட சர்க்கரை யாகக் கொட்டிவிடலாம்!

பஸ்ஸர் அழைத்தது.

○ ○ ○

பெர்க்லி வந்தது.

சுந்தர் நெடுமூச்செறிந்தான். அதில், எட்டு மாதம் ஒன்பது நாட்களின் பாலன்ஸ் ஷீட்டாக ஏக்கம், ஆத்திரம் விரகதாபம், பிரிவாற்றுமை, உறுத்தல் என்று உணர்வுகள் சுழித்தும் முறுக்கேறியும் வெளியேறிக் கொண்டிருந்தன.

லெதர் சூட்கேஸ் கண் சிமிட்டுகிறது.

சுந்தர்—சுஜாதாவின் திருமணவினைப் படம் அது. இருவருக்கும்தான் எவ்வளவு கம்பீரமான ஜோடிப் பொருத் தம்.

'சுஜா!...'

முந்திரிக் கொட்டையாகத் தலையை நீட்டியது ஓர் அரைகுறைக் கடிதம்.

நிழற்படம் தரையில் நழுவி விழ. அந்த லெட்டரை எடுத்தான் அவன்.

அன்பு சுஜாதா—ஆசை சுஜாதா தனக்கு தபால் எழுதுவாளென்று கனவு கண்டான் சுந்தர். அது பகற்கனவாயிற்று; சரி, அவளைச் சமாதானப்படுத்தி வரவழைத்துக் கொள்ள வேண்டுமென்று முனைந்தானே? அந்த முயற்சியையாவது நிறைவேற்றிக் கொண்டானு? அதுவும் கிடையாது!

ஒரு தினம்;

சினிமாக் கம்பெனிக் காரை எதிர்பார்த்துக் காத்திருந்தான் சுந்தர்.

புத்தம் புதிதான கன்னி ஒருத்தி வந்தாள். தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள். திரையுலகப் பிரவேசத்துக்கு சான்ஸ் கோரி, சிபாரிசு செய்யும்படி வேண்டினுள். முகவரி எழுதிக் கொடுத்துவிட்டு, கள்ளவிழிப் பார்வை கொண்டு புன்னகை தூவியபிறகு, அவன் பற்கள் தெரியச் சொன்ன ஆறுதல்மொழிகளை நம்பியவளாக, கைகூப்பி விடை பெற்றுள்.

இந்தக் கூத்தை ஹாலின் ஜன்னல் திரையை விலக்கி, சுஜாதா கண்காணிப்பாள் என்று அவன் எதிர்பார்த்திருக்கவில்லை போலும்! அஸ்தியில் ஜுரம் கண்டது.

சுஜா ஊடல் கொண்டாள்.

'சுஜா, நான் கடமையாற்றுகிற உலகம் ரொம்ப விசித்திரமானது. இம்மாதிரியான நிர்ப்பந்தங்களைத் தவிர்க்க முடிவதில்லை. ஆனுல் ஒன்றை மாத்திரம் நீ நம்பியாகவேணும். நான் உன் ஒருத்திக்கே சொந்தம்!— எப்படி நீ என் ஒருவனுக்கேயாக இருக்க முடியுமோ, அப்படி...!'

கூடல்தான் அடுத்த கட்டம்.

அதுவே தாம்பத்தியத்தின் விதியோ?...

புகை: புகைச்சல்

'நான்தான் ஆண்பிள்ளையாக நடந்து கொள்ளத் தவறி விட்டேன்! என் சுஜதாவாகிலும் பெண் பிள்ளையாக நடந்து கொண்டிருக்கலாகாதா?... சே!'—எதையோ நினைந்துசினம் கொண்டு, எதற்காகவோ வருந்தி, கழிவிரக்கம் பூண்டு, வினவுக்கும் விடைக்குமாகக் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து, திணறித் திண்டாடி, முடிவில் ஒருமுடிவுக்கும் வரமுடியாத வன் போன்று குழப்பத்தின் உச்சியில் நின்றான் சுந்தர். செழித்துத் தழைத்திருந்த மீசையை நீவி விட்டுக் கொண் டான். அந்த மீசையை எப்படி வர்ணித்து எவ்வளவு புகழ் வாள் சுஜாதா!

சிகரெட்டின் நெருப்புத்தான் சுட்டதோ?

'சுஜா!'

வந்தவன் ஜாகப்.

இருளை விலக்க வெளிச்சம்—உண்டு.

பாய்ந்து படர்ந்த ஒளியில் காலில் மிதிபட்ட அந்தப் படத்தைப் பதட்டத்துடனும் பயத்துடனும் பார்த்துவிட்டு மூடிய தோல் பெட்டி மீது வைத்தான்; சிலுவைக் குறி இட் டான் சிறுவன்.

சுந்தரின் மனிதமனம் விம்முகிறது.

யாரோ தேடிவந்திருப்பதாகத் தாக்கீது கொடுத்தான் ஜாகப்.

மண்டை இப்படியா கரும்பாறையாகக் கனக்கும்?

○ ○ ○

'அண்ணாச்சி!'

ஜானிவாக்கர் சிரிக்க, அச்சிரிப்புக்குத் தன் சிரிப்பு ஒன்றும் தோற்று விடாது என்கிற ஆணவத்தில் பலமாகச் சிரிக்க, பாட்டில் மூடியை வசம் தப்பி மூடிவிட்டு, 'சப்பு'க் கொட்டியபடி நிதானமாகத் திரும்பிப் பார்த்தான் சுந்தர்.

"நீங்க தேடிக்கிணு இருந்த புதுக்கிராக்கி — மலபார் ஐட்டம் ரெடி. போனவாரம் மாதிரி இல்லீங்க. இது ப்ராண்ட் நியூ. உங்க டேஸ்ட் புரிஞ்சு செட்டில் செஞ்சுட்டேன்! அப்புறம் நீங்களே சொல்லுவீங்க!"—ஹிட்லர் மீசை ஆசாமிக்குத் தங்கப்பல் இரண்டும் வெகு எடுப்புத்தான். டபிள் எம். ஏ. யா, கொக்கா?

'ஓ, அப்படியா?'

மீசையை ஓர் ஆண்மைத் தனத்தோடு முறுக்கி விட்டுக் கொண்டான் சுந்தர். புகையும் புகைச்சல் இருமலும் முயங்கின. சிந்தனை, நெற்றி நரம்புகளில் புடைத்து விம்மிற்று.

'உருப்படி கீழே டாக்ஸியிலேயே இருக்கு. என்ன. ஓ. கே தானே? ம், சீக்கிரம் சொல்லுங்க!'

'ஊ...ம்... பத்து மணிக்கு ஆகட்டுமே!...'

சலவைப் பத்து ரூபாய்த் தாள் ஒன்று கைமாறியது.

O O O

இருக்கின்ற ஒரு சுவர்க்கம் போதாதென்று, இன்னொரு சுவர்க்கமும் உருவாகப் போகிறதா?

நான்கு சுவர்கள்.

இரண்டு ஜீவன்கள்! — ஒன் ப்ளஸ் ஒன்!— ரைட்டோ!...

குழல் விளக்கின் ஒளித்திரள்.

ஆடியில் ஆடியது அழகு.

சும்மா சொல்லக் கூடாது! — மிஸ்டர் சுந்தர் சுந்தரம் தான்! 'ஈவினிங் இன் பாரிஸ்' லேசல்ல. 'நைட் இன் பாரடைஸ்' ஆக மணக்கிறது.

'கிறீச்!'

கதவுக்கு அடைக்குந்தாழ் உண்டு.

திரும்பினான் சுந்தர். 'ஆ!' என்று அதிர்வு ஏற்பட்டது. உள்ளுக்குள்ளே மின்னலைத் தரிசித்த தடுமாற்றத்தின் மயக்கம் இன்னமும் தெளியவில்லை; கண்கள் மேலும் கூசின. ஜாதி மல்லிப்பூக்களின் நெடி அவனுடைய மனக்கிளர்ச்சியின் எழுச்சியைச் சீண்ட, அந்தச் சீண்டுதலில் பிறந்த புதிதான மோகவெறி சிலிர்க்க, அந்த மோகினியை வெறித்துப் பார்த்தான். அழகென்றால் இப்படியொரு மங்களகரமான அழகா?

பூஜைக்கு வந்த மலரா?

பூஜிக்க வந்த மலரா?

பாரிஜாதமா? ரோஜாவா? மல்லிகையா?

ஆஹா!...மஹாலக்ஷ்மி!

உடம்பு தகிக்கிறது.

நினைவு புல்லரிக்கிறது.

அவன் சுந்தர் ஆனான்.

'இன்னும் சற்று நேரத்தில்...?...அச்சா...கைபடாத ரோஜா!...நுகராத முல்லைப்பூ!...சபாஷ்!'

"உட்காரேன்...!"

'ஊம்!—' அவள் மேனி ஏன் இப்படி நடுங்குகிறது?...

அவள் நின்று கொண்டுதான் இருந்தாள்.

புதிய உருப்படிதான்!—பொய் இல்லை.

அவனுக்குத் தெரியாததா? ஆல்ரைட்! 'உன் பெயர்...?

மதுமலர் நளினம்ஏந்தி, நாணம் ஏந்தியது!'மோஹினி!.

மோஹினி அவதாரம்தானே?

கேரளத்தை அவள் குரல் காட்டிக் கொடுக்கவில்லை இயற்கையின் அழகு காட்டிக் கொடுத்து விட்டது. முகமொ கும் வேர்வை ஆறாகப் பெருகுகிறது.

'கேரளாவில் எந்த ஊர்?'

'பால்காட்'

'அழகான இடம்!'

'உண்மைதான்!'

அவள் பார்வையில் என்ன பவித்ரம்! அவள் பேச்சில் என்ன அடக்கம்! அவள் உடையில் என்ன பண்பாடு!

ரசித்த நியூவேவ் படங்களுக்கும் விழுங்கிய ஹிப்பி மாத் திரைகளுக்கும் ஊடாகச் சுழன்ற அவன் மனத்தில், மொழிப் பிரச்னைக்கே இடம் கொடுக்காத வகையில் அனுபவித்த லோஹிப் ஸாரி சரசாங்கிகளும் லிப்ஸ்டிக் ஒய்யாரிகளும் சுழன்றனர். சே! என்ன களியாட்டம்! அசிங்கம்!

இந்த மோகினியாளின் கால்தூசுக்கு அவர்களெல்லாம் ஈடாவார்களா?

வட்டமேஜையில் பால் பிளாஸ்க், பழ வகைகள், சிக ரெட், மது தினுசுகள், முட்டை ஆம்லெட் இன்னும் என் னென்னவோ மாநாடு கூடியிருந்தன. பலே! மீசை மாமா!

'இந்தா...'

'ஊஹூம்! எக்ஸ்யூஸ்மி, ப்ளீஸ்!'

'ஒரு பெக்... அட்லீஸ்ட்!'

'வேண்டாம்!'

'ஒரு ட்ராப்!'

'ஊஹூம்!'

'பிடிக்காதோ?'

'ம்!'

'பழக்கம் இல்லையோ?'

'ஆமாம்!'

'ஆப்பிளில் ஒரு துண்டு!'

'அப்புறம் ஆகட்டும்!'

அவள் குரல் ஏன் சலனம் கொள்கிறது?

'நீங்கள்...நீ ரொம்பவும் அழகாக இருக்கிறாய்!'

'அப்படியா? மெத்த நன்றி!'

'நீ வெகு அழகாகத் தமிழ் பேசுகிறாய்!'

'மகிழ்ச்சி!'

'நீ புதுசுபோலிருக்கு!'

'வாஸ்தவம்தான். நான் புதியவள்தான். நீங்களும் அப்படித்தானென்று அந்த ப்ரதர் சொன்னார். அதை நம்பித்தான் துணிந்து வந்திருக்கிறேன்!'

'ஓஹோ!...ஆமாம்!'

'நீங்கே இங்கே தனியாகத்தான் இருக்கீங்க போலே!'

'ம்...உன்மாதிரி ஒருத்திக்காகவேதான் இத்தனை காலமும் தவம் இருந்தேனுக்கும்! ஆமாம், நிச்சயமாக!'

'நான் கொடுத்து வச்சவள்!'

'அதுதான் எடுத்துக் கொள்ளப் போகிறாயே என்னை!'

மெய்ம் மறந்து நின்றாள் அந்த மோகினி. கனி இதழ் களிலும் மலர் விழிகளிலும் எவ்வளவு விரைவாக ஒளி படர்கிறது!

சிகரெட்டை வெறியோடு மூலையில் வீசினான் சுந்தர். எழுந்தான். மதுப்புட்டி மேலும் குறைந்தது. திறந்த மேனியில் மின்காற்றுப் பட்டால் குஷியாகத்தான் இருக்கிறது!

விட்டில்பூச்சி அதோ, விளக்கைச் சுற்றுகிறது.

சுந்தர் நெருங்கினான் மோகினியை. மோகக் கிறக்கம் விம்ம, 'ரேட் எப்படி, மோகினி?' என்று அன்பாகக் குழைந்தான்.

'ரேட்டா? எதற்குங்க சார்?' என்று அதிர்ச்சியடைந்தாள்அவள்— மோகினி.

சுந்தர் மலைத்துப் போனான். வசனம் பேசும் நேரம் இது வல்லவே! நெருங்க நெருங்க, விலகி விலகி நின்ற மோகினியை விழுங்கி விடுபவனாக வெறி துள்ளப் பார்த்தபடி, அவளுடைய பூங்கரங்களைப் பற்ற முனைந்தபோது—

அவள் மிக மிக ஜாக்கிரதையாக ஒதுங்கி விட்டாள்.

அவன் சுவரில் மோதிக் கொண்டதுதான் மிச்சம்.

'ஐயா!'

'சொல் சீக்கிரம்!'

"உங்களை நம்பி, உங்கள் அன்பு நிழலிலே தஞ்சமடைந்திருக்கின்ற அனாதை நான். பின் ஏன் இத்தனை அவசரம்?... என் புனிதத்தை தீண்டுவதற்கு முன் நான் சொல்லப்போகிற விதியை நிதானமாகவும் நல்ல புத்தியோடும் நீங்கள் கேட்டுக் கொள்ள வேண்டும்!..."

'ஐயோ, இனியும் என்னைச் சோதிக்காதே. சொல் மோகினி, சொல்!'

'ஸார். என்னைத் தொடுவதென்றால், தாங்கள் என்னை நிரந்தர மனைவியாக அங்கீகரித்துப் பிரகடனம் செய்தாக வேண்டும். எனக்கு நாணயமான—மனிதாபிமானம் மிகுந்த ஒரு நல்ல கணவர் தேவை! ஊம்...! எனக்கு ஸற்குண ஸம் பன்னனாய் ஒரு பர்த்தாவு வேண்டும்!...இதுவே என் கனவு; லட்சியம்; விரதம்! இல்லையேல், நான் இப்போதே இங் கிருந்து வெளியேறி விடுவேன்!'

பெண்மையின் ஆண்மை முழங்க, உணர்ச்சிகள் பொங் கிப் பெருகப் பேசினாள் மோகினி. பேசும் விழிகள் பேசாமல் தளும்பின.

'ஓ!...'

வாயைப் பிளந்தான் சுந்தர்.

நல்லகாலம்!—அது அவனுடையதோ, இல்லை, ஈயினுடை யதோ?—இக்காட்சியை அவள் மாத்திரமே காண நேர்ந்தி ருந்தது.

'ஊம், பேசுங்கள் ஸார், பேசுங்கள்!'

அவன் அட்டகாசமாகச் சிரித்தான். மாயச் சிரிப்பின் மந்திர அலைகளில் நீந்தியவண்ணம், மோகவெறிதலைக்கேறிப் பாய்ந்தோடி, அவன் அவளை—அந்த மோகினியை வாரி அணைக்க முனைந்தபோது—

பளார்!—பளார்!...

வெட்கம்!—கல்லாகச் சமைந்து விட்டான் சுந்தர்.

"நீங்க மிருகம்;... என் விதிக்கு விடைசொல்லத் துப்பு இல்லையே உங்களுக்கு? ஒரு நல்ல பர்த்தாவாக இருக்கக்கூடிய யோக்யதை உங்களுக்கு இல்லை! நீங்க ஒரு மனுஷனா? சே!..."

மோகினியா பேசினாள்?

மோகினிதான் பேசினாளா?

பழுத்த கன்னங்களைத் தடவிக் கொடுத்து நின்றான் சுந்தர்.

நான்கு சுவர்களினின்றும் புனிதவிடுதலை பெறத்துடித்து, பாதங்களைப் பெயர்த்த அவள், காலடியில் மிதிபட்ட அந்த நிழற்படத்தைப் பார்த்தாள். மறுகணம், 'ஆ!' என்று ஓங்காரமாக வீரிட்டாள் அவள்.

அவன் தூண்டில் புழு ஆனான். 'மோகினி! என்னைப் பெரிய மனசு பண்ணி மன்னிச்சுடு. நான் பாவி!...ஒரு நல்ல மனைவிக்கு ஒரு நல்ல கணவனாக நான் இனிமேல் கட்டாயம் இருப்பேன்!...' சுடுநீர் ஆடிப்புனலாக ஓடியது.

மோகினி கண்களில் நீர்மல்க, உதடுகளில் நீர்த்துளிகள் ஊசலாட, ஏறிட்டு நோக்கினாள். 'ஐயா, இந்த சுஜாதான் உங்களோட மனைவியா?...' என்று கேட்டாள்.

சுந்தர் நிதானம் கொண்டு, 'ஆமாம்!' என்று விடை சொன்னான். 'என் சுஜாதாவை உனக்குப் பழக்கம் உண்டா?' என்று எதிர்க் கேள்வி விடுத்தான்.

மோகினியின் நெடுமூச்சு விம்மிப் புடைத்தது. 'திருச்சியிலே படித்த போது, உயிருக்குயிராகப் பழகினவங்க நாங்க இரண்டு பேரும்!...படுரோசக்காரி!...அதுசரி. சுஜாவைப் பிரிந்து நீங்க ஏன் இப்படி மனம் பேதலிச்சு நடந்துகிணு இருக்கிறீங்க?' என்று விசாரணை செய்தாள். நீதி விசாரணை!

அவன் என்ன சொல்வான், பாவம்!

'ஒரு சின்னப் பிணக்கு; அடிச்சுப் போட்டுப்பிட்டேன் தாய் வீட்டுக்குப் போய்விட்டாள் என் சுஜா!'

மோகினி வேதனை தாளாமல் செருமினாள்! பொருமினாள்! 'ஐயோ பாவம்!...பரிதாபத்திற்குரிய அபலை என்

சுஜா?...நீங்க தொட்டுத் தாலி பூட்டின உங்கள் இல்லாளை மனம் நெகிழ்ந்து அழைச்சுக்கிட்டு வரத்துக்கு உங்களுக்குப் புத்தி இல்லாமல் போயிடுச்சே?...நீங்களும் ஒரு மனிதரென்று இங்கே நடமாடிக் கொண்டிருக்கீங்களே?...உங்களுக்கு மான உணர்ச்சி இல்லையா? கடமை, கட்டுப்பாடு, கண்ணியம், ஒழுங்கு, சத்தியம், தருமம் என்று சொல்லப்பட்டும் பேசப் பட்டும் எழுதப்பட்டும் வருகிற அந்த விதிகள் எங்களுக்கு மட்டுமே தானு?...யார் ஸார், அப்படிச் சொல்வது?...மெய் யாகவே நீங்க மனிதர் அல்ல; அல்லவே அல்ல!...என் சுஜா தங்கம். அதனுல்தான் உங்க மானம் பிழைச்சிருக்குது!...'

புதிய அலையின் புதிய விதியாக ஆர்ப்பரித்தாள் மோகினி.

சுந்தர் கைகளை, நடுங்கும் கைகளைக் குவித்தான். 'மோகினி, நீ தான் என்னை மன்னிக்க வேண்டும் என் சுஜா வின் சார்பிலே!'

மோகினிதான் சிரிக்கின்ருளா?

சிறுவன் ஜாகப் சிலுவைக் குறியிட்டுப் பிரார்த்தனை செய்துகொண்டிருக்கிருன் வெளியே.

எங்கோ, இருளைக் கிழித்துக் கொண்டு பதினெருமுறை மணியொலி எதிரொலிக்கிறது.

தோல்பெட்டியும் கையுமாகப் புறப்பட்டுக் கொண்டிருக் கும் சுந்தர், கதவை இழுத்துப் பூட்டிக் கொண்டிருக்கிருன். 'உன் அண்ணியை அழைச்சிட்டு வரப் புறப்படுகிறேன்!' என்கிருன்.

ஜாகப் ஆனந்தமான அமைதியோடு புன்னகை காட்டு கிருன். பிறகு, தன் சட்டைப் பையிலிருந்த தந்தி ஒன்றை அவனிடம் சமர்ப்பிக்கின்ருன். 'பெரிய முதலாளி எப் போதோ வந்த இந்தத் தந்தியை வாங்கி வச்சிட்டு, மறந்து போய் ஊருக்குப் போயிருக்கிருர். இப்பத்தான் மானேஜர்

ஸார் குப்பைகளைப் பிரிக்கையிலே, இந்தத் தந்தி கிடைச்சிருக்கு; கொடுத்தனுப்பிச்சார், ஸாரோ!' என்று விவரம் குறிப்பிடுகிறான்.

எங்கெல்லாமோ சுற்றி அலைந்துவிட்டு, ஏழு மாதங்களுக்கு முன் 'சுவர்க்க'த்துக்கு வந்து, விதியின் கரையில் சேர்ந்திருக்கிறது அந்தத் தந்தி!...

கிழித்தான்.

'சுஜாதா மாரடைப்பினால் இறந்து விட்டாள்!'

சுந்தர் அப்படியே சிலையாக நின்றான். நெஞ்சில் சிலை வடிவம் கொண்டிருந்த சுஜாவை நினைவில் சிலை வடித்தவண்ணம் அப்படியே சிலையாக நின்றான்...கண்கள் பொடிக்கின்றன; நெஞ்சம் வெடிக்கிறது; சிரிப்புத் துடிக்கிறது: 'நோ...மை டியர் வீனஸ் சுஜா இஸ் நாட் அட் ஆல்-டெட்! என் சுஜா என் வரை என்றென்றும் நித்திய மல்லியாக என் உயிரில் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்; வாழ்ந்து கொண்டேயிருப்பாள்!...ஆமாம்!'—சிரிப்பு மண்முட்டி, விண்முட்டி ஒலிக்கிறது! எதிரொலிக்கிறது; எதிரொலித்துக் கொண்டேயிருக்கிறது!...

'அய்யொடா...ஐயோ...சேட்டா.'

விதியின் அலையாக-அலையின் விதியாக அழுகுரல் ஒன்று எங்கிருந்தோ மிதந்து வந்துகொண்டேயிருக்கிறது.

பாவம், சுஜாதாவுக்கு அழமட்டும்தான் தெரியும் போலும்!...

ஆனால், விதிக்கோ சிரிக்க மட்டும்தான் தெரியுமோ?...

# வசந்தம்

இதயத்துடிப்பு வளர்ந்தது; துடிக்கும் நெஞ்சோடு கல்யாணி கடிகாரத்தைப் பார்த்தாள். அது அப்போது தான் ஆறு முறை தன் இதய ஒலியைப் பரப்பிவிட்ட அமைதியில் 'டக்டக்' கென்று சுருதி சேர்த்துக் கொண்டிருந்தது.

அந்தி மயங்கி வந்தது.

கை நொடிப் பொழுதிற்கு முன் கல்யாணி ஆனந்தவாரியில் மிதந்து கொண்டிருந்தாள். அவள் மகள் நளினு காலேஜ் முடிந்து சென்னையிலிருந்து 'வகேஷன்' லீவுக்கு வந்திருந்தாள். அவள் தான் முன்னைவிட எப்படி நகாசு பெற்று விட்டிருக்கிறுள்! கல்லூரிப் படிப்பும் கல்லூரி நாகரிகமும் படிப்பித்த போதனையாக இருக்க வேண்டும். தன் மகள் ஆனுலும், தாய்க் கண் கூடப் படலாகாது என்பார்களே...! 'தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்' அவளைப் பொழுது விடியத் திருச்சியில் சேர்த்தது. தாய் மகளை அழைத்து வர 'ஆட்டோ ரிக்ஷா'வுக்கு உத்தர விட்டாள். பிறந்த மனை மிதித்த நளினுவை அப்பொழுது ஒன்றும் தூண்டித் துருவிக் கேட்கவில்லை பெற்றவள். பிரயாண அலுப்பு; படுத்தவள் எழுந்து

குளித்து முழுகிச் சாப்பிட்டு விட்டுப் புறப்பட்டாள்—தன் சினேகிதி ஒருத்தியைப் பார்த்து வர.

'மத்தியானம் போன பெண்; பொழுது அணைந்து விட்டதே, இன்னும் வீட்டுக்கு வர ஞாபகம் இருக்காதோ?"— என்ற குற்றச்சாட்டை மனத்தில் நெளிய விட்டு ஆசையுடன் மகளின் வரவுக்காக வாசலுக்கும் வெளிக்குமாக கல்யாணி நடந்து கொண்டிருந்தாள். ஆனந்தம் கொழிக்க நின்ற அப்பொழுதுதான் அந்த அதிர்ச்சி அவளை மோதிற்று. கைந் நொடிப் பொழுதுதான் என்றாலும் அதற்குத்தான் எவ்வளவு சக்தி! அவள் முன் உலகம் ஆலவட்டம் சுற்றியது.

கைப்பிடிப்பில் கிடந்தது அந்தப் புத்தகம். மறுபடியும் கண்கள் பிரிந்துகிடந்த முதல் ஏட்டில் இழைந்தன. நீர்த் திரையிட்டது. அவள் வாசித்தாள்: "அன்புள்ள கல்யாணிக்கு, அன்பளிப்பு—நாகராஜன்" என்று ஓடியது வாசகம். தன்னைப் பார்த்துச் சிரிப்பது போலத் தோன்றியது தாகூரின் அந்த நூல். அவள் புத்தக இதழ்களை நுனிவிரலால் கோதி விட்டாள். ஏதோ ஒன்று தரையில் விழுந்தது. எடுத்தாள்; பிரித்தாள். அது ஒரு கடிதம். வாசிக்கலானாள் கல்யாணி.

"அன்புள்ள நளினா,

நீ ஊருக்குப் போனதும் என்னை மறந்துவிடாமலிருக்க வேண்டுமல்லவா? அதற்காகத்தான் இத்துடன் என் போட்டோவையும் இணைத்துள்ளேன். மறந்துவிடாமல் எனக்கு லெட்டர் போடு. உன்னைக் காண விரைவில் திருச்சிக்கு வருகிறேன்.

அன்புள்ள,
சேகரன்".

நெஞ்சில் பரபரப்பு ஊறியது: கல்யாணிக்கு கடிதத்தில் குறித்திருந்த போட்டோ ஞாபகம் வந்தது. உதறினாள் புத்தகத்தை. அதில் குறிப்பிட்டபடி எந்தப் போட்டோவும்

இருக்கவில்லை. 'ஒருகால் புகைப்படம் நளினா வசமிருந்தால்...' என்று எண்ணினாள்; ஊகம் 'சரி' சொல்லிற்று.

கல்யாணி மறுபடியும் கண்களைத் திறந்தாள். 'அன்புள்ள கல்யாணிக்கு, அன்பளிப்பு நாகராஜன்' என்ற வரிகள் தாம் கண்ணிலும் கருத்திலுமாகச் சிலையோடி நின்றன. அவள் கண்கள் 'மளமள'வென்று கண்ணீரைச் சிந்தின. அவள் இதயம் பெருமூச்செறிந்தது; அதில் ஆற்றாமையுடன் ஆறாத் துயரம் முன் நின்று கதை சொல்லியது.

தூணுடன் தூணாகிவிட்டிருந்த அவள் தூணின் துணையைத் துண்டித்துவிட்டு ஓடினாள். தன் நினைவு, மகள் நளினாவின் வருகையை நெஞ்சில் உணர்த்திற்று அவளுக்கு.

"நளினா, இவ்வளவு நேரம் என்ன அம்மா செய்தாய்? எனக்கு நீ வரும் வழியைப் பார்த்துப் பார்த்துக் கண்ணெல்லாம் பூத்துப் போய் விட்டது. இப்பொழுதுதான் நல்ல உயிர் வந்தது. காலம் ஆண்டுமாறிப் போய்விட்டது. உனக்கு ஒன்று என்றால் உன் தந்தைகூட இல்லையே. நான் தானே எல்லாவற்றையும் கண்காணிக்க வேண்டியிருக்கிறது. வேளை தப்பி இனியும் எங்கும் இம்மாதிரி போகக்கூடாது. நளினா, பெற்றவளின் சொல்லுக்கு கட்டுப்பட வேண்டாமா...? போய்க் காப்பியைச் சாப்பிடு. வேலைக்காரி காத்திருக்கிறாள்..." என்று சொல்லிவிட்டு மகளை நிமிர்ந்து நோக்கினாள் கல்யாணி. அன்புடன் தன் மகளைக் கடிந்து கொண்டது சற்று எல்லை தாண்டி நின்றது போலப்பட்டது அவளுக்கு. ஆனால் மகளின் முகத்தில் தன் தவறுணர்ந்த தன்மை கோடு கோடாகப் பாவி நின்றதைத் தரிசித்தாள் தாய்.

"ஆகட்டும், அம்மா," என்று மொத்தத்தில் சொல்லிவிட்டு நகரப்போனாள் நளினா. தாய்வசமிருந்த அந்தப் புத்தகத்தை கண்ட அவளுக்குத் திரும்பவும் திகைப்பு வளர்ந்தது. அவள் கால்கள் பின்னிக்கொண்டன.

நளினாவின் குறிப்பை அறிந்தாள் கல்யாணி. "நளினா, இந்தா உன் புத்தகம்" என்று கூறிப் புத்தகத்தை நீட்டினாள். நளினா 'வெடுக்'கென்று புத்தகமும் கையுமாக மறைந்துவிட்டாள். கல்யாணிக்கு அந்தப் புத்தகம் தன் பார்வையை விட்டு விலகினதும், ஏனோ கண்ணீர் மண்டியது.

O O O

கல்யாணியின் கண்முன் அந்தப் புத்தகம் சுழன்றது. அதில் கண்ட 'அன்புள்ள கல்யாணிக்கு அன்பளிப்பு-நாகராஜன்' என்ற அந்த வரிகள் சுழன்றன. அவள் சுழன்றாள்

"அந்த நாளில் என் அத்தான் நாகராஜன் எனக்கு அன்பளிப்பு செய்த இந்தப் புத்தகத்தை நான்தான் அவருக்கே திருப்பி அனுப்பிவிட்டேனே! இன்றைக்கு மீண்டும் இந்த இருபது வருஷங் கழித்து என் பார்வையில் பட்ட இப் புத்தகம் நளினாவிடம் எப்படி வந்தது?" என்று பலவாறு அவள் தன்னுள் எண்ணிப் புழுங்கினாள். அவளுக்குக் கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டுவந்தது. காலம் இடைவெளிவிட்டுப் பரப்பியிருந்த கழிந்த நாட்களை நோக்கிச் சிறகடித்துப் பறந்தது அவளது மனப்புள்.

நாகராஜனுக்கு கல்யாணி அத்தை பெண்; நாகராஜன் கல்யாணிக்கு மாமன் மகன். உறவு முறையிலும் ஒட்டும் முறை. 'அவனுக்கு அவள்—அவளுக்கு அவன்' என்ற பரிசமும் குழந்தைகள் இருவருக்கும் காலில் நகம் முளைத்த நாள் முதலாகப் போடப்பட்டதென்னவோ மெய்யிலும் மெய்யான சேதிதான்! அவர்கள் இருவரும் குழந்தைகளாவதை நிறுத்தி, அறியும் பருவத்திற்குள் தங்களை ஐக்கியப்படுத்திக் கொள்ளும் நிலையிலும்கூட இருவர் மனமும் ஒன்றோடொன்று நெஞ்சோடு நெஞ்சாகப் பின்னிப் பிணைந்தன. அத்துடன் நின்றால் மட்டும்போதுமா? இரண்டு தரப்புப் பெற்றோர்களும் அந்நாளில் செய்துகொண்ட ஒப்பந்தம் கல்யாணியின் தந்தைக்குப் பிறகும் நிறைவேற்றப்பட்டது. "குழந்தைகள்

ஜாதகங்களைக்கூட அப்படிப் பிரமாதப்படுத்திப் பார்க்க வேண்டாம். மனப் பொருத்தம்தான் பிரதானம்!......"
என்ற நாகராஜனின் தந்தையின் வாக்குக்குப் பதில் வார்த்தை சொல்லவில்லை கல்யாணியின் தாய். அண்ணன் சொல்வது சரி என்பது அவள் அபிப்பிராயம். வாஸ்தவம் தான் என்ற ரீதியில், நாகராஜனும் கல்யாணியும் இன்னும் பலமாகத் தங்கள் இருவரின் மனப் பொருத்தத்தை அடித் தளமிட எண்ணினார்கள். பிரிவு அவர்களிடையே குறைந்து வந்தது. குறு நகையும் குதூகல மொழியும், கண்ணடிப்பும் கள்ள விழிப் பார்வையும் அவர்களிடையே 'எக்சேஞ்ச்' ஆயின. பின், கேட்பானேன்! நாகராஜன் கலைப் பைத்தியம் கொண்டவன். கதை, நாவல் என்றால் அவனுக்குப் 'பாதாம் ஷீர்' பருகுவதுபோல. கல்லூரி செல்லும்போது கண்ணீருடன் கல்யாணியைப் பிரியும் நாகராஜன், கல்லூரி விட்டுத் திரும்புகாலில் ஆனந்தம் முகமன் கூற, பாவைக்கு வகை வகையான உடைகள் சலசலக்க, இலக்கியச் சந்தையில் வெளிவந்த புதுப் புத்தகங்கள் புன்னகை செய்ய அமர்க்களமாக வந்து சேருவான். அவளுக்கும் அப்போதுதான் உடலில் உயிர் தரிக்கும்; அவனுக்கும் அப்படித்தானே!

காலத்தேருக்கு 'ஹோல்டான்' போட யாரால் முடியும்? நாகராஜனையும் கல்யாணியையும் தம்பதியாக்கத் திட்டமிட்டார்கள் உடையவர்களும் உரியவர்களும். அப்பொழுது நாகராஜன் பி.ஏ. எழுதிவிட்டு வந்திருந்தான். அதே சமயம் தான் திருமணச் செய்தியும் துவங்கியது. அதே கணம் தான் அந்த எதிர்பாராத சம்பவமும் நடந்தது. 'கல்யாணியைத் தான் மணக்க முடியாதென்று' இருந்திருந்தாற் போல ஒரு வெடிக் குண்டைத் தூக்கிப் போட்டான் நாகராஜன்!—அது பாவம், கல்யாணியின் தலையில் 'டபீ' ரென்று விழுந்து வெடித்தது. 'தனக்குத் தன் அத்தான்தான் இனி சகலமும்' என்றிருந்த அவள் ஆசைமிக்க இன்பக்கனவு கடைசியில் இப்படித் தேய்ந்து உருக்குலைந்து போகுமென்று அவள் துளியும் எதிர்பார்த்தவளல்லவே...!

நாகராஜனை அவன் பெற்றோர்கள் கல்யாணியை மணக்குமாறு எவ்வளவோ வேண்டிக் கொண்டனர். அவன் மறுத்து விட்டான்! கடைசியில் ஒட்டிய—ஒட்ட வேண்டிய இரு குடும்பங்களும் இரட்டைத் துருவங்களாகிவிட்டன. நாகராஜனும் கல்யாணியும் பிரிந்தார்கள்—பிரிக்கப்பட்டார்கள்—பிரிய நேர்ந்தது! தனக்கு அன்பளிப்புச் செய்த புத்தகம், புடவை வகையறுக்களைத் திரும்ப அனுப்பிவிட்டாள் கல்யாணி—நாகராஜனுக்கு. நாகராஜனுக்கு அடுத்த மாதமே பெரிய இடத்தில் கல்யாணமாகி, பம்பாய் சென்று விட்டதாக அறிந்தாள், மூன்றுமவர் மூலமாக. கல்யாணியும் வாழ்க்கையில் அடியெடுத்து வைத்தாள். அதிருஷ்டம் அவளை ஒருவகையில் கடைக்கண் பார்த்தது. பணக்கார வக்கீல் ஒருவருக்கு 'இரண்டாம் தாரமாக' வாழ்க்கைப் பட்டாள் திருச்சியில். இல்லற வாழ்வு அவள் வசம் இருபது ஆண்டு அனுபவத்தை அளித்தது. அதற்குள் அவள் 'விதவைக் கோலம்' பூண்டாள். தன் ஒரே மகள் நளினிதான் அவளுக்கு எல்லாமாக நிழலாடினாள். ஆனால் நாகராஜனைப் பற்றி மட்டும் அப்புறம் அவள் காதுகளில் எந்தத் தாக்கலும் விழவில்லை. ஏனோ அதைப்பற்றி அக்கறைப்படக்கூட மனம் இடம் தர ஒப்பவில்லை. இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில்தான் அந்தப் புத்தகம்—அவளுக்கு தன் அத்தானால் என்றோ அன்பளிப்புச் செய்யப்பட்டுப் பிறகு விதி வசத்தால் கை மாறிய அதே புத்தகம், கல்யாணியின் கண்களில் அன்று பட்டுத் தீர்த்தது. அப்போதைய அவள் உள்ளத்தை யார் தான் அறிய முடியும்...? வாழ்வே அறியக் கூடாததொன்று தானே...!

○ ○ ○

ரேடியோவில் அதுதான் கடைசி நிகழ்ச்சி. இசைத் தட்டுச் சங்கீதம் நடந்து கொண்டிருந்தது.

படுக்கையில் சோர்ந்து சாய்ந்திருந்தாள் கல்யாணி. அவள் மனம் அலைகடலாகக் தத்தளித்துக் கொண்டிருந்தது.

மகனை எண்ணினாள். நளினா ஆழ்ந்த நித்திரை வசப்பட்டிருந்தாள். அவள் இதழ்கள் முறுவல் கீற்றை உருவாக்கிக் கொண்டிருந்தன. ஆசைக்கனவு ஒன்றை அவள் கண்டிருக்க வேண்டும்.

கல்யாணிக்கு நேற்றுப் பார்த்த தாகூரின் அந்தப் புத்தகம் நினைவு வந்தது. அவள் மெல்ல எழுந்தாள். நளினாவின் அறை அது. மேஜைமீது ஒட்டப்படாமல், ஆனால் தபாலில் சேர்ப்பதற்குரிய ஆயத்தங்களுடன் வைக்கப்பட்டிருந்தது ஒரு கவர். ஓசைப்படாமல் பிரித்தாள்.

“அன்புள்ள சேகரன் அவர்களுக்கு,

தங்கள் குறிப்பு—நினைவுக் கடிதம் பார்த்தேன். நான் உங்களை மறப்பதா? நீல வானை நிறைமதி எங்ஙனம் மறக்கும்...? என் தந்திரம் பலித்தது. என் அன்னைக்கு அந் நாளிலே உங்கள் தந்தை அன்பளிப்புச் செய்த அந்தப் புத்தகத்தை என் அன்னையின் பார்வைக்கு இலாக்காக்கிவிட்டேன். சலனம் பிறந்தது. ‘நம் பெற்றோர்’களிடையே அன்று நிலவிப்பின் அறுந்துவிட்ட அந்தப் பாசமும் பிணைப்பும் மீண்டும் நம் இணைப்பில் புத்துயிர் பெற்று நம் கனவும் பலிதமடைந்துவிட வேண்டும். நானே இதோ அம்மாவிடம் நம் காதலை விளக்கி நம் கல்யாணம் பற்றிய ஓர் முடிவைக் காணப் போகிறேன். அம்மா உடன்பட்டுவிடுவார்கள். நான்தானே அம்மாவுக்கு எல்லாம்! உங்கள் வசந்த வருகைக்கு இந்த வானம்பாடி ஆவலே உருவாகக் காத்திருக்கிறது...!

தங்கள்,
நளினா.”

கல்யாணி நட்டுவைத்த கம்பமாக நின்றாள். மலையாகக் கனத்தது அவள் தலை. அழுந்தப் பிடித்தவாறு திரும்பினாள். என்ன ஆச்சரியம்! அங்கே கிடந்தது ஒரு போட்டோ. அதில்

சேகரன் என்ற பெயர் காணப்பட்டது. அந்தப் புகைப்பட உருவத்தைக் கண் கொட்டாமல் பார்த்தாள். தன் அத்தான் நாகராஜனின் அசல் ஜாடையை அவள் இந்தப் படத்தில் பார்த்தாள். 'தன் அத்தானின் மகன்தான் சேகரன்' என்று முடிவு செய்தாள் அவள். உண்மையும் அதுதானே...?

புதையுண்ட கடந்த காலக் கனவுகளை எண்ணினாள் கல்யாணி; திடுதிடுப்பென்று சொல்லாமல் கொள்ளாமல் அறுந்துவிட்ட தனக்கும் தன் அத்தான் நாகராஜனுக்குமுள்ள பாசத்தை எண்ணினாள். மின்னாமல் முழங்கிவிட்ட இடி தன் வாழ்வை நீறுபூத்த நெருப்பாக்கிவிட்டதை அவள் மறப்பது எப்படி? வெண்ணெய் திரண்டு வருகையில் தாழி உடைந்த கதையாகத் தன்னைக் கைவிட்ட தன் அத்தானின் வஞ்சனை அவளை நெருப்பாகச் சுட்டுவிட, அந்நிகழ்ச்சி அவள் நெஞ்சத்தில் அணையாத் தீயாகப் புகைந்து வருவதை அவள் எப்படிக் கட்டுப்படுத்துவாள்?

துவளும் கொடி வெய்யிலில் வாடி வதங்குவதுபோல, நளினா ஆனாள்.

"அம்மா, நானே உன்னிடம் சொல்ல வேண்டுமென்றிருந்தேன். என்னை மாப்பிள்ளை யாரும் வந்து பார்த்து என் கல்யாணத்தை 'செட்டில்' பண்ண வேண்டிய ஜோலியே இல்லை. நானே எனக்குரியவரை வரித்து விட்டேன். நமக்கும் நெருங்கிய உறவினர். பெயர் சேகரன். அவர் கூட இன்று, நாளை வருகிறார். அவர் யார் தெரியுமா? உன் அத்தான் நாகராஜனுடைய ஏகபுதல்வன். இழந்து விட்ட நம் குடும்பங்கள் இணைந்து வாழ வேண்டுமென்பதே சேகரனின் தந்தையின் ஆசையாம். இதைப் பல முறை சொல்லியிருக்கிறாராம். அம்மா, எங்கள் ஒன்றான உள்ளங்களைப் பிரித்து விடாதே...." என்று நளினா சொல்லும் போதே குறுக்கிட்டாள் கல்யாணி.

“போதும் நிறுத்து, நளினு, பழைய ராமாயணம் இனி எதற்கு? இழந்த உறவு இனி என்றுமே புத்துயிர் காண முடியாது. உன் தந்திரம், உன் கடிதம், சேகரனின் கடிதம், அவர் புகைப் படம் எல்லாவற்றையும் நான் அறிவேன். நளினு, நான் என் அத்தான் நாகராஜனை மறந்து எத்தனையோ ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. என்னை நம்பவைத்துக் கைவிட்ட துரோகியின் மகனுக்கா நீ வாழ்க்கைப்பட மனம் ஒப்புவேன்? ஒருநாளும் இல்லை. நீ சேகரனை மறந்து விடு!...” என்று கூவினுள் கல்யாணி, ஆத்திரம் குரலில் குதிபோட.

நளினு ஓடிப்போய்ப் படுக்கையில் குப்புற விழுந்து விம்மி விம்மி அழுதாள். சேகரனுக்கு ‘போஸ்ட்’ செய்ய விருந்த கவரைச் சுக்கல் நூருகக் கிழித்தாள். அவள் கைகள் நடுங்கின. கண்ணீர் மாலை தொடுத்துத் தரையில் விழுந்தது.

நாட்கள் சில வழிக்கு வழி ஈடு காட்டியவாறு ஓடின.

நளினு சதா சர்வ காலமும் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகவே இருந்தாள். அவள் உண்ணவில்லை; உறங்கவில்லை. கல்யாணி ‘நயம் பயமாக’ எவ்வளவு சொல்லியும் நளினு கேட்கவில்லை. சிதைந்த காதல் அவளைச் சிதைத்து வந்தது. கல்யாணிக்குப் பயமாகிவிட்டது. அன்று மாலை மகளின் அறைக்குச் சென்ருள். அங்கே நளினு இல்லை. பதிலாக, தாய்க்கு ஒரு கடிதம் இருந்தது.

“அம்மா,

சேகரன் இல்லாத வாழ்வு எனக்கு இப்பிறப்பில் வேண்டவே வேண்டாம். சேகரனைத் தேடிப் புறப்படுகிறேன். மன்னித்துக்கொள்.

நளினு.”

கல்யாணிக்குத் தலை சக்கரம் சுற்றியது. அன்றைக்குத் தன்னிடம் வாதாடிய மகளின் இதய ஒலியை நினைவூட்டிப் பார்த்தாள். இந்தக் கடிதமும் அவள் முன் பேய்ச் சிரிப்புச் சிரித்தது. அதே கணம் மின்னலொன்று அவள் மனவானில் கோடிழுத்துப் பாய்ந்தது. அடி நாளில் அவளைத் தன் அத்தான் நாகராஜன் கைவிட்டுச் சென்ற போதில், அவள் பட்ட வேதனையையும் கொட்டிய கண்ணீரையும் நினைத்துப் பார்த்தாள் கல்யாணி. அதே நிலையில் தானே இப்பொழுது தன் ஒரே மகள் நளினாவும் நிலைகுலைந்து புறப்பட்டிருப்பாள் என்ற உணர்வும் 'கிட்டி' கட்டிப் பாய்ந்தது அவள் நெஞ்சில்.

"என்னை என் அத்தான் கடைசி நேரத்தில் மணக்க முடியாதென்று கைவிட்டதற்கு, அவர் மகனிடம் நான் பழி வாங்குவதா? ஒட்டிய சேகரன்-நளினா ஆகிய இரட்டை உள்ளங்களைப் பிரிப்பதா? வேண்டவே வேண்டாம்! இதோ, இப்போதே நளினாவைத் தேடி அவள் இஷ்டப்படியே சேகரனையே அவள் மணக்கச் செய்கிறேன்...." என்று எண்ணியவளாக, மகளை எங்கும் தேடினாள். கடைசியில் ரயிலில் சென்னைக்குப் புறப்படவிருந்த நளினாவைக் கையும் மெய்யுமாகப் பிடித்துவிட்டாள் கல்யாணி. சேகரனை மணப்பதற்குத் தன் பூரண சம்மதத்தையும் தெரிவித்து வீட்டுக்குக் கூட்டி வந்தாள்.

அங்கு இரண்டு கடிதங்கள் காத்திருந்தன. ஒன்று நளினாவுக்கு; மற்றது கல்யாணிக்கு.

**முதல் கடிதம்:**

**"நளினா,**

நேற்று கார் விபத்தில் அகப்பட்ட நான் ஒற்றைக் காலை இழந்து நொண்டியாகிவிட்டேன். என்னை மறந்து விடு.

**சேகரன்."**

**இரண்டாவது கடிதம்:**

**“அன்புள்ள கல்யாணி,**

பல பல வருஷங்கள் மறைந்து, என்னுடைய இக்கடிதத்தைக் காணும் நீ அதிசயப்படுவாய்; ஆத்திரப்படுவாய். இல்லையென்றால், உன் மகள் நளினாவும் என் மகன் சேகரனும் தம்பதிகளாவதைத் தடுத்திருப்பாயா நீ? நான் உன்னை வஞ்சிக்கவில்லை. விதி நம் இருவரையும் வஞ்சித்துவிட்டது. என் ஜாதகத்தைப் பார்த்தவர் எனக்கு ‘தாரதோஷம்’ இருப்பதாகப் பயமுறுத்தினர். உன்னைக் கரம் பற்றி அதன் விளைவால் உன்னை நான் இழக்க மனம் துணியவில்லை. அன்று போல என்றென்றுமே நீ என் கனவுப் பதுமையாக நிலவவே நான் ஆசைப்பட்டேன். உலகின் எங்கோ ஓர் மூலையில் நீ உயிருடன் இருந்தால், என்றாகிலும் ஓர் நாள் காணலாமல்லவா? என் உடலின் உயிர்ப்பே நீயல்லவா? உண்மைக் காரணத்தை வெளியிட்டால், அதன் பலன் எந்த வகையில் நம் இருவரையும் பாதிக்குமோ என்றஞ்சியே நான் உன்னை நிராகரித்துவிட்டேன் பொதுவாக, எனக்கு வாய்த்தவளும் சேகரனை ஈன்றுவிட்ட மறு நிமிஷம் விதிவழி ஏகிவிட்டாள். கடைசியில் என் ‘தாரதோஷம்’ மெய்யாயிற்று. உன்னைத் துறந்த நினைவு, என் மனைவியின் பிரிவு எல்லாம் சேர்ந்து என்னைக் கிறுக்கனாக்கியது. என் செல்வக் குழந்தையையும் துறந்து கால்போன திக்கில் எங்கும் சுற்றினேன். நேற்றுத்தான் திரும்பினேன்! சேகரன்—நளினா இருவரின் ஒன்றுபட்ட மனத்தைக் கேள்விப்பட்டு, உன் முகம் காண, உன்னிடம் கதை முழுவதையும் சொல்ல நான் வந்த சமயம் தான் நீ உன் மகளைக் கோபித்துக் கொண்டாய். கல்யாணி, குழந்தைகளைப் பிரிக்காதே. நாம் பிரிந்தது போதாதா? நம் பழைய பாசமும் பிணைப்பும் அவர்கள் மூலமாவது புத்துணர்வு பெறட்டும். நல்ல முடிவு என் காதில் விழச் செய். என்னை மீளவும் பைத்தியமாக்கிவிடாதே....! நளினா—சேகரன் வாழ்வில் வசந்தம் நிலவச் செய்!

**நாகராஜன்.”**

தாயும் மகளும் 'ஹோ'வென்று ஓலமிட்டு அலறினார்கள்.

டாக்சி காத்து நின்றது. சேகரனைக் காணப் பட்டணத்துக்குப் புறப்படவிருந்தார்கள் கல்யாணியும் நளினாவும்—தாயும் மகளும்!

அதே சமயம் வாசலை அடைத்துக் கொண்டு வழி மறித்தாற்போல அங்கு வந்து நின்றது மற்றொரு கார். அதிலிருந்து இறங்கியவர்கள் கல்யாணியின் அத்தான் நாகராஜனும், நளினாவின் காதலுக்குரிய சேகரனும்!—தந்தையும் மகனும்!

"அத்தான்!" என்று அழைத்தாள் கல்யாணி.

"சேகர்!" என்று கூப்பிட்டாள் நளினா.

"கல்யாணி, அன்று நீ உன் மகளுடன், அவள் என் மகன் சேகரை மணப்பதை மறுத்து உரையாடிக் கொண்டிருந்ததை நான் கேட்டேன். அதே சமயம் என் சேகரும் உன் ஆத்திர மொழிகளைக் கேட்டானாம். அவள் தன்னை மறக்க வேண்டுமே என்பதற்காகத்தான் தனக்கு விபத்தில் கால் நொண்டியாகிவிட்டதாகப் பொய் எழுதிவிட்டிருக்கிறான். நான் உனக்குக் கடிதம் எழுதிப் போட்ட பிறகு, உன் மகளிடம் அவள் மனம் போல என் மகனை மணப்பதற்குச் சம்மதம் தெரிவித்ததையும் கேட்டேன். உடனே பட்டணத்துக்குப் புறப்பட்டுச் சேகரனை இட்டுவந்தேன். சற்று பின் தங்கியிருந்தால் கூட, நான் என் மகனைக் கண்டிருக்க முடியாது. உன் நல்ல முடிவைக் கேட்டதும் தான் அவனுக்குக் களை தட்டியது முகத்தில். விதி நம்மைப் பிரித்தது. ஆனால் நம் குழந்தைகள் விஷயத்தில் அனுசரணை புரிந்துள்ளது நம் பாக்கியமே! சேகரன்—நளினா ஜாதகங்கள் பெட்டியும் பேழையுமாக மணியாகப் பொருந்தியுள்ளன!..."

# பாசத்தின் சந்நிதி

தீ அடி வயிற்றிலே பற்றி எரிந்து கொண்டிருக்கிறது அது பாசத் தீ—பாசத்தின் தீ!

"இப்ப நாம என்ன பண்ணுறது, கமலி?"—சுந்தர் துடித்தான். தவித்தான்; உயிர் நடுங்கத் தவித்தான்.

கமலியின் ஆத்திரமும் அழுகையும் நின்று விடுமா, என்ன? செருமினாள் அவள்: "அத்தான். திரும்பவும் திருப்பிச் சொல்லிட்டேன். நான் தாய்; நம்ப ராஜாவைப் பத்து மாதம் தவம் இருந்து சுமந்து பெற்ற அம்மா. எங்கே எங்கே ஓடித் தேடுவீங்களோ? என்ன மாயம் பண்ணுவீங் களோ? சாயரட்சைக்குள்ளாற எப்படியும் என் ராஜாவை—நம்ப ராஜாவை உயிரோடே எங்கிட்டே கொண்டாந்து ஒப்படைச்சாகணும்: ஆமாங்க, அத்தான்!"

அவள் தழுதழுத்த குரலில் பேசிய பேச்சில் தாய் உள்ளத்தின் பாசம் துடித்தது. பொல பொல வென்று கண்ணீர் சுரந்து வழிந்தது.

தாய் உள்ளத்தின் அந்தத் துடிப்பு சுந்தரின் நெஞ்சில் சாட்டையடியாக விசிறிப் பதிந்தது, அப் பதிவின் முத்திரை அவனுடைய கண்களில் பதியாமல் இருக்க முடியுமா?

அவனும் விம்மினான்; வெடித்தான். 'கமலி, நான் பாவி.... மகா பாவி!...ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் கழுவி, சுழுவாய் தேட முடியாத எத்தனை பெரிய பாவத்தைச் செய்ய இருந்திட்டேன் நான்? துளி புண்ணியம் செஞ்சிருந்திருக்கேன். அதனாலேதான், மன்னிப்புக்கும் அப்பாற்பட்ட அந்த அநியாயப் பாவத்திலிருந்து தெய்வம் என்னைத் தடுத்திருக்குது...பெரிய கண்டத்திலேயிருந்து என் ராஜா—நம்ப ராஜா தப்பிச்சிட்டான்னு எவ்வளவோ நிம்மதிப்பட்டேன். அந்த நிம்மதியை கேவலம் ஒரு மணி நேரங்கூட நீடிக்க விடவில்லையே ராஜா?...''

அவனுக்குத் தொண்டை அடைத்தது. நெஞ்சு வெடித்து விடும் போலிருந்தது. அடம் பண்ணி, வீம்பு பிடித்து, 'ஓ' வென்று அழுவானே ராஜா, அப்படி இப்பொழுது சுந்தர் வாய் விட்டு அழுதான். ''ராஜா...ராஜா!'' என்று சித்த பேதம் அடைந்தவன் மாதிரி சூன்யத்தை வெட்டி விழித்துப் புலம்பலானான். பிறகு, காலடியில் நழுவிக் கிடந்த கடிதத்தை மீண்டும் புரட்டினான். அவனது தந்தை மனத்திலே ட்ரில் நிஜாரும் டெரீன் ஸ்லாக்கும் புன்சிரிப்பு பொலிய, ராஜா அழகு காட்டத் தொடங்கினான்.

ஐயோ!—ராஜாதான் சிரிக்கிறானா?

அல்லது...?

அந்தக் கடிதம்.

''அப்பா!

ஐந்தாவது வகுப்பு பெரிய பரீட்சையில் நான் பெயில் ஆயிட்டேன். ஒத்துக் கொள்கிறேன். அதனால் குடியா முழுகிப் போய் விட்டது? பின்பு ஏன் என்னைக் கேணியில் தூக்கிப் போடப் பார்த்தீங்க? உங்கள் கோபத்தில் நான் தப்பித் தவறி கிணற்றில் விழுந்திருந்தால், உங்களை சட்டம் தண்டித்திருக்காதா? யோசித்தீர்களா இந்த நீதியை? ஓரே

பிள்ளையான என்னை ஆத்திரத்தில் கொல்லவும் துணிந்த உங்கள் சோற்றைத் தின்பதற்கு நான் ஒன்றும் ரோசம் கெட்டவனில்லை. ஆகவே, நான் எங்காகிலும் தொலைந்து போகிறேன். என்னைத் தேடவே வேணும். தேடினாலும் நான் உயிரோடு கிடைக்கவும் மாட்டேன். உங்களுக்கென்ன? இன்னொரு மகன் பிறப்பான். ஆனால், பாவம் அம்மாவுக்குத் தான் மனசு தாலாது! என்னைப் பெற்ற புண்ணியவதி யான என்னுடைய அம்மாவுக்கு என் கடைசீ வணக்கம் சொல்லவும்.

இப்படிக்கு,
சு. ராஜா."

கடிதம் சுந்தரின் பிடியிலிருந்து நழுவியது. அவன் மைந்தன்—ஒரே செல்லமகன் ராஜா நழுவி விட்டானே, அக்கடிதத்தைப் போலே!

உச்சி வெய்யிலின் வேர்வை மட்டும் அவனை இறுக்க வில்லை; நெஞ்சை ஒடித்து உலுக்கியது துயரம். பாசம் உருகிக் கரைந்து கண்ணீராக வழிந்தது.

அந்தக் கொடிய சம்பவம் ஏன் நிகழ்ந்தது?

விதியின் விளைவாலா?

அப்படியென்றால், அந்தப் பயங்கர விபத்திலிருந்தும் ஆபத்திலிருந்தும் தன்னையும் தன் அருமை மகன் ராஜாவை யும் காப்பாற்றின அதே விதிதான் இப்பொழுது மறுபடியும் கண்ணுமூச்சி ஆடி, தன்னிடமிருந்து தன் ராஜாவைப் பிரித்து விட்டதா? ஏன்?

சமயபுரம் ரோடில் ராஜாவின் பெயரால் நடத்திய காப்பித்தூள் கம்பெனியிலிருந்து சந்தர் வெள்ளாளத் தெருவி லிருந்த தன் இல்லத்திற்கு வந்த நேரத்தில், கமலி வேதனை யோடும் ராஜா பயத்தோடும் காணப்பட்டனர்.

"கமலி அம்மாவும் பிள்ளையும் என்னவோ போல இருக்கிங்களே? என்ன காரணம்? ராஜாவோட ரிஸல்ட் என்ன ஆச்சு?"

"அவன் பாஸாகல்லேங்க, அத்தான்!"

"அடபாவி! கடைசிலே நீ பர்ட்சையிலே தோற்றுப் போயிட்டியாடா? கிளிக்குப் படிக்கிற மாதிரி 'படி-படி'ன்னு கெஞ்சிக் கூத்தாடியும், நீ கேட்காமல் புதுப் பணக்காரப் பிள்ளைகளோட சேர்ந்துக் கிட்டு ஆட்டம் போட்டியேடா? ஐந்திலே வளையாத தறுதலே ஆகிட்டியேடா!" என்று கோபாவேசம் துள்ளக் கத்தியபடி, பற்களைக் கடித்தான் சுந்தர். "வாழ்க்கையிலே படிப்புக்கு உள்ள அருமையை உணரத் தவறிட்டியேடா பாவி!" என்று வெடித்தான்.

அப்பாவின் நரசிம்மாவதாரத்தைக் கண்டதும், பிஞ்சு நெஞ்சில் குலை நடுக்கம் எடுத்தது. தந்தையின் சிடுமூஞ்சிக் கோபத்துக்கு இரையாகாமல் தப்பிப் பிழைக்கும் கவலையோடு பூனைபோல மெல்ல மெல்ல நழுவ முயன்று கொண்டிருந்தான் பொடியன்.

சுந்தரின் கழுகுக் கண்கள் ராஜாவை அவ்வுளவு சுளுவில் தப்பியோட விட்டுவிடுமா?— "டேய், நில்லுடா!" என்று அதட்டல் போட்டான். தப்பி யோடப் பிரயத்தனம் செய்த மகனை ஓடித் துரத்திப் பிடித்து, குண்டுக் கட்டாகத் தூக்கி வாசற்புறத்தில் இருந்த கிணற்றில் போட்டுவிட முயன்றான்.

நல்ல காலம். அப்போது கமலி பதறித் துடித்து ஓடிப் பாய்ந்து வந்து கணவனைத் தடுத்தாள்.

சுந்தர் தொடர்ந்த கோபாவேசத்துக்குத் தொடர் சேர்க்கத் தன்னுடைய முயற்சியைத் தொட்டுக் கொண்டே, கிணற்றின் மேடை விளிம்பிற்குத் தன் மகனை அலக்காகத் தூக்கிவிட்டான்.

கமலி, "நான் பெற்ற பிள்ளை ராஜா! அவனை நீங்க கேணியிலே வீசுறதாய் இருந்தால், இந்த மண்டுப் பிள்ளை

யைப் பெற்ற என்னை—இந்தப்பாவியை முதலிலே கேணியிலே தள்ளிடுங்க, அத்தான்!" என்று தூண்டில் கெண்டையாகத் துடித்துக் கதறிக் கொண்டே, தன் கணவனோடு மல்லுக்கு நின்று, தந்திரமாக அவனுக்குக் 'கிசு கிசு' ஊட்டி, அவன் பிடியை விட்டு ராஜாவை விடுதலை செய்து விட்டாள்.

சுந்தர் மூச்சு இரைக்க நின்றான்.

"ஐயையோ! பன்னிரண்டு வயசுப் பிள்ளைக்குத் தகப்பனாகி விட்ட பிற்பாடு கூட, இன்னமும் நீங்க இப்படிக் கோபத்தைக் கைக் கொண்டிருக்கலாமுங்களா, அத்தான்! உங்களை வீண் பழி பாவத்திலேருந்து முருகன்தானுக்கும் காப்பாற்றியிருக்கான்! இப்போ துளிநாழி நீங்க செய்ய விருந்த அநியாயப்பாவத்தைப் பற்றி நினைச்சுப் பாருங்க, அத்தான்!"

கமலி விம்மி வெடித்தாள்.

ராஜா வீரிட்டான்.

"'ஐயோ முருகா! ஐயையோ ராஜா!" என்று கூக்குரல் பரப்பியவனாக, ராஜாவை அப்படியே வாரியணைத்துச் செருமினான் சுந்தர். பிறகு கடைக்குப்போனான். மத்தியான்னம் சாப்பாட்டுக்குத் திரும்பினான். அப்போதுதான் ராஜாவைக் காணோம் என்ற தகவலும் ராஜாவின் கடிதமும் கிடைத்தன. இப்போது அவன் தன் கமலியின் பாசத்தின் ஆணையை அவன் உடனடியாக நிறைவேற்றியாக வேண்டும்! கலைந்து கிடந்த கிராப்புத் தலையோடும் கலையாமல் கிடந்த பாசத்தின் தவிப்போடும் புறப்பட்டான்.

கன்னிவனத்தாய் அம்மன் கோயில் மணி ஒலித்தது.

"கமலி, நம்ம ராஜா கிடைச்சிடுவான்!"

"எப்படியோ என் பெற்ற வயிற்றிலே பால் வார்த்திட்டா, சரி தானுங்க அத்தான்...! ஒரு வாய் சாப்பிட்டுட்டுப் போங்க, அத்தான்!" என்றாள் கமலி.

சுந்தர் 'ஊஹூம்' என்று தலையை அசைத்தபடி புறப்பட்டு விட்டான்.

சுந்தர் வீசின கையும் வெறுங்கையுமாகத் திரும்பினான்.

மின் விளக்குகளைப் பொருத்தி விட்டு வாசற்படியிலேயே காத்துத் தவம் இருந்தாள் கமலி.

ஏக்கமும் ஏமாற்றமும் விளங்க மௌனப் பிண்டமாக நின்றான் சுந்தர்.

"எங்கேங்க அத்தான் என் ராஜா?" என்று அதிகார தோரணையில் சுந்தரை நோக்கி வினவினாள் அவள்.

"நம்ப ராஜாவைக் கண்டு பிடிக்க முடியவில்லை, கமலி. இந்த மணச்சநல்லூரிலே தேடாத இடம் பாக்கி இல்லை. அவன் எங்கே ஒளிஞ்சுக் கிட்டு இருக்கானோ? அவனை விதி எங்கே ஒளிச்சு வச்சுக்கிட்டு இருக்குதோ? ஒண்ணுமே விளங்கல்லையே?...நான் என்ன செய்வேன், கமலி?" என்று அழுதான் அவன்.

அவளும்தான் அழுதாள். பிறகு கண்டிப்புத் தொனிக்கக் கூறினாள்: "நீங்க என்ன செய்வீங்களோ? ஏது செய்வீங்களோ? எனக்குத் தெரியாது; எனக்கு அதைப்பற்றிக் கவலையும் கிடையாதுங்க! எனக்கு எப்படியும் என்ராஜா வேணும்!" அவளது அழகான கண்கள் சிவந்திருந்தன.

"உனக்கு உன் ராஜா வேணும்! அப்படித்தானே?"

"ஆமாம். எனக்கு என்னோட ராஜா வேணும்; நான் பத்து மாசம் சுமந்து பெற்ற என் ராஜா வேணும்! என்னோட இந்த ஆணையை நீங்க உடனடியாக நிறைவேற்றி வைக்கத் தவறினால், நீங்க என் ராஜாவைத் தூக்கி எறிய முயற்சி பண்ணின இதே கிணற்றிலே நானும் விழுந்து பலியாகி விடுவேன்! ஆமாங்க அத்தான், ஆமாம்!"

அவன் மெய் விதிர்த்துச் சிலையாக நின்றான். மறுகணம், வெறி கொண்டவன் போல் அங்கிருந்து வெளியேறினான்.

இரவு மணி பத்து இருக்கும்.

வீசின கையும் வெறும் கையுமாக பைத்தியம் பிடித்த வனாகப் பூனையைப் போன்று வாசலை அடைந்தான் சுந்தர். முதல் அலுவலாக, கேணியை நிலவொளியில் ஊடுருவினான். நல்ல காலம். 'தப்புத்தண்டா' ஏதும் நடந்திருக்கவில்லை!— 'என் கமலியின் ராஜா இன்னமும் கிடைக்காதது கண்டு, என் கமலி இதே கிணற்றிலே விழுந்து விடுவதாகச் சூள் உரைத் தாளே? நான் இனி என்ன செய்யட்டும்?... முருகா!'— அந்த ஒரு முடிவைத் தவிர, அவனுக்கு வேறெந்த வழியுமே புலப்படவில்லை! பொங்கு மாங் கடலாகப் பாச உள்ளம் குமுறிக் கொந்தளிக்க, அவன் கிணற்றின் மேடை மீது ஏறி, கிணற்றில் குதிக்க முனைந்த நேரத்தில்—

"அப்பா!...ஐயோ அப்பா!" என்று அலறிப் பாய்ந்து வந்து சுந்தரின் கரங்களைப் பற்றி இழுத்துத் தரையிலே தள்ளி விட்டான் ராஜா.

"ஆ...ராஜா!" கூவினான் சுந்தர்.

சத்தம் கேட்டு ஓடோடி வந்த கமலி, "ஐயையோ அத்தான்! என்ன பாவம் செய்யத் துணிஞ்சீங்க மறுபடியும்?" என்று தேம்பினாள். பொட்டுப் பொட்டாகக் கண்ணீர் சிதறிக் கொண்டிருந்தது, தாலிப் பொட்டில்.

சட்டையைத் தட்டிக் கொண்டு எழுந்தான் சுந்தர். கமலியையும் ராஜாவையும் மாறி மாறி-மாற்றி மாற்றிப் பார்வையிட்டான். ஓ!— அவனுக்குப் புரிந்து விட்டதோ?...

ராஜா விதியாகச் சிரித்தான். படீரென்று பிரமாதமான 'ஏப்பம்' ஒன்று அப்போதுதான் அமர்க்களமாக வெடிக்க வேண்டுமா? "அப்பா, நீங்க பாசப் பரீட்சையிலே தோற்றுப் போயிட்டீங்களே?" என்றான், புது மலர்ச்சியும் புதுச் சொக்காயும் பளபளக்க.

சுந்தரின் பாசநெஞ்சம் உருகிச் சிலிர்த்தது. கண்ணீர் கசிந்தது. "கமலி, உன் ராஜா எவ்வளவு சமர்த்தாகப் பேசு

கிறுன், கேட்டியா!...உன் ராஜாவை வாடாமல் வதங்காமல் நீயே மாயமாய் ஒளிச்சு வச்சிக்கிட்டதுக்கு அப்பாலே, நான் எப்படி கமலி உன் ஆணைப்படி உன் ராஜாவை உன் கிட்டே கொண்டாந்து ஒப்படைக்க முடியும்? ஊம்...வாஸ்தவம்தான்! இந்தச் சோதிப்பும் எனக்குக் கட்டாயம் தேவைதான். ஆனால் ஒன்று; பாசம் என்கிற புனிதச் சந்நிதி இம்மட்டோடே எனக்கு அபயம் தந்திச்சே, அந்த மட்டுக்கு நான் பிழைச்சேன். முருகப்பெருமான் கிருபையினாலே, எப்படியோ உன் ராஜா உன் கைக்குச் சிக்கிட்டான்!...'' என்று உணர்ச்சிகள் சுழிக்கப் பேசினான், சுந்தர்.

"நம்ப ராஜான்னு சொல்லுங்க, அத்தான்!'' விக்கலுக்கும் விம்மலுக்கும் ஊடே மன்றாடினாள் கமலி.

"ஆமாங்க அப்பா!'' ராஜா செருமினான். "இனி நான் சத்தியமாய் எந்தப் பரீட்சையிலேயும் தோற்றுப் போயிட மாட்டேன், அப்பா!'' விம்மினான் ராஜா!

# இனம் விளங்கவில்லே!

கோஹினூர், 'வாக்ஸா'லுக்கு வரவேற்புச் சொன்னது.

உடை அறையில் சகுந்தலே, பிரபல நட்சத்திரம் மேனகாவாக மாற்றம் தந்தாள்.

அந்தி ஒளியில் அன்றையத் தபால்கள் காத்துக் கிடந்தன. காப்பி வந்தது.

"வேலய்யா!"

"அம்மா!..."

"கடிதங்களே உடை..."

"ஆகட்டும், அம்மா..."

முதல் கடிதம்: 'சகுந்தலேயாக அரங்க மேடையில் நடிக்கவேதான் பிரமன் தங்களேப் படைத்திருக்க வேண்டும்; கலே உலகம், ரஸிகர் கூட்டம் பாக்கியம் பெற்றதே. எங்கள் வாழ்த்துக்களே எங்கள் இளேஞர் சங்கத்தின் மூலம் தெரிவித்துக் கொள்கின்றோம்...'

அடுத்த கடிதம்: முதற் காதலில் பிறந்த சகுந்தலே கதைக்கு உயிர்ப்பு அளிக்கிறது உங்களுடைய உணர்ச்சியும்

ஜீவனும் கலந்த நடிப்பு. துஷ்யந்தனைப் பிரியும் போதும், மீண்டும் ஒன்றுகூடும்போதும் தாங்கள் நிஜமாகவே கண்வர் ஆசிரமத்தின் சகுந்தலையாகவே மாறிவிட்டீர்கள். சகுந்தலையை நீங்கள்கூட மறக்கவே முடியாதல்லவா?... எங்கள் வாழ்த்துக்கள்!...'

எஞ்சியிருந்த பத்துப் பன்னிரண்டு தபால்களும் அவள் பார்வையில் மேலெழுந்தவாரியாக ஓடி ஒதுங்கின. எல்லாம் ஒரே புகழ்ச்சிப் புராணம்! மூன்று நாள் முந்தி கலை விழாவிலே மேனகை சகுந்தலையாக நடித்ததற்கு விளைவு இது!- வாழ்த்துக்களும் பாராட்டுதல்களும்!

இன்னும் இரண்டு நாளில் பம்பாயிலிருந்து திரும்புவதாகவும் எல்லா விவரங்களையும் நேரிலேயே பேசிக் கொள்ளலாமென்றும் ஒரு லெட்டரின் குறிப்புச் சொன்னது; மோகனசுந்தரம் எழுதியிருந்தார்.

"ஐயா வருங்க போலே..." என்றான் வேலையன்.

"ஆமாம்!"

அடுத்தநாள் ஸ்டுடியோவின் 'கால்ஷீட்' பற்றிய விவரம் அவள் முன் இருந்தது. சகுந்தலை, துஷ்யந்தனைப் பிரியும் கட்டம் 'ஷூட்டிங்' நடக்க வேண்டும். இந்த ஒத்திகையில் மேனகையின் தத்ரூபமான நடிப்பிலே டைரக்டர் கூட மெய்ம்மறந்து விட்டாரல்லவா?

மேனகை நெடுமூச்சு விட்டாள். அதில் ஆறாத்துயர் இருந்தது; ஆறாத புண் இருந்தது; ரத்தக் கண்ணீர் இருந்தது.

என்ன நினைத்துக் கொண்டாளோ, மாடிக்கு ஓடினாள்; பட்டு மெத்தையில் போய் விழுந்தாள். 'காலிங் பெல்' அவளுடைய பூ விரல்பட்டு ஒலித்தது. வேலய்யன் ஓடோடி வந்தான்.

"அம்மா!"

“வேலய்யா, எனக்குத் தலை வலிக்குது. இந்தா சாவி, உள் அறையில் பெரிய பீரோவில் கீழ் டிராயரில் ஒரு போட்டோ ஆல்பம் இருக்குது. எடுத்துவா.”

‘பிரபல நட்சத்திரம் மேனகை-பேட்டிக் கட்டுரை...’—‘சினிமாத் தொண்டு’ இதழில் காற்றில் அல்லாடிக் கிடந்தது!

ஆல்பத்தில் ஒரு புகைப்படத்தை எடுத்தாள்; வேல் விழியும் கனி இதழும் மலர்ந்தன.

“வேலய்யா, நீ போ...ம்...நீ வந்த இந்த ஒருவாரமாகத் தான் வேலைகள் கச்சிதமாக நடக்கின்றன. எனக்கும் திருப்தியாகயிருக்கிறது. ஐயா பம்பாயிலிருந்து வந்ததும் உன்னைக் கண்டு ரொம்பவும் சிலாகிப்பார். உம்மாதிரி வேலைக்காரன் கிடைக்காமல் எத்தனை நாள் கஷ்டப்பட்டோம், தெரியுமா?...”

வேலய்யன் தலையைக் குனிந்து கொண்டு நூலிழைபோல சிரித்துக் கொண்டான், மூப்படைந்த மேனியில் நடுக்கம்; தாடியும் மீசையுமாகயிருந்த அவனுடைய முகமண்டலத்தில் ஒரு பனித்துளி. போய்விட்டான் இருமலுடன்.

ஆல்பத்திலிருந்த போட்டோவைக் கையில் எடுத்தாள் மேனகை. மேஜைமீதிருந்த தந்தச்சிமிழ் ஒன்றைத் திறந்தாள். “குமார்! உங்களை நான் என்றைக்குக் காண்பேன்? மூன்று வருஷங்களை மறைத்துவிட்டனவே இந்தக் காலண்டர்! என் நினைவு முகம் மறந்து போய் விட்டீர்களா? உங்கள் ஆசை முகம்தானே என் வாழ்வின் பற்றுக்கோடு!...ஒருமுறை, ஒரே ஒரு முறை உங்கள் முகதரிசனம் கிட்டமாட்டாதா?... குமார்!...”-வார்த்தைகள் தேய்ந்தன.

நீர் மண்டிய விழிகளை நிமிர்த்தினாள். எதிர்ச் சுவரில் ஒரு ‘என்லார்ஜ்மெண்ட்’ படம் இருந்தது. அது மோகன சுந்தரம்-மேனகை திருமணப் படம். ‘அத்தான், என்னை மன்னிக்க மாட்டீர்களா? நான் துரோகி என்கிறீர்களா? உங்கள் அன்பை நான் மறக்கவேமாட்டேன். ஆனால் என்

நெஞ்சம் என் முதற் காதலுக்குப் பாத்திரமான குமாரின் நினைவு முகத்தை மறக்க வகையின்றித் தவியாய்த் தவிக்கின்றதே...உங்கள் சொத்தாகிவிட்ட நான், வேறொருவன் நினைவில் கிறுக்காகியிருப்பது முழுத்தவறுதான்; அறிகின்றேன். ஆனாலும் என் உடலின் உயிராய்விட்டது குமாரின் நினைவு. நான் தங்களைத் துறந்து செல்கிறேன். இல்லையென்றால், நான் நடைப்பிணம்தான்! குமாரை ஒருமுறை-ஒரே ஒரு கணமாகிலும் கண்டால்தான் என் இதயத்துள் விழுந்திருக்கும் இடைவெளி இட்டு நிரப்பப்பெறும்...இல்லையேல் இனி மேனகை இல்லை-இவ்வுலகிலே!...'-என்றே கிறுக்கியிருந்த அக்கடிதத்தை அப்படியே மடித்து வைத்தாள்.

சகுந்தலை துஷ்யந்தனைச் சந்தித்தாள்; துஷ்யந்தன் சகுந்தலையைச் சந்தித்தான். காதல் பிறந்தது. இது மேனகை-குமார் இருவரிடையிலும் காதல் பிறந்த கதை!

மேனகை கனவு கண்டாள் பிரபல நடிகை ஆகவேண்டுமென்று. உரிய திறமை, நல்ல சாரீரம், அழகுத் தோற்றம், தாங்கும் பாகத்தை நன்குணர்ந்து நடிக்கும் சிறப்பு, எல்லாம் அவளுக்கு உடன்பிறந்த சிறப்பியல்புகள். முதன் முதலில் சகுந்தலை நாடகம் அவளை சகுந்தலையாக உலகிற்கு அறிமுகம் செய்வித்தது. குமார் அந்நாளைய நாடக உலக 'அயன் ராஜ பார்ட்'. முள் எடுக்கும் பாவனையில் துஷ்யந்தனைச் சந்திக்கும் கட்டம் குமாரையும், மேனகையையும் சேர்த்து ரசிகர்களைப் போற்றிப் புகழச் செய்தது. இதயத்தோடு இதயம் சேர்ந்து உடலோடு உடல் இணைந்து சகுந்தலை, துஷ்யந்தனைப் பிரியும் போது-அவள் தளிர் விரலில் மன்னனின் கணையாழி பூட்டப் பட்டுப் பிரியும்போது மேனகையின் உடலின் ஒவ்வொரு துடிப்பிலும் அதிர்ந்த அம்மோனச் சுழல் எங்கே? அக்கணையாழி என்னும் உயிர் நினைவுச்சின்னம் தந்தச்சிமிழை அலங்கரித்தது. அவளுக்கு அது தாஜ்மஹால் போல! ஆனால், அவள் அவனுடைய தாஜ்மஹாலாக வாய்ப்பில்லையே! காதல் ஓர் எழிற் கனவேதானா?

காத்திருந்தாள், காத்திருந்தாள் கன்னியாக. அழகைத் தூண்டில் போடத் துடிக்கும் உலகமும், வறுமைப் பிசாசும் அவளைச் சும்மாவிடுமா, என்ன? மோகனசுந்தரம் சீமான்: படம் எடுக்கத் திட்டமிட்டார். 'ஸ்டார்' ஆனாள் மேனகை. அவள் அவருடைய இதயத்தின் 'ஸ்டார்' ஆகவும் ஆனாள்; சந்தர்ப்பங்கள் அப்படி!

மூன்று ஆண்டுகள் ஓடிவிட்டன. மூன்று படங்கள் திரையிடப்பட்டுவிட்டன; மேனகை 'ஹீரோயின்'! நாடகங்கள் வேறு. அவள்தான் கதாநாயகி. யார் யாரோவெல்லாம் துஷ்யந்தன் வேஷம் போட்டார்கள். சகுந்தலை நாடக ரூபத்தில் கண்டவெற்றியை உணர்ந்து, அதைத் திரைப்படமாக ஆக்கவும் திட்டம் போட்டு படப்பிடிப்பு நடந்து வருகிறது.

'அவருடைய கடிதங்களை எண்ணினால் விந்தையாகயிருக்கிறதே. ஆம்! நானும்குமாரும் நடித்த முதல் சகுந்தலை நாடகத்தில் தான் நான் அசல் சகுந்தலையாகவே மாறினேன்; இன்றெல்லாம் நான் சாதாரண டூப்ளிகேட் சகுந்தலையே தான்—எல்லாம் வேஷம்! ஏன், என்னுடைய ஒரிஜினல் துஷ்யந்தன்—குமார்—என்னைவிட்டுப் பிரிந்து விட்டாரே! குமார், நீங்கள் புதிர்...!'

○ ○ ○

டெலிபோன் கூப்பிட்டது; நட்சத்திரம் பேசியது. சகுந்தலை ஷூட்டிங் அடுத்த வாரத்திற்கு தள்ளிப் போடப்பட்டு விட்டது.

நைலான் பட்டு சலசலக்க மேனகை திரும்பினாள். திரும்பியவள் படாரென்று தரையில் சாயப்போன தருணத்தில் பணியாள் வேலையன் தாங்கிக் கொண்டான். கிழவனுக்குப் பயம் பிடுங்கித் தின்றது. டாக்டர் வந்தார். அவளுக்கு நல்ல மூச்சும் கூடவே வந்தது.

"வேலையா, இரவு போட்மெயிலில் நான் தஞ்சாவூர் போகவேண்டும்; நீயும் துணைக்கு வரவேண்டும்; முதல்

வகுப்பு ரிசர்வ் செய்துவிடு...அம்மம்மா! பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறதே!"

மேனகை படுக்கையில் படுத்திருந்தாள். விற்புருவங்களை மையமாக்கி நகைத்து ஒளிவிட்ட பிறைப் பொட்டு வியர்வையில் கலைந்திருந்தது. கருமேகங்களைக் கிழித்துக் கொண்டு நிலா புறப்படுமே, அதுமாதிரி அவளுடைய பிறைமதி முகம் பளிச்சிட்டது.

காப்பி கொணர்ந்தான் வேலையன். அவள் காப்பி 'செட்'டை வாங்கினாள்; அவளுடைய தந்தக் கையில் தணல் நின்றது. 'ஆ' என்றான் பணியாளன்.

"கனவு கண்டதிலே—ஒருநாள்
கண்ணுக்குத் தோன்றாமல்
இனம் விளங்கவில்லை—எவனோ
என்னகம் தொட்டு விட்டான்!"

ரேடியோ பாடிக் கொண்டிருந்தது.

மேனகை புன்னகை சிந்தினாள்; சிந்தையில் ஆயிரம் எண்ணங்கள். குமார்—பழைய காதலன் அவள் அகம் தொட்டு நின்றான். அன்று முதற் சந்திப்பில், சகுந்தலை துஷ்யந்தனைக் கண்டு மேனி தழுவும்போது பெற்ற அந்த இனிய உணர்வு, இன்பக் கனவு எல்லாம் ஓடின. பேசும் பதுமை வடிவு பெற்றாள். இறந்த நேற்றைய தினத்தைக் கூட பிடுகிறாள் 'வா' என்பதாக! அவளுடைய நெஞ்சு எம்பித் தணிந்தது. வேலையன் போய்விட்டான்!—அவளுடைய மேனியின் ரத்தக் குழல்களில் ரத்தம் கொதித்துச் சீறியது!

o o o

இரவு.

கடிகாரத்தில் மணி ஏழு, ஏழு ஐந்து, ஏழு பத்து என்று நாலு கால் பாய்ச்சலிலே ஓடிக்கொண்டிருந்தது.

பிரபல நட்சத்திரம் தஞ்சை நாடி ஒய்வு நாடிப் புறப்படுகிருள்!

"வேலய்யா...வேலய்யர்!"

வேலையன் இல்லை; பதிலாக, ஒரு கடிதம் இருந்தது.

"பிரிய முள்ள மேனகா,

உரிமைக்குரல் கொடுக்கிறேன், பலபல யுகங்கழித்து. ஆனால் நீ என்றோ இன்னொருவரின் உரிமை ஆகிவிட்டாயே?... பல நாள் சென்று உன்னை நான் சந்திக்கும் பயனடைந்தேன்— உன்னுடைய பழைய குமாராக அல்ல— உன் வேலையாள் வேலையனாக. விந்தையான வாய்ப்புதான். உன்னை ஊர் மீண்டு என் உரிமையாக்கிக் கொள்வதாகத்தான் உறுதி சொன்னேன். ஆனால், என் உடலின் குறை— நெஞ்சை அரித்துத் தின்ற க்ஷயம் உன் வாழ்வைப் பலி கேட்க மறுத்தது. பல மாதங்கள் என் மனத்தை நானே கொன்று போட்டு, ஸானடோரியத்தில் தஞ்சமடைந்தேன், உன் இனிய நினைவில்! நீ என்னை மறந்திருப்பாயோ என்றஞ்சினேன். ஆனால் என் நினைவில் நீ பைத்தியமாகி விட்டிருப்பதை அறிய அறியத்தான், நான் உன் பார்வையிலிருந்து தொலைதூரம் புறப்பட்டு விட்டேன். என்னை மறந்துவிடு, தயவுசெய்து! நீ உன் கணவரின் சொத்து. சாவதற்குள் ஒரு முறை—ஒரே முறை என் சகுந்தலையை ஆசை தீரப் பார்க்க வேண்டுமென்று ஆசைக்கனவு கண்டேன்; பலித்தது. இனி நிம்மதியுடன் சாகிறேன், உன் இன்ப நினைவுடன், உன்னுடைய அந்த இன்ப ஸ்பரிச நினைவுடன்!

இப்படிக்கு,
குமார்."

மேனகை கதறினுள்:

"குமார்! உங்களை நான் அடையாளம் தெரிந்து கொண்டுதானே இன்று பயணத்துக்கும் ஏற்பாடு செய்தேன்!

நீங்கள் கிழவனாக, வேலையனாக உருமாறினாலும், உங்களுடைய கண்களில் தெரியும் அந்தக் குறுநகை சொல்லி விட்டதே, நீங்கள் என் குமார் என்று...! ஐயோ, இனி எங்கு சென்று காண்பது?...குமார்...நம் முதற்காதலில் பிறந்த மாதிரி அந்த இன்ப ஸ்பரிசத்திற்காகவேதானே நான் இன்று மயக்கம் போட்டு விழுவது போலவும் நடித்தேன்...நீங்களும் என்னைப் பற்றிக் காத்தீர்கள்...ஐயோ குமார்...!”

“மேனகா!...” என்று பரிவுடன் பெயர் சொல்ல உரிமை பூண்ட மோகனசுந்தரம் காரிலிருந்து இறங்கி வந்தார். அழைத்தார்; அவள் சமாளித்துக் கொண்டாள். வலிய வரவழைக்கப்பட்ட புன்னகை, சூழ்நிலையைச் சரிசெய்யப் படாத பாடு பட்டுக் கொண்டிருந்தது.

“மேனகா, இன்று ஒரு ஆக்ஸிடெண்ட் நடந்துவிட்டது. பாவம், ஒரு கிழவன்—நம் வீட்டிற்குப் புதிதாக வேலைக்கிருந்தானுமே அவன், எங்கோ காரில் அகப்பட்டு இறந்து விட்டான். பிழைக்க வந்தவனுக்கு எப்படிச்சாவு தோற்றியிருக்கிறது...ரொம்ப நல்லவனுமே!...” என்றார் அவர்.

மேனகைக்கு உயிர் இல்லை.

ஂ ஂ ஂ

மறுநாள்.

படமுதலாளி மேகனசுந்தரத்தின் நடுங்கும் நுனி விரலில் தத்தளித்துக் கொண்டிருந்தது ஒரு கடிதம்.

“அன்புள்ள கணவரின் பாதகமலங்களுக்கு, அனந்த கோடி நமஸ்காரங்கள். உங்கள் அன்புக்கு நான் ஏழேழு பிறப்பிற்கும் கடமை கொண்டவள்; ஆனால், நான் உங்கள் மனைவி மேனகையாக ஒரு கணம் கூட இருக்க முடியவில்லை. என் உள்ளக்கிறுக்கு அப்படி. முதல் காதல் பிறந்த இடம் தான் முடிவு காணும் இடமும்! என் முதற் காதலுக்குரியவர் குமார்—நீங்கள் மாண்டதாகக் கூறும் வேலைக்காரன் வேலை

யன்தான் அவர். அன்று முதல் குமார்தான் என்னுள்ளே ராஜ்யபாரம் நடத்தினர். என்றால் இதை எப்படி மறைக்க முடியும்? விசித்திரம்தான்! குமார் நினைவிலேயே நான் மூழ்கும் சமயமெல்லாம், நான் உங்கட்குத் துரோகம் செய்வதாகவே உணர்ந்தேன். என் நிலைக்கு முடிவு வேண்டும். என் குமாரின் முடிவுதான் என் முடிவு. அன்று தாங்கள் முதலில் கண்ட மேனகையாகவே இன்றும்புறப்படுகிறேன். ஆம்; முதல் காதல், பிறந்த இடத்தில்தான் முடிவும் காண்கிறது...!

இப்படிக்கு,
உங்களவளாயிருந்த
அபலை மேனகை."

○ ○ ○

விதி சிரித்தது:

"குமார்-மேனகை காதலை அறிந்தவர் மோகனசுந்தரம். குமார் வேலய்யனுக உருமாறியதையும் துப்புக் கண்டார். அவனைக் கொல்லத்தான் சதி செய்தார். அதற்குள் அவன் தப்பிவிட்டான். குமார் மாண்டு விட்டதாகச் சொன்னால், கட்டாயம் மேனகை தன்வசப்படுவாள் என்பது இவர் கனவு. நடந்ததோ?... மேனகை இவரைத் துறந்துவிட்டாள்! மேனகை-குமார்-மோகனசுந்தரம் இம்மூவரின் விசித்திரக் காதல் கடைசியில் மூன்று துருவங்களாகி விட்டனவே! பாவம்...என் அநுதாபங்கள்!"

# பிரச்னைக்கு ஒரு சோளி!

அந்த டெய்லருக்குச் சின்னமுத்து என்று பெயர். பெயர்தான் சின்னமுத்து; ஆனால், அதிர்ஷ்டத்தை அளந்து பார்த்தால், அவன் பெரிய முத்துவேதான். வந்து போன தீபாவளிச் சமயத்தில் அளவெடுக்கும் டேப்-நாடா, கத்தரி, அந்த உஷா மெஷின் ஆகியவற்றுக்கு ஒரு நிமிஷமாவது மூச்சு விட நேரம் இருந்ததா, என்ன? எண்ணி இருபது—முப்பது நாட்களிலே, எண்ண முடியாத அளவுக்குச் சில்லறையும் நோட்டுமாக ரூபாய் ஐந்நூற்றுக்கு மேல் சம்பாதித்து விட்டான் அவன்!

அதன் விளைவு: தேள் கொடுக்கு மீசையும் கோழிக்கால் கிருதாவும் முளைத்தன. அவனுடைய ஆசைக் கண்ணாட்டி பவளக்கொடிக்கு ஒற்றைக் கல் மூக்குத்தியும் பண்ணிப் போட்டான். பவளக்கொடியை எண்ணும் போதெல்லாம் அவனுக்கு ஏன்தான் அந்தக் குறும்புக்காரி தெய்வானையின் ஞாபகமும் வந்து தொலைக்கிறதோ? நெஞ்சின் ஏமாற்றத்தையும் ஏக்கத்தையும் மறக்க-மரக்கடிக்க அவன் அடிக்கடி தன்னையே 'மறக்கவும்' வேண்டியவன் ஆனான்.

இப்போது தைப் பொங்கல், வாசலுக்கு வந்து கொண்டிருக்கிறது.

காஜா பொடியன் கொடுத்த சாயாவை, ஒரே மடக்கில் குடித்துத் தீர்த்தான். வெட்டு மேஜையில் அம்பாரமாகக் குவித்திருந்த வெட்டப்பட்ட துணி ரகங்கள் அவனைச் சொக்க வைத்தன: 'இந்தச் சாலையிலே என் கைக்கு ஒரு தனி மவுஸ்தான்! அதான் இந்த ஐயாவோட கை மகிமை யாக்கும்!'

சமயம் வாய்த்த போதெல்லாம் 'நாட்டுக் கட்டை' பவளக்கொடியிடம் வாய் ஓயாமல் பெருமையடித்துக் கொண்ட பேச்சை இப்போது அவன் தனக்குள் தம்பட்ட மடித்துக் கொள்ளலானான், சின்னமுத்து. பவளக்கொடியின் ஞாபகம் அவனுக்கு இருட்டை நினைக்கத் தூண்டாமல் இருக்குமா?

'பா வட்டா பீடி' புகைந்தது

"அண்ணாச்சி!..."

ரத்தம் உறைந்து விட்ட மாதிரியான ஒரு திகிலுணர்வு கண் இமைக்கும் நேரம் அவனுள் எழுந்து, அவனை ஆட்டி வைக்கவே செய்தது. உடன் பிறந்த 'தங்கச்சி'தான் அழைக்கிறாளோ என்றுதான் அவன் எடுத்த எடுப்பில் நினைத்தான்; குழம்பினான். எங்கோ சுற்றிய காட்டு மூலை பவளக்கொடியை மோப்பம் பிடித்து வலைவீசிக் கடத்தி வந்தான் அவன். ஊருக்கு ஒதுக்கத்தில் தங்க வைத்தான். சேதி அவன் குடும்பத்துக்குத் தெரிந்தது. "நீ கெட்ட கேட்டுக்கு 'கீப்'-வைப்பாட்டி வேறேயா?" என்று இரைந் தனர் பெற்றோர். நாட்டுக் கட்டை பவளக்கொடியின் மயக்கத்தில் குடும்பத்தைப் பகைத்துக் கொண்டான். அவன் 'குடி'யும் குடித்தனமும் ஆனான். இந்நிலையில் அவன் தன் தங் கையை அப்போது எப்படித்தான் எதிர்பார்த்தானோ, பாவம்!

சின்னமுத்து பெரிய விழிகளை உருட்டிவிழித்து ஏறிட்டு நோக்கினான்: "யாரு, தெய்வானையாங்காட்டி?" என்று அதிசயம் மூளக் கேட்டான்.

"ஆமாங்க, உங்க அம்மான் மகள் தெய்வானை தானுங்க!" என்றாள் தெய்வானை. அவள் குரல் சுரத்து வடிந்து சோகமாக ஒலித்தது. தோள்பட்டையில் கிழிசல் கண்டிருந்த பகுதியை மறைத்திட, சுங்கடி முகதலைவைப் பரப்பி விரித்தாள் அவள். கண்கள் ஏன் அப்படிக் கசிகின்றன?...

சின்னமுத்து மலைப்பாம்பு மூச்சு விடுவதுபோல் மூச்சு விட்டான். அது சாமான்யமான மூச்சா, என்ன? நெடுமூச்சு! முறைமைப் பெண் கட்டழகி தெய்வானை, தனக்கு என்று தான் மனப்பால் குடித்திருந்தான் அவன்; பகற் கனவு கண்டிருந்தான் அவன். ஆனால் 'பால்' முறிந்தது; கனவு பொய்த்தது. "சதா கள்ளுக்கடையே கதின்னு கிடக்கிற மச்சானைக் கண்ணாலம் கட்டிக்கிட ஒப்பவே மாட்டேன்!" என்று தீர்ப்பு வழங்கி விட்டாள் தெய்வானை. பின், அவள் சிங்கப்பூர் மாப்பிள்ளைக்கு முந்தானை விரித்தாள்! இந்தத் தோல்வியை ஈடுகட்டி, நெஞ்சுக்கு உணக்கை தேடிக் கொடுக்கச் சிலட்டூர் வட்டாரத்தில் சுழல் வட்டமிட்டு அலைபாய்ந்து அலைந்த அத்தருணத்தில்தான் பவளக்கொடி சிக்கினாள்; அவன் மீது படர்ந்தாள், தேடிப்போன மூலிகை காலில் சிக்கின கதை போல!

சின்னமுத்துவின் பற்கள் 'நறநற' வென்றன. 'எங்க தெய்விக்குட்டி, கட்டின புருசனோடே வம்படிச்சுக்கிட்டு இங்கிட்டாலே என்னை நாடிப்பறிஞ்சு வந்திருக்குமோ?......'— மோகக் கிளர்ச்சி காஜா எடுக்கும் ஊசியாகக் குத்தியது. வந்தவளை ஊடுருவினான்: "தெய்வானை, வந்த காலோட நிக்கிறியே? அப்படிக் குந்தப்படாதா?" என்று உபசாரம் செய்தான். போலித்தனம்.

"குத்தமில்லீங்க!"

"சரி; என்ன சங்கதி? காற்று இப்பிடித் திசை மாறி அடிச்சிருக்குதே?" என்று கேட்டான் தையற்காரன்.

அவன் குரலில் ஒலித்த 'ரசபேதம்' தெய்வானைக்குப் புரிந்திருக்குமோ? "ஒண்ணுமில்லே. ஒரு ரவிக்கை தச்சுக் கொடுக்கோணும்!" என்றாள்.

"யாருக்கு? உனக்கா?"

"வேறே யாருக்கு? எனக்கேதான்!"

"பொங்கல் டயமில்ல. வேலை எக்குத்தப்பிலே குமிஞ்சு கிடக்குது. சரி; சோளி எப்பைக்கு வேணும்?"

"ராத்திரிக்கே எனக்கு வேணும்!"

"என்னு? ராத்திரிக்கே வேணுமாக்கும்? நாளைக்கு வாங்கிக்கிடுவேன், தெய்வானைப் பொண்ணே!" என்று இளித்தான் சின்னமுத்து இளவட்டம்.

"ஏலாதுங்க; இன்னிக்கு ராத்திரிப் பொழுதுக்கே வேணும். ஒரு அவசரம். கட்டாயம் வேணும். ராத்திரி எந்நேரமானாலும் நானே நேரில் வந்து வேணும்னாலும் வாங்கிக்கிடுறேன்! நீங்க தச்சாக்க, உசத்தியாய் இருக்கு மேன்னு ரோசிச்சுத்தான் வலியத் தேடி வந்து கேட்கிறேன். பழசுபட்டதை நெஞ்சிலே போட்டு வச்சுக்காமல், அம்மான் மகள் என்கிற சொந்தத்துக்காச்சும் மனசு வச்சீங்கன்னா, சிலாக்கியமாக்கும்!"

சின்னமுத்துவின் சின்ன மூளை பெரிய அளவில் குதிரை ஓட்டியது: 'ராத்திரி எந்நேரமானாலும் தானே நேரிலே வந்து வாங்கிக்கிறதாகச் சொல்றாளே, இந்தப் பாவிச் சிறுக்கி? என்ன சங்கதியாம்? ஒரு வேளை, மாடப்புறு வேடன்கிட்டவே வலியவந்து தஞ்சமடையப் போகுதா? திருப்பூட்டின சிங்கப்பூர்க்காரன் சோப்ளாங்கி ஆகிட்டானோ?... பலே!'— நினைவுகள் சூது ஆடின.

"இந்தாங்க, ரவிக்கைத் துணி!" என்று சொல்லி ஒரு காகித உறையை நீட்டினாள் தெய்வானை.

"கட் சோளியா அடிச்சிட்டால் உன் மேனிக்கு அந்த மாய் இருக்கும். ஒரு ரூவாய்க் காசு தந்திடு, தெய்வானை!"

"ஊம்!"

ஜிகினு கட்டின ரோஜாப் பூ மாலையாகப் பள பளத்தது அந்தப பட்டுத் துணி.

டெய்லர் சின்னமுத்து ஏக்கத்தோடும் தவிப்போடும் நெடுமூச் செறிந்தான். ஆஹா! எத்தனை ரசிகத் தன்மை யோடு கூடிய செலக்ஷன்! யார் எடுத்திருப்பார்கள்? தெய்வானையா, அல்லது அவளுக்கு மாங்கல்ய பாக்கியம் அருளிய அவள் கணவன் தங்கப்பனு? 'தெய்விக்குட்டியோட பட்டு மேனிக்கு எம்புட்டுப் பொருத்தமாயிருக்கும் இந்தப் பட்டுச் சோளி!'-எதையோ தொடர்ந்து ஆலோசித்தான். பீடியை மூர்க்கத்தனமான ஆவேச வெறியோடு உறிஞ்சி இழுத்தான். இரண்டாம் ஆட்டம் சினிமா எப்போது ஆரம்பமாகுமென்று தவித்துப் புழுங்கியது மிருகமனம்.

காலம் ஓடியது.

அவன் ஓடுவானு?

பட்டுச் சோளித் துணி துண்டம் துண்டமாக அவன் கைக்குள் அடங்கியது. விசிறிப் போட்டான், இயந்திரத்தின் மடிப்புப் பலகை விளிம்பில். இழுப்பறையினின்றும் ஓடி வந்த ரோஸ் கலர் நூல் சுருள் அவன் கைக்குள் வந்து நின்றது.

"மாஸ்டர், கவுனை முடிக்க வேணுமா?"

"நீ உன் சோலியைப் பாருடா, பயலே!"

பையன் தலையைச் சொறிந்து கொண்டான். "பட்டுச் சோளி; அதிலவும் கட்சோளி! வேலை நெட்டி வாங்கும். ரேட் மூணு ரூபாய் வாங்குவீகளே, மாஸ்டர்?"-அவனுக்கு வாய் நீளம்.

மிஷின் ஓடியது.

'லாப நஷ்டக் கணக்கு எனக்குப் புரியாதாக்கும்? அதிகப்பிரசங்கி!' ஸ்லாக் கேட்டு வந்த அரியலூர் காப்பித் தூள் கடைச் செட்டியாருக்கு மறுபடியும் நாளைக்குத் தவணை வைத்து விட்டு, கருமமே கண் ஆனான் அவன். தெய்வானைக் குட்டிக்குச் சடங்கு சுற்றினபோது, அவள் என்னமாய்ச் சிரித்தாள்—வெட்கம் கூட்டி!... பலே!

அந்தி மயங்கியது.

அவனும் மயங்கினான்.

விளக்கு பளிச்சிட்டது.

'கட் சோளி' ரெடி!

தெய்வானையின் கட்டு மேனிக்குக் கன பொருத்தம் தான் இந்தப் பட்டுச் சோளி. சோளியின் மார்பகப் பகுதி களில் ஓடி விளையாடியது ஊசி.

"ஏலே, சல்தியா இதுக்குப் பட்டன் கட்டு!"

"ஆகட்டுங்க, மாஸ்டர்!"

பட்டுச் சோளியும் கையுமாகக் கிளம்பினான் சின்ன மூத்து.

தெய்வானையிடம் இரண்டாவது ஆட்டம் ஆரம் பித்ததும் வரும்படி சொல்லிவிட்டு, இப்போது சோளி யோடு எங்கே புறப்படுகிறான்?

காவல் நாய், இனம் புரிந்து குரலை அடக்கிக் கொண்டது.

"பவளம்!"

பவளமாகச் சிரித்து, கொடியாகத் துவண்டு வந்து நின்றாள், ஆசைக் கண்ணாட்டி பவளக்கொடி. சோளிப் பொத்தான்களை அழுத்தி விட்டான். மறு விநாடி—"ஐய...

சும்மா இருங்க. வந்ததும் வராததுமாய் இப்பிடியா?" பிடி கொடுத்து, பிடி விலகி, தரையில் நழுவிய துணிப் பொட்டலத்தை எடுத்தாள் பவளக்கொடி.

"பலே! ரொம்ப ஷோக்கா இருக்கே இந்தப் பட்டுச் சோளி! எனக்குத் தானுங்களே, அத்தான்?" என்று கொஞ்சினுள்!

"மறுகா யாருக்காம்! உனக்கே தான்! அறந்தாங்கிக்குப் போக வேண்டி வந்திச்சு, கத்தரி சாணை பிடிக்க. போன இடத்திலே இந்தத் துணி கண்ணிலே தட்டுப் பட்டுச்சு. நீ ஒரு வாட்டி சொன்னது நினைப்பு வந்திச்சு. இருபதும் சொச்சத்துக்கு எடுத்தாந்தேன். ஒரே மூச்சிலே தச்சுப் புட்டேன். தச்சு, சூட்டோடவே உங்கிட்டே கொண்டாந்து போட்டு அழகு பார்க்கணும்னு ஆசை ஒடிச்சு; ஓடியாந் தேன்!"—எச்சில் ஒழுகப் பேசினுன் சின்னமுத்து.

உருகிப்போனுள் பவளம்.

"பவளம், அந்த ரவிக்கையைக் கழற்றி வீசிப்புட்டு இதைப் போட்டுக்குவேன்!"என்று 'நையம்' பாடினுன்.

"ராத்திரிக்கு ஆகட்டுமுங்க. இப்ப போட்டுக்கிணு கசங்கிப் போயிடும். போய், பிழைப்பைப் பாருங்க," என்று சொல்லிக் கொண்டே, புதுச் சோளியை வாகாய் மடித்து டிரங்குப் பெட்டிக்குள் வைத்தாள் கட்டழகி.

வீசின கையும் வெறுங்கையுமாகக் கடைக்குத் திரும்பி னுன் சின்னமுத்து சிங்கம். இப்போதும் தெய்வானை அவன் நெஞ்சில் நிறைந்தாள்! பொடியனை அவன் வீட்டுக்கு அனுப்பினுன். 'தெய்வானை பஜனை' செய்து கொண்டே, இரண்டாவது காட்சி ஆரம்பிக்கும் நேரத்துக்காகத் தவம் கிடக்கலானுன் அவன்.

இரண்டாம் ஆட்டம் ஆரம்பமாகி விட்டது.

இன்னமும் தெய்வானைப் பெண்ணைக் காணுமே?...

அட, கடவுளே!

கடையை அடைத்து மூடிக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தான் சின்னமுத்து! 'அந்தப் பழிகாரி தெய்வானைக் குட்டி சோளி வாங்க வரும். சோளி, வீட்டிலே இருக்குன்னு சொல்லிக் கையோட அழைச்சுக்கிட்டுப் போய், வழியிலே சவுக்குத் தோப்பிலே நிலாவிலே மடக்கிப் போட்டுப் புடலாம்னு ஆசையாய்த் தவிச்சுக்கிட்டு இருந்தேனே?... ஐயையோ!'—நெஞ்சு புலம்பாமல் இருக்குமா?

"வாங்க மச்சான், வாங்க!" என்று பாடி, முகமன் மொழிந்தாள் பவளக்கொடி.

"மூஞ்சி என்னமோ போல இருக்குதுங்களே? மூஞ்சியைக் கழுவிக்கினு வாங்க, அத்தான்! சாப்பிடலாம்! எறுல் வருத்திருக்கேன்!"

"சாப்பாடு அப்பாலே ஆகட்டும், பவளம். முதலிலே அந்தப் பட்டுச் சோளியைப் போட்டுக் காட்டு!"

"அதைப் போட்டுப் பார்த்துப்புட்டேன். ரொம்பக் கச்சிதமாய் இருக்குங்க, அத்தான். அளவு ரவிக்கை இல்லாமல், எப்பிடிங்க இம்மாம் பொருத்தமாய் தச்சீங்க?"

"ஆளைப் பார்த்தாப் புரியாதா, பவளம்?... அது போகட்டும். அந்தச் சோளியை எடுத்துக்கிட்டு வா!"

பவளக்கொடி சிரித்தாள்; வாய் விட்டுச் சிரித்தாள்.

"என்னத்துக்கு இப்பிடிச் சிரிக்கிறே? முதலிலே அந்தச் சோளியை எடுத்திட்டு வாயேன்; அதை உனக்குப் போட்டு அழகு பார்த்தால்தான் எனக்குப் பசி எடுக்குமாக்கும்!" என்றான் சின்னமுத்து.

பவளக்கொடி மறு முறையும் எக்காளச் சிரிப்பைக் கக்கினாள்: "அத்தான், அந்தப் பட்டுச் சோளி, போய்ச் சேர வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்திடுச்சுங்க?" என்றாள்.

"ஏலே, என்ன சொல்லுறே நீ?" என்று ஆங்காரக் குரலெடுத்துக் கேட்டான்.

"அந்தப் பட்டுச் சோளி அதோட உடைமைக்காரி தெய்வானை கையிலே சேர்ந்திடுச்சின்னு சொல்லுறேன்!"

சின்னமுத்து பற்களைக் கடித்தான்: "என்னோட அனுமதி இல்லாமல் அதை நீ தெய்வானைகிட்டே சேர்ப்பிக்கிறதுக்கு உனக்கு என்ன ரைட்டு இருக்கு?" என்று புலியாக உறுமிய படி அவளை அடிக்கக் கைகளை ஓங்கினான்.

பவளக்கொடியின் மாநிற முகம் ரத்தம் கட்டியது: "நான் நியாயமாய்த்தான் நடந்துகிட்டேன். உங்க அடாவடிக்கு நான் ஆளில்லே. என்னை உங்க வைப்பாட்டின்னு மெத்தனமா நினைக்க ஏலாதுங்க. இந்தாலே இருக்குது, நீங்க கட்டின தாலிச் சரடு. ஆமாங் சொல்லிப்புட்டேன்!" என்றாள்.

சின்னமுத்து எப்படிப் பெட்டிப் பாம்பானான்?...

"நடந்த கதையைக் கேட்டுக்கிடாமல் ஓரே பாய்ச்சலாய்த் துள்ளிக் குதிச்சால், அந்தப் பாச்சாவெல்லாம் எங்கிட்டே பலிக்குமாக்கும்?" என்று காட்டமாகப் பேசினாள் பவளம்.

அவன் மலைத்தான்.

பவளக்கொடி தொடர்ந்தாள்:

"பாவம், தெய்வானை அக்கா! அதோட புருசன் ஆசையாய் மதுரைச் சீமையிலே வாங்கியாந்த அந்தப் பட்டு ரவிக்கைத் துண்டை தன் ஆசைப் பெண்சாதிக்கு தச்சாந்து கொடுத்துப் போட்டுப் பார்த்து ஆனந்தப்படவேணும்னு துடிச்சுதாம். அந்தச் சமயத்திலே அந்த ஆள் விஷம் தீண்டி, பாயும் படுக்கையுமாக ஆகிட்டாங்களாம். உயிருக்கு மன்றாடிக்கிட்டு இருக்கையிலே, தன்னோட கடைசி ஆசையை வெளிப்படுத்திப் புலம்பினாராம். பொங்கல் கெடுவிலே யார், கையோட தச்சுக் கொடுப்பாங்க? உடனே உங்ககிட்டே

கொண்டுக்கிட்டு தெய்வானை வந்தப்ப, கேணியடியிலே துணியைக் காட்டி பொன்னம்மாகிட்டே சொல்லி விம்மிச்சு அது. தன் மச்சான்காரரோட கடைசி ஆசையை நிறைவேற்றி வைக்கத் துடியாய்த் துடிச்சுது. நானே வந்து உங்ககிட்டே சிபாரிசு செஞ்சு, அந்தச் சோளியை சல்திியாய்த் தச்சுக் கொடுத்திடுங்க-அப்படின்னு கெஞ்ச நினைச்சிருந்தேன். அதுக்குள்ளே நீங்களே அதைத் தச்சு எடுத்து வந்தீங்க; ஒரு நாடகமும் போட்டீங்க!... பாவம், தெய்வானை! அதோட கொண்டவன் ஆசை இந்நேரம் நிறைஞ்சிருக்கும்! தெய்வானையோட மச்சான் இனி பிழைக்கிறது சந்தேகந்தானும்! தாலி அறுத்திட்டால், அவங்க குடும்ப வளமையிலே ரவிக்கையே போடறதில்லையாமே?"

பவளக்கொடி கண்ணீரை விலக்கி விட்டாள். "அத்தான், இந்தாங்க தையல்கூலி ரெண்டு ரூபா!" என்று சொல்லிப் பணத்தை நீட்டினாள்.

சின்னமுத்துவின் கைகள் நடுங்கிக் கொண்டே இருந்தன.

"சொந்தம் வேறே; தொழில் வேறே. நீங்க கூலி ஒரு ரூபாய்தான் கேட்டீங்களாம். நான் பட்டு கட் சோளிக்கு ரெண்டு ரூபாய் கூலின்னு சொல்லி, கூலியை வாங்கினேனுங்க!"

தையற்காரச் சின்னமுத்து சிலை ஆனான். 'அண்ணாச்சி!' என்று அன்று குரல் கொடுத்த அந்தத் தெய்வானையின் அந்த அன்பின் அழைப்பு அவனுடைய மனிதத் தன்மையின் மனச் சாட்சியிலே எதிரொலித்திருக்குமோ?—'ஐயையோ, தெய்வானைப் பொண்ணே!'-அவன் விம்மிக் கொண்டிருந்தான்!

# காதலைத் தேடி...!

தலைமை ஆசிரியர் ராமாமிருதமும், அவர் மனைவி நீலதயாட்சியும் வெளியூர்ப்பயணத்தை முடித்துக் கொண்டு சற்று முன்தான் திரும்பியிருந்தார்கள். வீட்டைத் திறந்த மாத்திரத்தில் அங்கே நிலவிக் கிடந்த நிர்த்தாட்சண்யமான கொடுமை மிக்க அந்தப் பயங்கர அமைதியை உணர்ந்து அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் ஏக்கமும் வேதனையும் சூழப் பார்த்துக் கொண்டார்கள். கண்ணீர்த் துளிகள் பொட்டுப் பொட்டாகச் சிதறிக் கொண்டிருந்தன!

"இந்தாப் பாரு, நாம்ப இதுவரை அழுதது போதும். இனிமேலே அழ வெண்டியது நாம்ப இல்லே!" என்றார் ராமமிருதம், கண்டிப்பான குரலில். முகம் களைத்துச் சளைத்து விட்டது. வழுக்கை விழுந்திருந்த தலையில் மிச்சம் மீதமிருந்த நரை முடிகள் முற்றத்தில் பட்டுத் தெறிந்த கதிரெளியில் பளபளத்தன.

"இந்தாப் பாருங்க! நம்ப மஞ்சு எவ்வளவு அழகாகச் சிரிச்சுக்கிட்டு இருக்கா?" என்றாள் நீலதயாட்சி. குரல் கம்மியிருந்தது. நெற்றி மேட்டில் இத்தனை சிந்தனைக் கோடுகளா?

மனைவியின் கையிலிருந்த அந்த 'என்லார்ஜ்மெண்ட் போட்டோ'வை ஏறெடுத்தும் பார்க்கவில்லை அவர்

"சிரிக்கிறவ அழாமல் தப்ப முடியாது. இது விதி!" என்றார், நிட்டுரமான குரலில்.

"ஐயையோ! அப்படிச் சொல்லதீங்க, அத்தான். அப்படிச் சாபம் கொடுக்காதீங்க! மஞ்சு, நம்ப பெண்ணு! நாம பெற்ற மகள்!"

"மஞ்சு நம்ப மகள என்கிற உண்மையை நீயோ, நானோ மறக்க முடியாதது மாதிரி, இந்த ஊர் ஜனங்களும் மறக்க முடியாது! இதை நீ மறந்திடாதே!...சரி...சரி. ஆக வேண்டியதைப் பார்! எனக்குப் பசிக்குது!" என்று சொல்லி விட்டு ஷர்ட்டைக் கழற்றிச் சோபாவில் வீசியெறிந்தார் ராமாமிருதம். சில்லறைக் காசுகள் சிந்திச் சிதறின காட்சி அவர் பார்வையில் படவில்லையோ?

அந்தக் காலனியைச் சேர்ந்தவர்கள்—அக்கம் பக்கத்துக் காரர்கள் சேதி அறிந்து ஓடோடி வந்தார்கள். தலைமை ஆசிரியர் தம்பதி, பயணம் நிறைந்து திரும்பியிருக்கிறார்கள் அல்லவா?

ஹெட்மாஸ்டர் ராமாமிருதம், தாமே முந்திக் கொண்டு அவர்களிடம் சொன்ன விஷயம் இதுதான்:

"எங்க மஞ்சுளாவையும், கி.மு. பிள்ளையாண்டான் கிட்டுவையும் என்னாலே கண்டு பிடிக்கவே முடியவில்லை. மானத்துக்குப் பயப்படாமல், பாசத்தை மதிக்காமல் ஓடிப் போன எங்க மஞ்சு, செத்துப் போய் இன்றோடு வள்ளிசாக முப்பது நாளாகுது! அன்றைக்கே நானும், என் சம்சாரமும் எங்க திட்டப் பிரகாரம் நடக்கிறத்துக்குக் குறுக்கே நீங்களெல்லாம் வராமல் இருந்திருந்தால், நாங்க ரெண்டு பேரும் செத்து, அதே முப்பது நாள் ஆகியிருக்கும்!...ஆல்ரைட்! நீங்க...போகலாம்!"

விடிந்தால் அவர் ஸ்கூலுக்குச் சென்றாக வேண்டும். 'ஸ்டூடண்ட்ஸ் முகத்திலே நான் எப்படி விழிப்பது?' என்று தவித்தார் அவர். பள்ளிக்கூடத்தில் மாணவ-மாணவியர்

மத்தியிலும் ஆசிரிய—ஆசிரியைகள் மத்தியிலும் நிலவ வேண்டிய அற உணர்வு பற்றித் தலைமை ஆசிரியர் ராமாமிருதம் எத்தனை எத்தனையோ தரம் படித்துப் படித்துச் சொல்லி யிருக்கிறாரல்லவா?

இரவு வளர்ந்தது.

பசியும் வளர்ந்தது.

ஆனால், ராமாமிருதம் பசி இல்லை என்று சொல்லிவிட்டார். அவர் சொன்னால் சொன்னதுதான். ஆகவே, அவரது மனைவியும் சாப்பிடாமல் பின் கட்டில் படுத்துக் கொண்டாள். இந்த விவரம் அவருக்குத் தெரியும். ஆனாலும், அவர் தன்பாட்டில் பிரமை தட்டியவராகக் கூடத்து விளக்கொளியில் இறைந்து கிடந்த எஸ்.எஸ் எல்.சி. வகுப்புக்கான நூல்களையே இமைக்காமல் பார்த்தவாறு இருந்தார். வழக்கம் போல இந்த வருஷமும் நல்ல ரிசல்ட் பெற்றாக வேண்டும் என்று வைராக்கியமாகக் கனவு கண்டவர், எச். எம். ராமாமிருதம். இந்தச் சமயத்தில்தானா அந்தச் சோதனை விதியாக முளைத்துத் தொலைக்கவேண்டும்?..

அவர் மெள்ள எழுந்தார். கீழண்டைச் சுவரை நெருங்கினார். அந்த இடத்தை வெறிக்கப் பார்த்தார். எங்கே அந்தப் போட்டோ?...அவருக்குத் 'திக்'கென்றது. ஊர் திரும்பியவுடன் நீலா, அந்தப் படத்தைக் காட்டி என்னென்னவோ சொல்லவில்லையா? காலில் என்னவோ இடறியது. குனிந்தார். தலை குனிந்தார். மஞ்சுளாவின் படம் தரையில் உடைந்து கிடந்தது.—'ம...ஞ்...!'—வெளிறிய உதடுகள் துடித்தன.—பித்து!

வாசலில் நாய்கள் குரைத்தன.

"ஸார்...ஸார்" என்று பள்ளி நேரங்களிலும், பள்ளி முடிந்த பின் 'ட்யூஷன்' படித்த சமயங்களிலும் என்னை வளைய வளையச் சுற்றி வந்த அந்தக் கிட்டுவா இப்போது என் மானத்தையும் கவுரவத்தையும் நடுச் சந்தியில் சிரிக்க

வைத்துவிட்டுப் போய்விட்டான்?... 'ராஸ்கல்! ''— அவருடைய பற்கள் 'நறநற'வென்று ஓசை செய்தன. ''பத்தடி தொலைவில் என்னைப் பார்த்தால்கூட, மட்டு மரியாதையோடு அஞ்சியொடுங்கி நடந்து வந்த கிராம முன்சீஃப் மகன் கிட்டுவா என் மகள் மஞ்சுவைக் கடத்திக்கொண்டு கண் காணுமல் ஓடிவிட்டான்?— 'ராஸ்கல்!''— அவர் வாய் விட்டுச் சீறினர்.

குற்றவாளிகள் இருவர்.

ஒருவன்: கிட்டு.

ஒருத்தி: மஞ்சுளா.

குற்றவாளிகள் இருவரில், கிட்டுவை மட்டும்தான் ராமாமிருதம் நிந்தித்தாரா, என்ன? ஊஹூம்! 'என் மகள் மஞ்சு, பாவி!... கிட்டு கூப்பிட்டான் என்றுலும் கூட, மானம் உள்ள பெண்ணுக இருந்திருந்தால், எப்படி அவனேடு ஓட மனம் துணிவாள்?' என்று ஆயிரம் முறை கதறிக் கதறி அழவில்லையா?

இந்த ஏப்ரலில் கோடை விடுமுறையோடு ஹெட் மாஸ்டர் ராமாமிருதத்தின் பதவிக் காலம் சரி. அப்புறம், அவர் 'ரிடையர்' ஆகிவிடுவார்.

அன்று, ஓட்டமாக ஓடி வந்தான் கிட்டு: ''ஸார்...ஸார்! நீங்க ரிடையர் ஆகப் போறேளாமே! ஸார், உங்களையும் அம்மாவையும் மஞ்சுவையும் தினம் ஆயிரம் வாட்டி பார்த்துண்டிருந்த நான், உங்களையெல்லாம் பிரிஞ்சு எப்படி ஸார் இனி இருக்கப் போறேன்?'' என்று உருகிக் கரைந்தான்.

''நான் ரிடையர் ஆனல் என்னப்பா, கிட்டு? பூவை மாநகரிலேயிருந்து தஞ்சாவூர் ஒன்றும் அதிக தூரம் இல்லையேப்பா! நீ நினைக்கிறப்போ வந்து எங்களையெல்லாம் பார்த்திட்டுப் போயேன்!'' என்று அவர் ஆறுதல் சொன்னர்.

"நம்ம கிட்டு மாதிரி பாசமும் அன்பும் கொண்ட ஒரு பிள்ளையை நான் கண்டதே இல்லீங்க!"... என்று 'சர்டிபிகேட்' கொடுத்தாள் திருமதி ராமாமிருதம்.

"ஆமாம்!" என்று ஆமோதித்து, அங்கீகாரம் கொடுத்தாள் மஞ்சுளா!

ஆனால், நடந்தது?...

"எச்.எம். ஸார்! என்னோட மகனும் உங்க பெண்ணும் நம்ம ரெண்டு குடும்பத்துக்கும் தெரியாமல் இப்படி ஓடிப் போயிட்டதிலே, பாதிக்கப்பட்டவா நாம ரெண்டு பேர் என்றாலும் கூட, என்னைப் பார்க்கிலும், அதிகப்படியானமான நஷ்டத்துக்கு உடந்தையானது நீங்கதான், ஸார்! சமுதாயத்திலே ஒரு அந்தஸ்து வகிக்கிறவா நீங்க என்கிற காரணம் ஒருபுறம் இருக்கட்டும். ஆனா, ஒரு பெண்ணைப் பெற்ற தகப்பன் நீங்க. அதுதான் முக்கியம். தமிழ்ச் சமுதாயத்திலே பெண்ணாய்ப் பிறந்தவளுக்கு உண்டான கட்டுத்திட்டம் ஜாஸ்தியாகவும் சுதந்திரம் குறைச்சலாகவும் விதிக்கப்பட்டிருக்கிறதே, ஸார்?...சட்டப்படி பார்த்தால், உங்க டாட்டரும் என் ஸன்னும் சரிசமமான குற்றவாளிங்க என்றாலும், நடைமுறை வாழ்க்கையிலே என்னைவிட உபரியானமான நஷ்டத்துக்கு இலக்கானவங்க நீங்கதான், ஹெட் மாஸ்டர் ஸார்!...இதுக்கு எப்படி நான் ஈடு கட்டப் போறேனோ, புரியவே இல்லீங்க, ராமாமிர்தம் ஸார்!" என்று சின்னக் குழந்தை மாதிரி விக்கிவிக்கி அழுதார் கி.மு.

ராமாமிர்தம் வழிந்த கண்ணீரை வழித்து விடக் கூட நினைவின்றி, பைத்தியம் பிடிக்காத பாவமாக உட்கார்ந்து விட்டார், பாவம்!

"பெற்றவங்களைத் துச்சமாக மதிச்சு, பெற்றவங்க கண்களிலே மண்ணைத் தூவி நடுச்சந்தியிலே சிரிக்க வச்சிட்டு ஓடிப் போயிட்ட அவங்க ரெண்டு பேரையும், டில்லியிலே இருந்தாலும் எப்படியும் கண்டு பிடிக்காமல் திரும்பற

தில்லே!" என்ற வீராப்புடன் ராமாமிருதம், ஸ்கூலுக்கு லீவு போட்டுவிட்டுப் புறப்பட்டார். கூட, அவர் மனைவியும் துணை போனாள். அம்மாதிரியே மணியக்காரரும், அவர் சகதர்மிணியும் புறப்பட்டார்கள்.

இரு குடும்பங்களும் வீசின கையும் வெறுங் கையுமாகத் திரும்பினதுதான் மிச்சம்.

"ஓடிப்போனவங்க என்ன ஆனாங்களோ? எங்கே ஒளிஞ்சிட்டு இருக்காங்களோ?" என்று ஒரு பாட்டம் திரும்பவும் அழலானாள் நீலதயாட்சி.—காளி ஆத்தா!...

ராமாமிருதத்தின் நீர்த்திரையிட்ட பார்வையில் அந்தப் பாடம்—பள்ளிப்பாடம்—விதியாகப் பட்டு, வினையாகச் சிரித்தது.

அந்தப் பாடம் என்ன, தெரியுமோ?

—'களவொழுக்கம்!'

இருந்திருந்தாற் போலே, தெரு நாய்கள் குரைக்கத் தலைப்பட்டன.

"ஐயா!"

வேண்டா வெறுப்புடன் தலையை வெளியே நீட்டினார் ராமாமிருதம்.

"ஐயா, நம்ப மணியக்காரரும், அவர் சம்சாரமும் பூச்சி மருந்தைச் சாப்பிட்டு உயிரை விடப் போயிட்டாங்க. நல்ல காலம், ஐயரோட வேலைக்காரப் பயல் துப்புக் கண்டு அந்த ரெண்டு லோட்டாவையும் தட்டி எறிஞ்சிட்டானாம்!"

'ஐயையோ!' என்று பதறித் துடித்தவராக, டார்ச் லைட்டும் கையுமாகப் புறப்பட்டார் ராமாமிர்தம்.

"என்ன காரியம் செய்யத் துணிஞ்சிட்டீங்க நீங்க ரெண்டு பேரும்?" என்று வருந்தினார் ராமாமிருதம்.

"நீங்க ரெண்டு பேரும் செய்யத் துணிஞ்ச அதே காரி யத்தைத்தான் நாங்களும் செஞ்சுடத் துணிஞ்சோம். அதுக் கும் கூட பிராப்தம் இல்லாமல் போயிடுத்து!"

"பிள்ளைகள், பெற்றவர்களை வாழவைக்கும்; வாழ வைக்க வேணும் என்கிறது விதி!"

"ஆமு, நம்ப குழந்தைங்க நம்பளை வாழவைக்கத்தான் முடியலே, சாகவாவது விட்டுடக் கூடாதோ, பிள்ளைவாள்?"

ஹெட்மாஸ்டர் பெருமூச்செறிந்தார்: "ஐயர்வாள்! கொஞ்ச முன்னுடி பிராப்தம் என்கிறதாகச் சொன்னீங்களே, அந்தப் பிராப்தம் நம்ப குழந்தைங்க விஷயத்திலே செண்ட் பர்சண்ட் உண்மையாக ஆயிருச்சுங்க. விட்ட குறை—தொட்டகுறை இல்லாமல், என் பொண்ணும், உங்க பிள்ளையும் புருஷன்—மனைவியாக ஆகியிருக்கவே முடியா துங்க. இந்தத் துப்பு இப்பத்தான் எனக்குப் புரியுது. இனி, எப்பாடுபட்டானும், எப்படியாச்சும் அவங்க ரெண்டுபேரை யும் கண்டு பிடிச்சு, அவங்க ரெண்டு பேரையும் ஆசீர்வதிக்க வேண்டியதுதான் நம்ப கடமை! அதுக்காகத்தானே என் னவோ, நாமும் எமனை ஏமாத்திட்டு, தப்பிச்சிருக் கோம்!" என்றார். முப்பது நாட்களுக்கப்புறம் இப்போது தான் அவர் சிரிக்கிறார்.

மணியக்காரருக்கு வாயெல்லாம் பல்—மிச்சம் இருந்த வரை தான்!

"நன்னுச் சொன்னேள், ஸார்! நேக்கும் அந்த ஆசை தோணித்து சத்தமுந்தி! வாய்விட்டுச் சொன்னு, நீங்க என் பேர்லே கோபிச்சுப்பேளோன்னு பயப்பட்டுண்டிருந்தேன். நல்ல வேளை, நீங்களே முந்திட்டேள்! நம்ப ரெண்டு பேரை யும் சம்பந்திங்களாக்கிட்டுதுங்க நம்ப குழந்தைங்க! அவா ரெண்டு பேரையும் மனப்பூர்வமா ஆசீர்வாதம் பண்ண நாம்ப ரெண்டுபேரும் காத்துத் தவம் இருப்பதாக ஒரு விளம் பரம் பத்திரிகைகளிலே கொடுத்துடுவம். உடனே அவா